விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 14 திங்கட்கிழமை (29.12.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 010

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# மைத்திரிக்கு ஆதரவு?

## தமிழ்க் கூட்டமைப்பின் அறிவிப்பு நாளை

(கொழும்பு)

*நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கும் முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துள்ளதாக நம்பகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன. நேற்றிரவு கொழும்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போது இம் முடிவு எடுக்கப்பட்டதாகவும் நாளை இது அறிவிக்கப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது.*

23ஆம் பக்கம் பார்க்க....

## பொது எதிரணியினர் நாளை யாழ்.விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் நாடு முழுவதும் சூடு பிடித்திருக்கும் நிலையில் எதிரணிக் குழுவினர் நாளை வடக்கிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக உத்தியோகபூர்வ அறிவித்தலை பொது எதிரணி விடுத்துள்ளது.

தேர்தலுக்கான பிரசாரப் பணிகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி எதிர்வரும் 2-ம் திகதி வட மாகாணத்திற்கு வருகைதரவுள்ள நிலையில், பொது எதிரணியினர் நாளை 30-ம் திகதி வடக்கிற்கு

23ஆம் பக்கம் பார்க்க....

## பிரதியமைச்சர் கைதானார்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன கலந்துக்கொள்ளவிருந்த கூட்டமொன்றுக்காக அமைக்கப்பட்டிருந்த மேடையொன்றுக்கு சேதம் ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்த பிரதியமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம கட்டுநாயக்க விமானநிலையத்தில் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நிஷாந்த முத்துஹெட்டிகம எதிரணியின் பிரசார மேடையை சேதப்படுத்தியதாக குற்றம்சாட்டப்படுகின்றது

நீர்கொழும்பு மாஜிஸ்ட்ரேட் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்

23ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தலுக்கு இடையூறு இல்லை

(கொழும்பு)

நாட்டில் நிலவும் அசாதாரண காலநிலை காரணமாக எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை இடையூறுகள் ஏற்படவில்லை என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அனர்த்தங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்

23ஆம் பக்கம் பார்க்க....

## நாட்டை பிளவுபடுத்தும் சக்திகளுடன் மு.கா இணைவு

### அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ நாட்டை பிளவுபடுத்த முயலும் சக்திகளுடன் இணைந்து கொண்டுள்ளதாக அரசாங்கம் குற்றம்சாட்டியுள்ளது. அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு என தனியான ஒரு நிர்வாக அலகொன்றை வழங்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்ததன் காரணமாகவே முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து விலகியதாக அவர் தெரிவித்துள்ளார்.

இன அடிப்படையிலான தனி நிர்வாக அலகொன்றை அரசு ஏற்றுக்

23ஆம் பக்கம் பார்க்க....

## காங்கேசன்துறைக்கு சென்றது யாழ்தேவி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய புகையிரத நிலையத்திலிருந்து காங்கேசன் துறையை நோக்கி யாழ்தேவி, நேற்று ஞாயிற்றுக்கிழமை தனது

24ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு நோக்கி தாழமுக்கம்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் அசாதாரண காலநிலைக்கு காரணமான, குறைந்த தாழமுக்க நிலை தொடர்ந்தும் கிழக்கு கடற்பிராந்தியத்தில் நிலைகொண்டிருப்பதாக காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

தாழமுக்க நிலை கிழக்கு உட்பட தீவின் ஏனைய பிரதேசங்களின் காலநிலையில் மாற்றத்தை ஏற்படுத்திய வண்ணம் வடக்கு நோக்கி நகர்வதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதன்காரணமாக இரவு நேரத்தில் நாட்டில் பல பாகங்களில் இடி

23ஆம் பக்கம் பார்க்க....

## மாயம்





ஏர் ஏசியா விமானம் ஒன்று இந்தோனேசியாவின் சுரபயா நகரிலிருந்து புறப்பட்ட பின்னர் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அமைப்புடன் தொடர்பை இழந்த நிலையில், அதனைத் தேடும் முயற்சிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

சிங்கப்பூருக்குச் சென்று கொண்டிருந்த இந்த விமானத்தில் 162 பயணிகள் இருந்தனர்.

இந்த விமானம் காளிமாண்

23ஆம் பக்கம் பார்க்க....

## விலகியது மு.கா மைத்திரிக்கு ஆதரவு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்க சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் இதுவரை அங்கம் வகித்த இக்கட்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை தனது முடிவை அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இந்த முடிவை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இதன்போது, தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்வதற்கான இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியின் செயலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாக ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## ஏற்பாட்டாளர்கள் மீது மட்டு.வில் தாக்குதல்!

### இருவர் காயம்; ஒருவரை காணவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடி, உப்போடையில் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் இருவர் காயமடைந்துள்ளதோடு ஒருவர் காணாமல்போயுள்ளதாக எதிரணியினர் கூறுகின்றனர்.

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தேர்தல் பிரசாரத்திற்காக இன்று திங்கட்கிழமை

23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து சபரிமலை
அகில இலங்கை யாழ்.கோண்டாவில்
# சபரீச ஐயப்ப தேவஸ்தானம்





வருடாந்திர மகரஜோதி மண்டல விரத மகர
29.12.2014 இன்று திங்கட்கிழமை
மாலை 06.00 மணியளவில்
தென் இந்திய பக்திபாடகர்
ஸ்ரீ குருமண்டலம் **வீரமணிதாசன்** குழுவினரின்
அருள் இசை நடைபெறும்

அனைத்து ஐயப்ப பக்தர்களும் பொதுமக்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

தொ.பே : 021 222 7688, 0777110629 இங்ஙனம் : தேவஸ்தானம்

(8887)

**சுவிஸ்ஸோ** வாஸ்து சாஸ்திர கட்டிடகலை
**Building Design & Architectural**
44/1 சிறாம்பியடி, யாழ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 0212228525, 0777917579 E-mail : swisso@sltnet.lk
E-mail : tkirushnamurthy@gmail.com Web : swisso.weebly.com
SWISSO

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
## பொன். தெய்வேந்திரம்

தோற்றம் : 20.03.1938 • மறைவு : 29.12.2013



எமது சங்கப் புரவலரும் உரும்பராய் கருணை இல்ல நிறுவுநரும் இலண்டன் தமிழ் அநாதைகள் நிதியத் தலைவருமாகிய அமரர் பொன். தெய்வேந்திரம் அவர்களை நினைவு கூருகிறோம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

பணிப்பாளர்கள்,
இல்லப்பிள்ளைகள்,
பணியாளர்கள்.

(சி-9646)

# பதுளைக்குச் சென்று நேற்று மக்களை சந்தித்தார் ஜனாதிபதி

(கொழும்பு)

பதுளை மாவட்டத்தில் சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று சந்தித்தார்.

நேற்று முற்பகல் நடைபெறவிருந்த சில தேர்தல் பிரசாரக் கூட்டங்களை இரத்து செய்துவிட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சீரற்ற வானிலையினால் பாதிக்கப்பட்டுள்ள பதுளை மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டு மக்களின் நிலைமைகளை ஆராய்ந்துள்ளார்.

பதுளை ரில்பொல, மெதகம, மொரகொல்லவத்த பிரதேசங்களில் மண் சரிவு ஏற்பட்ட பிரதேசங்களுக்கு ஜனாதிபதி நேரில் சென்று பார்வையிட்டார்.

பின்னர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கியுள்ள வெலிகேமுல்ல மகா வித்தியாலத்திற்குச் சென்ற ஜனாதிபதி மக்களின் துயரங்களைக் கேட்டறிந்து கொண்டார்.

மண் சரிவினால் சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக பதுளை மாவட்டத்தில் பாதுகாப்பான இடங்களை அடையாளம் கண்டு அவற்றில் வீடுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி இதன்போது ஆலோசனை வழங்கியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான துரித நிவாரண உதவிகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அழிவடைந்துள்ள வயல்நிலங்களுக்கான இழப்பீடுகளை வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (எ)

# பெறுபேறு மீளாய்வு விண்ணப்பம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான மீளாய்வு விண்ணப்பங்கள் பெறுபேறு ஆவணங்களுடன் அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தனியார் பரீட்சார்த்திகளுக்கான மாதிரி விண்ணப்பங்களை எதிர்காலத்தில் அச்சு ஊடகங்களில் பிரசுரிக்கவுள்ளதாகவும் திணைக்களம் அறிவித்துள்ளர்.

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று முன்தினம் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (எ)

# கடையில் திருட்டு

(கரணவாய்)

நெல்லியடி பகுதியிலுள்ள விற்பனை நிலையமொன்றிலிருந்து 5 லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு நெல்லியடியிலுள்ள யமுனா ஸ்ரோர்ஸ் மொத்த விற்பனை நிலையத்திலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் அன்று இரவுவேளை கடும் மழை பெய்து கொண்டிருந்த சமயம் குறித்த கடையின் முன்பக்க மற்றும் பின்பக்க கதவுகளை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் பால்மா வகைகள் உட்பட சுமார் 5 லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுத் தொடர்பாக உரிமையாளரினால் நெல்லியடி பொலிஸ்நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (எ-60)

# கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(கண்டாவளை)

தர்மபுரம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இப்பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தரான மோகன் கேதீஸ்வரன் (வயது-38) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப நபர் மூன்று நாட்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த நிலையில், அவரது வீட்டின் அருகில் உள்ள கிணற்றிலிருந்து அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

சம்பவம் குறித்து கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-263)

அறிவுப் பொருளாதாரத்திற்கு ஏற்ற ஆங்கில அறிவுடைய மாணவ சமுதாயத்தை உருவாக்குவோம்

**BUTTERFLY INTERNATIONAL SCHOOL**
T.C. LANE CHANKANAI

**BLOOMING BUDS DAY CARE CENTRE**
KEERIMALAI ROAD PANDATERUPPU

**T.P: 0772436737, 0778907229**

✦ BLOOMING BUDS DAY CARE CENTER இன் 2ஆவது வளாகம் பண்டத்தரிப்பில் 05.01.2015 அன்று ஆரம்பம்

**ENGLISH MEDIUM PRE SCHOOL & DAY CARE CENTRE**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தரம் வாய்ந்த முன்னணி ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலைகளான Butterfly International School, Blooming Buds Day Care Centre ஆகியவற்றிற்கான 2015 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வயது - 2+ PLAY GROUP | வயது - 3+ MONTESSORI | வயது - 4+ PRE SCHOOL

✦ சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட குழந்தைக் கல்விச் சிந்தனையாளர்களான Dr.Maria Montessori, Jean Jacques Rousseau, F.W.Froebel ஆகியோரது கற்பித்தல் முறைகள், கற்பித்தல் சாதனப்பயன்பாடு உள்ளக, வெளியக விளையாட்டுக்கள் அனுபவமும் அர்ப்பணிப்பும் கூடிய ஆசிரியர்களிலான கற்கைநெறிகள்.

✦ பாடவிதான, இணைப்பாடவிதான செயற்பாடுகள் தொடர்பாக ஒவ்வொரு மாதமும் நடத்தப்படுகின்ற போட்டிகளில் சகல மாணவர்களும் பங்குபற்றுவர். திறமை அடிப்படையில் பரிசில்கள் வழங்கப்படும்.

✦ சிறார்களின் திறமைகளை வெளிக்கொணரும் நிகழ்ச்சிகளில் சகல மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

✦ ஒவ்வொரு தவணையும் மிகவும் பிரமாண்டமாக நடைபெறும் நிகழ்வுகள் Sports Festival, English Concert, முத்தமிழ் விழா, சித்திரக் கைவேலைக்கண்காட்சி Christmas Carols, Graduation Ceremony.

**அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை இன்றே முந்துங்கள்**

✦ புதிய வகுப்புக்கள் அனைத்தும் 05.01.2015 திங்கட்கிழமை ஆரம்பமாகும். அதற்கான அனுமதிகளை 29.12.2014 திங்கட்கிழமையில் இருந்து பாடசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

✦ Elocution Class புதிய பிரிவு 10.01.2015 அன்று ஆரம்பம் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும். **T.P: 0774308996**

(சி-9650) - பணிப்பாளர்

**பொருளியற் கல்லூரி**

நாவலர் றோட், யாழ்ப்பாணம். | கே.கே.எஸ்.றோட், இணுவில்.

இரு இடத்திலும்
**யாழ்.முன்னணி**
**ஆசிரிய குழுவினால்**
**A/L 2017**
**கலை → வர்த்தகம்**
**தொழில்நுட்பம்**
(ஜனவரி 02 வெள்ளி 8.00 AM)
உங்கள் அனுமதிகளை இன்றே பெற்றுக் கொள்ளவும்

(C-9593)

Note:
- எமது மற்றைய நிறுவனமான **BARATHY** சித்தன்கேணியிலும் இதே திகதியில் ஆரம்பமாகின்றது.
- **A/L DAY CLASS** ஜனவரி 05 எமது மூன்று நிறுவனத்திலும் ஆரம்பமாகின்றது.

**ஆசிரியர் தேவை**

வடமராட்சியில் இயங்கும் பிரபல கல்வி நிலையத்துக்கு 3ம், 4ம், 5ம் வகுப்புகளுக்கு தமிழ், ஆங்கிலம், கிறிஸ்தவம் ஆகிய பாடங்கள் கற்பிக்க முன்அனுபவமுள்ளவர்கள் தேவை.

தொடர்பு கொள்ளவும்
**0217917791, 0770872903 நிர்வாகி**

(C-9643)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களைத் தவறான வழியில் திசைதிருப்பும் சக்திகளை அரசிலிருந்து ஓரங்கட்ட வேண்டும்

## முன்னாள் எம்.பி. குகேந்திரன் தெரிவிப்பு

உங்களது தேவைகள் எதுவோ அவை உங்களிடம் இதுவரை முழுமையாக வந்து சேரவில்லை என்பதுதான் வேதனையானவிடயம். பிறக்கவுள்ள புதுவருடத்தில் தற்போது கிடைத்து வருகின்ற வசந்தங்களை தக்கவைப்பதும் கை நழுவிப் போகவிடுவதும் உங்கள் கைகளில்தான் இருக்கின்றது எனவும் மக்களை தவறான வழியில் திசை திருப்பும் சக்திகளை அரசியலிலிருந்து ஓரங்கட்ட அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளருமாகிய கே.வி.குகேந்திரன் (வி.கே. ஜெகன்) தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ரீதியில் பெண்களைத்தலைமையாக கொண்ட குடும்பங்களை உள்ளடக்கிய "அமரா" அமைப்பினரின் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முந்தினம் அதன் தலைவர் கே.றஜிதா தலைமையில் கைதடி ஸ்ரீவிநாயகர் மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாற்றங்கள் வருவதனூடாகத் தான் ஒவ்வொரு பகுதியிலும் மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. அத்தகைய மாற்றம் தமிழர் அரசியலிலும் வரவேண்டும் என்பதுதான் மக்களை நேசிக்கும் ஒவ்வொருவரினதும் எதிர்பார்ப்பாகவுள்ளது. பதவிக்காலங்களிலிருக்கும்போது வெறுமனே தேசியத்தை பேசிக்கொண்டிருந்துவிட்டு தேர்தல் காலங்களில் மக்களை தூண்டிவிட்டு மக்களை தொடர்ந்தும் அழிவுப்பாதைக்கு கொண்டுசெல்லும் கூட்டமைப்பினரின் பின்னால் இதுவரை நீங்கள் சென்றதன் விளைவுகள் தான் உங்களது வாழ்வில் வறுமையும் தீராவடுக்களும் படிந்திருக்க காரணம்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை பொறுத்தளவில் யாரையும் தீய வழியில் செல்வதற்கு வழி நடத்தியது கிடையாது. அவரை யார் எல்லாம் தேடிச் செல்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் பாகுபாடுகள் காட்டாது உதவிகளை பெற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். அதனால் தான் கடந்த காலங்களில் அவரை அழிக்க எடுத்த முயற்சிகளை எல்லாம் தாண்டி அவர் உங்கள் முன் உங்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கின்றார். தமிழ் மக்களது அபிவிருத்தியையும் அரசியல் தீர்வையும் ஒரே தட்டில் வைத்துப் பார்ப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. ஆனால் இதுவரை அவரை மக்கள் தமிழ் மக்களது தலைமையை முழுப்பலத்துடன் ஏற்று வழிநடத்த அரசியல் பலத்தை கொடுக்கவில்லை. தமிழ் மக்களது அரசியற் தலைமையை அமைச்சரது கரங்களுக்கு தமிழ் மக்கள் கொடுப்பார்களானால் நிச்சயமாக ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் விடிவு விரைவில் கிடைத்துவிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# கட்சிக்கு விரோதமாக செயற்பட்டோர் மீது மூன்று கட்டங்களாக தீவிர நடவடிக்கை

கட்சிக்கு விரோதமாக செயற் பட்டவர்களுக்கு எதிராக மூன்று கட்டங்களில் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானங்களுக்கு விரோதமான முறையில் செயற்பட்ட அனைவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் அனுரபிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் மூன்று கட்டங்களாக கட்சி தாவிய உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கடசி உறுப்புரிமையை இரத்து செய்தல் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் மற்றும் கட்சியிலிருந்து நீக்குதல் ஆகிய மூன்று கட்டங்களின் அடிப்படையில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலர் ஆளும் கட்சியை விட்டு விலகி எதிர்க்கட்சியில் இணைந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# கண்காணிப்பாளர் யாழ்.வருகை

யாழ்.மாவட்டத்தில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலை மேற்பார்வை செய்வதற்காக சர்வதேச கண்காணிப்பாளர் வருகை தந்துள்ளார். நேபாளம் நாட்டினைச் சேர்ந்த கண்காணிப்பாளர் ஒருவரே நேற்று முன்தினம் வருகைதந்து. தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார் என்று யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

எதிர்வரும் மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இதனை கண்காணிக்கும் வகையிலேயே சர்வதேச கண்காணிப்பாளர் ஒருவர் யாழ்.மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளார். (இ)


**எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து நடைபெறும்**

**மாபெரும் பொதுக்கூட்டம்**





இக்கூட்டத்தில்

- எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன
- ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான கௌரவ ரணில் விக்கிரமசிங்க
- முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க
- இவர்களுடன் ஏனைய எதிர்க்கட்சிகளின் முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பிப்பார்கள்.

இடம்: "சங்கிலியன் பூங்கா" முத்திரைச் சந்தி, நல்லூர்
காலம்: 30.12.2014 (செவ்வாய்)
நேரம்: பிற்பகல் 2.00 மணி

அன்றைய தினம் உலகப் புகழ்பெற்ற கொழும்பு "சித்தார" இசைக்குழுவின் இசை மழையில் பிரபல பாடகர்கள், பாடகிகள் கலந்து சிறப்பிக்கும் மாபெரும் இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

கூட்ட ஏற்பாட்டாளர்கள்

**மைத்திரிபால சிறிசேன X**

(E-111)



## உடனடி தொழில்வாய்ப்பு

இனிய புதுவருட வாழ்த்துக்கள். புதுவருடத்தில் உங்களது எதிர்காலத்தை நீங்கள் வெற்றிகொள்ள நாங்கள் வழிகாட்டுகின்றோம். உள்நாட்டிலே கல்வி கற்ற, அற்ற 18-50 வயது ஆண், பெண் இருபாலாருக்கும் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் உடனடிய வேலைவாய்ப்பு. பிரதான தொழிற்சாலைகளில் (ஜேம்/ டொபி/ பிஸ்கட்/ கோடியல்....) இலக்றீசன், தனியார் துறைமுகம், விமான நிலையம், வாகன சாரதிகள் உட்பட பல வேலைவாய்ப்புக்கள். விசேடம் யாழ்., கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா பிரதேசத்தவர்களுக்கு முக்கியத்துவம்.

தொடர்புக்கு:- 077 683 8231, 077 111 6770 (சி-9636)


## ஈழத்து சிதம்பர தரிசனம்

### திண்ணபுர அருளிறைவன் நம் தலைவன்

வானப் பெருவெளியில் வட்டமிடும் அண்டமெலாம்
ஊனமின்றிச் சுற்றிவர ஒருவன் இயக்குகிறான்
அந்த ஒருவன்தான் அருளிறைவன் நம் தலைவன்
சிந்தையதற் கெட்டாத புதிராய்த் திகழுபவன்
அனைத்துலக உயிர்களையும் ஆக்கி அழிக்குமவன்
தனைப்படைக்க யாருமின்றித் தானாய் விளங்குமவன்
திண்ணபுரத்தில் எழுந்தருளி திருவெம்பாவை அருளுகிறான்
எண்ணரிய தத்துவனை ஈழத்து சிதம்பரனைத் தொழவாரீர்..

(சி-961) -மதுரகவி. காரை. எம்.பி.அருளானந்தன்-

இன்று (2014.12.29) ஈழத்து சிதம்பரத்தின் திருவெம்பாவை உற்சவம் 3 ஆம் நாள்)

# இராசி பலன்

29.12.2014
(மார்கழி 14, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு
அட்டமி பிற்பகல் 3.19 மணிவரை
உத்தரட்டாதி முற்பகல் 10.42 மணிவரை
இராகுகாலம் 7.58-9.28 மணிவரை
சுபநேரம் 12.28-01.58 மணிவரை
கெர்ப்போட்ட ஆரம்பம்
அட்டமி-நவமி

வளவன்

**மேடம்:** தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், ஆடம்பரப் பொருட்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**இடபம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், உறவினர்களின் வருகையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொல்லை தந்தவர்கள் மனம் மாறி உதவ முன்வருவர், புதிய திட்டங்கள் கைகூடும் நாள்.

**கடகம்:** நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்:** உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், செய்தொழிலில் சிறப்புகள் அடைவீர்கள்.

**துலாம்:** சுப தகவல்கள் நாடி வரும் நாள், விருந்தினர் வருகையுண்டு, உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல் அகலும்.

**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, வேலைகள் [illegible]

**தனுசு:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அரசியற் செல்வாக்கு மேலோங்கும் நாள், நேர்மையும் நாணயமும் கொண்ட நண்பர்களின் நம்பிக்கைகள் நடைபெறும், கற்பனை மிகுதியான நாள்.


**மகரம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், பெண் வழி பிரச்சினைகள் சுமுகமாக முடியும், முயற்சிகள் முன்னேற்றம் தரும்.

**கும்பம்:** கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் சூழ்நிலை உருவாகும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், கோரிக்கைகள் நிறைவேறும் நாள்.

**மீனம்:** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், தேவையற்ற கற்பனைகள் மனதில் குடி கொள்ளும், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மசகு எண்ணெய் விலை 60 டொலரை விட சரிவு





2009 ஜுலை மாதத்தை தொடர்ந்து முதல் தடவையாக மசகு எண்ணெய் பீப்பா ஒன்றின் விலை 60 அமெரிக்க டொலர்களை விடச் சரிவடைந்திருந்தது. சீன தொழிற்சாலைகளின் செயற்பாடுகள் மந்த கதியில் இடம்பெறுகின்றமை மற்றும் சர்வதேச நாணய பெறுமதிகளின் மதிப்பு குறைந்தமை போன்றன மசகு எண்ணெய்க்கான சர்வதேச கேள்வியை குறைத்திருந்தன.

ஜுன் மாதம் முதல் சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை வீழ்ச்சியடைந்திருந்த நிலையில், உற்பத்தி நாடுகளின் அமைப்பான ஒபெக், விலையை அதிகரிப்பதற்காக உற்பத்தியை குறைப்பதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை.

கடந்த ஏழு மாதங்களில் முதல் தடவையாக உலகின் 2-வது மிகப் பெரிய வர்த்தக நாடாக திகழும் சீனாவின், தொழிற்சாலை செயற்பாடுகள் வீழ்ச்சியடைந்திருந்ததை தொடர்ந்து சர்வதேச எரிபொருள் விற்பனை விலையிலும் அது தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

ஜனவரி மாதத்துக்கான சீனாவுக்கான ஏற்றுமதி பீப்பா ஒன்றுக்கு 59.75 அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது. அமெரிக்காவுக்கான பெறுமதி பீப்பா ஒன்றுக்கு 54.85 அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது.

# சியெட்டின் விருது வழங்கும் விழாவில் 125 விநியோகஸ்தர்களுக்கு கௌரவம்




இலங்கையின் முன்னணி டயர் உற்பத்தி மற்றும் விற்பனையாளர்களான சியெட் அதன் 125 முன்னணி விநியோகஸ்தர்களை மலேயாவில் இடம்பெற்ற விருது வழங்கும் விழாவில் கௌரவித்துள்ளது. மலேயாவில் இடம்பெற்ற இந்தகோலாகலமான விழாவில் சியெட் விநியோகஸ்தர்கள் தமக்கே உரிய பாணியில் தமது வெற்றியைக் கொண்டாடினர்.

2014ன் சியெட் விநியோகஸ்ர்கள் ஒன்றுகூடல் மலேயாவின் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள சுவிஸ் கார்டன் ஹோட்டலில் இடம்பெற்றது. 2013-14ல் சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் 11 பில்லியன் ரூபாவை விற்பனை வருமானமாக ஈட்டி சாதனை படைத்துள்ளது. இந்த சாதனைக்கு காரணமாக இருந்த விநியோகஸ்தர்களை கௌரவிக்கும் வகையில அந்த நிறுவனம் மேற்படி விநியோகஸ்தர்களுக்காக மலேசியாவில் ஏற்பாடு செய்திருந்த 3 நாள் விஜயத்தின் ஒரு அங்கமாகவே இந்த விருது வழங்கும் விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தகோலாகல நிகழ்வில் உரையாற்றிய சியெட் களனி ஹோல்டிங்ஸ நிறுவனத் தலைவர் சானக்க டி சில்வா, உள்ளுர் சந்தையில் கம்பனி 13 வீத வளர்ச்சியைக் கண்டுள்ளது. அதற்கான ஆதரவுக்கு நன்றி உள்ளுரிலும் வெளிநாட்டு விற்பனையிலும் சியெட் களனி ஹோல்டிங்ஸ் உறுதியான வளர்ச்சியைக் கண்டு வரும் அதேவேளை புதிய நாடுகளில் புதிய சந்தைகளிலும் அது முதலீடு செய்துள்ளது. அத்தோடு தனது மாதாந்த ரேடியல் டயர் உற்பத்தியை 40000 என்ற நிலையில் இரட்டிப்பாக அதிகரித்தும் உள்ளது என்றார்.

"எமது கம்பனியின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான மூலோபாய திட்டங்களை வகுப்பதில் அதிக ஆற்றல் கொண்டவர்களாகவே எமது உள்ளக மற்றும் வெளிப் பங்காளிகள் உள்ளனர் என்பதை நாம் மிக உறுதியாக நம்புகின்றோம்" என்று அவர் மேலும் கூறினார்.




# சிரேஷ்ட பிரஜைகளுக்கு வட்டி வருமான வாய்ப்பு

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளின் வட்டி வருமானம், வருமான வரியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை 2015-ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரவுள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வரவு செலவுத் திட்ட யோசனையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய சிரேஷ்ட பிரஜைகள் அரச வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ள 2.5 மில்லியன் ரூபா வரையான நிலையான வைப்பீடுகளுக்காக மாதாந்த வட்டி வருமானமாக 25 ஆயிரம் ரூபா கிடைக்கும் வகையில் 12 வீத வட்டி ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து வழங்கப்படவுள்ளது.

இதற்கான வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக உரிய வங்கிகளுடன் தொடர்புகொண்டு வினவுமாறு தகைமையுள்ள சிரேஷ்ட பிரஜைகளிடம் நிதி அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)


| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,252.60 | 7,309.03 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,062.79 | 4,084.17 ⇧ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 8,527.545

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** மொரிசன்(X)(285.00), ரன்ஜிரின்(84.80), சம்சன் இன்ரனட்(101.60),லங்கா வென்ஜர்ஸ்(48.70),ஹனஸ் போல்ஸ்(66.50).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** சிலோன் பிறின்டர்ஸ் (1880.00), எஸ். எம்.பி. லீசிங்(X)(0.40),ஒபிஸ் ஈகுப்மன்ட்(2380.00),சிலோன் லெதர்(W)([illegible]), ஓரியன்ட் பினான்ஸ்(13.00). **மேலதிக தகவல்கள்: www.cse.lk**

# டுபாயில் மலபார்



மலபார் கோல்ட் அண்ட் டயமண்ட் ஜுவல்லரி நிறுவனம் கடந்த 20ம் திகதி டுபாயில் தெய்ரா, கோல்ட் சோக் பகுதியில் டுபாயிலேயே பிரமாண்டமாக 9,500 சதுர அடி பரப்பளவில் ஜுவல்லரி ஷோரூமை திறந்துள்ளது. இது இந்நிறுவனத்தின் 122வது ஷோரூம். இதுகுறித்து மலபார் குழும தலைவர் எம்.பி. அகமத் கூறுகையில், "பாரம்பரியம் மட்டுமின்றி, தற்காலத்துக்கு ஏற்ற நவீன வடிவ நகைகள், அந்தந்த பகுதி பண்பு நலன்கள் சார்ந்த நகை வடிவமைப்பு போன்[illegible] செய்துள்ளனர்" என்றார்.

## பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டட்

# இவ்வருட இலாபமாக ரூ.40 மில்லியன் பதிவு

பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டட், இலங்கையின் இரசாயன தொழில் துறையில் முன்னணி வகிக்கும் நிறுவனமாகும். இது 2014-ம ஆண்டில் வரிக்கு முந்திய இலாபமாக ரூ.40 மில்லியனை பதிவு செய்வதுடன் 2013-ம் ஆண்டில் ரூ 37 மில்லியனையும் 2012-ல் ரூ 32 மில்லியனையும் முறையே பதிவு செய்தது. இந் நிறுவனத்தின் செயல்திறன் கடந்த 11 மாதங்களில் நன்றாக நடைபெற்றது.

பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டட் அரசு வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் அரசுக்கு சொந்தமான இலாபம் ஈட்டும் நிறுவனம் ஆகும்.

நிறுவனத்தின் செயல்திறன் பற்றி பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டட்டின் தலைவர் கலாநிதி டி.ஜே.யு. புறசிங்க கருத்து தெரிவிக்கையில் "எங்களது ஒட்டுமொத்த செயல்திறனில் திருப்தி அடைகின்றோம். நாங்கள் திரவ குளோரினில் 95 வீத சந்தை பங்கை கொண்டுள்ளோம்." 2012-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கலாநிதி டி.ஜே.யு. புறசிங்க இந் நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டதன் பின்னர் இந்த உயர்ந்த செயல்திறனை அடைய முடிந்தது. கலாநிதி டி.ஜே.யு புறசிங்க அவர்களது வேதியியல் துறையிலான கல்விப் பின்னணியானது இந்த செயல்திறனை அடைய பங்களிப்பு செலுத்தியது.

கலாநிதி டி.ஜே.யு புறசிங்க அவர்கள் மேலும் கூறியதாவது, "நமது முற்போக்கான வணிக அணுகுமுறை மூலம் சந்தை வாய்ப்புக்களை அடைய முடிகின்றது. நாம் தொடர்ந்தும் புதிய தயாரிப்புக்களை சந்தைக்கு அறிமுகம் செய்வதன் மூலமும் உற்பத்தித் தரம் மற்றும் பாதுகாப்புத் தரத்தை உறுதிப்படுத்துவதன் மூலமும் விற்பனை வளர்ச்சினை மேம்படுத்துவோம்"

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை முதலில் கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தனில் அரசாங்க இரசாயனத் தொழிற்சாலையாக 1954-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்த தொழிற்சாலை உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி கோஸ்டிக் சோடா, குளோரின் மற்றும் ஹைட்ரோ குளோரிக் அமிலம் ஆகியவற்றை உற்பத்தி செய்தது.

எனினும் யுத்த சூழல் காரணமாக பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை 1985-ம் ஆண்டில் மூடப்பட்டது. இதன் விளைவாக காகிதம், சவர்காகர உற்பத்தி மற்றும் நீர் தூய்மைப்படுத்தும் நோக்கத்திற்காக கோஸ்டிக் சோடா மற்றும் குளோரின் ஆகியவற்றை இறக்குமதி செய்ய நேர்ந்தது. இவ் இரசாயனங்களின் இறக்குமதிக்காக அன்னியச் செலாவணி பெரிய அளவில் விரயமாகியதுடன் உள்ளூர் மூலப்பொருட்கள் மற்றும் பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் திறன்கள் ஆகியவற்றை உரிய முறையில் பயன்படுத்த முடியவில்லை.

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம் மூலம் நடத்தப்பட்ட வணிக நடவடிக்கையை தொடர்வதற்காக முழுமையாக அரசுக்கு சொந்தமான வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம் 1991-ம் ஆண்டில் மாற்றப்பட்டது. தற்போது நிறுவனத்தின் உள்ளூர் தேவையை பூர்த்தி செய்வதற்காக திரவ குளோரின், கோஸ்டிக் சோடா மற்றும் ஹைட்ரோகுளோரிக் அமிலம் ஆகியவற்றை இறக்குமதி செய்வதுடன் பிணுச்சிங் (வெளுக்கும்) திரவத்தையும் உற்பத்தி செய்கின்றது.

போர் முடிவுக்கு வந்த பின்னர். பரந்தனில் அமைந்துள்ள பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைய மீண்டும் உருவாக்குவதற்கு தேவையேற்பட்டது. இதன்படி தொழிற்சாலையை மீண்டும் நிறுவ அடிப்படைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பரந்தன் இரசாயன தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதன் மூலம் வட மாகாண மக்கள் பிரதானமாக பயன்பெறுவர்.

ஹொரணையில் இயக்கப்படும் திரவ குளோரின் மீள் நிரப்பும் அலகு தற்போது ஹொரணை வகவத்தையில் அமைக்கப்படும் நவீன ஆலைக்கு மாற்றப்படும். இந்த திவர குளோரின் மீள் நிரப்பும் ஆலை கட்டுமான பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது. இந்த ஆலை உயர்ந்த தரம் மற்றும் பாதுகாப்பு தரத்தை பெற்றிருப்பதுடன் 2015-ம் ஆண்டின் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் திறந்துவைக்க எதிர்பார்க்கப்படுகிறது.

இந் நிறுவனம் புத்தளம் மாவட்டத்தில் 120 மெட்ரிக் தொன் மாத உற்பத்தித் திறன் கொண்ட பிணுச்சிங் பவுடர் உற்பத்தி ஆலையை நிறுவுதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறது. உள்ளூர் தேவையை பூர்த்து செய்ய 4500 மெட்ரிக் தொன் மாத உற்பத்தித்திறன் கொண்ட கந்தக அமிலம் உற்பத்தி செய்வதற்கான ஆலையையும் நிறுவுவதற்கான திட்டம் ஒன்று முன்மொழியப்பட்டுள்ளது.இந்த தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலம், நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புக்களை உருவாக்க முடிவதுடன் இந்த இரசாயனங்களின் இறக்குமதிக்காக செலவு செய்யப்படும் அந்நிய செலாவணியை காப்பாற்ற முடியும்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 130.38 | 133.19 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 202.23 | 208.01 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 158.38 | 163.58 |
| சுவிஸ் பிராங் | 131.60 | 136.37 |
| கனேடிய டொலர் | 111.58 | 115.32 |
| அவுஸ்திரேலிய டொலர் | 104.90 | 109.07 |
| சிங்கப்பூர் டொலர் | 98.13 | 101.31 |
| ஜப்பான் யென் | 1.07 | 1.11 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.06 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.66 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவினால் மக்களை ஒன்றிணைத்து ஐக்கியத்தை ஏற்படுத்த முடியவில்லை

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளுக்கு எதிராக போர் 2009 ஆம் ஆண்டு முடிவிற்கு கொண்டு வரப்பட்ட போதும் இதுவரை மகிந்த அரசினால் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை ஒன்றிணைத்து ஐக்கியம் ஏற்படுத்த முடியவில்லை என ஐ.தே. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் இரவு கல்முனை சந்தாங்கேனி மைதானத்தில் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார்.

இந்நிகழ்விற்கு ஐ.தே. கட்சியின் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அம்பாறை மாவட்ட ஐ.தே.கட்சியின் அமைப்பாளரும், கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான தயாகமகே, பாராளுமன்ற உறுப்பினர் அனோமா தயாகமகே மற்றும் அம்பாறை மாவட்ட அனைத்து தொகுதிகளினதும் அமைப்பாளர்கள் மற்றும் ஏனைய கட்சிகளின் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் மகிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களித்து ஜனாதிபதியாக்கியதன் உண்மையான நோக்கம் அனைத்து இனங்களும் ஐக்கியத்துடன் வாழவேண்டும் என்பதற்காகவே. ஆனால் இன்று அது நடைபெறாமல் முற்றிலும் மாறுபட்டே சென்று கொண்டிருக்கின்றது.

அவர் இதற்காக வேண்டி எல். எல்.ஆர்.சீ ஆணைக்குழுவை ஏற்படுத்தி இதன் மூலம் அனைத்து மக்களுக்கும் சேவை செய்வதென்று அறிவித்திருந்தார்.

இறுதியில் ஆனது என்ன? யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வு இல்லை, இன ஐக்கியம் இல்லை, அவற்றை செய்யாமல் மகிந்த இனத்துவேசத்தினை கக்கி ஆட்சி நடத்தி வருகின்றார்.

இந்த நாட்டிலே இனங்களுக்கிடையே மதவாதத்தினை தூண்டி இனமுறுகல்களை ஏற்படுத்தி வழிபாட்டுத்தலங்களை அழித்து அவர்களுக்கு உரித்தான கலாசாரத்தினையும் அழித்து மதுபானசாலைகளையும், குடு வியாபாரத்தினையும், எதனோல், கசினோ, போன்றவைகளை ஆதரித்து மக்களை மோதவிட்டு அரசியல் நடத்தி வருகின்றார்.


இன்று அவரது தந்திரத்தை பயன்படுத்தி தெற்கிலே இனவாதத்தினை தூண்டி தேர்தலில் தான் வெற்றி பெறலாம் என்று கனவு கண்டார்.

ஆனால் நடந்தது என்ன அவருடைய கூட்டணியில் இருந்த பல கட்சிகள் பிரிந்து பொது எதிரணி வேட்பாளருக்கு ஆதரவு வழங்க முன்வந்திருக்கின்றது.

இவை தவிர தமிழ், முஸ்லிம் அமைப்புக்கள், எம்முடன் கைகோர்த்து நிற்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் பொன்னையா கனகசபாபதி



எமது கல்லூரியின் புகழ்பூத்த முன்னாள் அதிபர்
*அமரர் பொன்னையா கனகசபாபதி*
அவர்களின் மறைவுக்கு எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்குவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அனைத்து மகாஜன கல்லூரி சமூகத்தினரின் கவனத்திற்கு**
31.12.2014 (புதன்கிழமை) முற்பகல் 10.00 மணிக்கு எமது கல்லூரியில் நடைபெறவுள்ள அஞ்சலிக் கூட்டத்தில் அனைத்து ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(சி-9638)

யா/ மகாஜனக்கல்லூரி,
தெல்லிப்பழை.

மகாஜன சமூகம்.


## மொறாயஸ்



ஸ்தாபிதம் (1962) 50 வருடகால சேவையில் மொறாயஸ். உங்கள் முக அமைப்புக்கு ஏற்ப மூக்குகண்ணாடிகளை மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம் மொறாயஸ். 50 மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். பழைய வெலிங்டன் தியேட்டர் முன்பாக (முனீஸ்வரர் கபே) (லிங்கம் கூல்பார் சந்தி) நத்தார் புது வருடத்தை முன்னிட்டு இரண்டு பார்வை கண்ணாடி (Golde Frame) இல் மிகவும்குறைந்த விலையில் ரூபாய் 850 மட்டுமே.

**தொலைபேசி இல: 021 221 7514**

(C-9635)


## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலர்
திரு. சுந்தரம் டிவகலாலா
அவர்களின் அன்பு மாமியார்
**திருமதி. செல்லம்மா கணபதிப்பிள்ளை**
அவர்களின் மறைவால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆறுதல் நிறுவன உத்தியோகத்தர்கள்**
**51, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

(9640)

## மரண அறிவித்தல்

### அமரர் திருமதி செல்லம்மா கணபதிப்பிள்ளை



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வத்தளை கொழும்பை வதிவிடமாகக் கொண்டவருமான திருமதி செல்லம்மா கணபதிப்பிள்ளை அவர்கள் 25.12.2014 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரியாரியார் சின்னத்தம்பி அருணாச்சலம் மற்றும் காலஞ்சென்ற தங்கமுத்து சின்னத்தம்பி அவர்களின் புதல்வியும் முன்னாள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் காலஞ்சென்ற கதிரவேலு கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசம்மா மற்றும் அருணாச்சலம் அவர்களின் பாசமிகு சகோதரியும் சிவமலர், டிவகலாலா, அரியமலர், கனகரட்ணம், காலஞ்சென்ற புனிதமலர், இராமநாதன், குமாரநாதன், கணபதிப்பிள்ளை, கௌரிமலர், அருங்குணநாயகம், உமாப்ரேம்மோஹறன், ராஜி, கணபதிப்பிள்ளை, சூரியா வன்னியநாதன், மஹேஸ்வரநாதன் , கணபதிப்பிள்ளை மற்றும் மேகலா திலீபன் அவர்களின் அன்புத் தாயாரும் ஆவார்.

அருமை அன்னையாக, அன்பு மாமியாராக, சிறந்த அம்மம்மாவாக , பாசமிகு பூட்டியாகவும் திகழ்ந்தார். அன்னாரது இறுதிக் கிரியைகள் 30.12.2014 நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் நீர்கொழும்பு வீதி, வத்தளை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, கெரவலப்பிற்றி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**சுந்தரம் டிவகலாலா (மருமகன்),**
**இல. 35, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.**

(9640)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 18 செவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSC, MSC (சிங்கப்பூர்)<br>தொ.இ: B/3929 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 32<br>உயரம்: 5'4" cm<br>தகைமை/தொழில்: HNDA/ அரச தொழில்<br>தொ.இ: G/3950 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 42<br>உயரம்: 180cm<br>தகைமை/தொழில்: BSC/ தனியார் தொழில் (லண்டன்)<br>தொ.இ: B/3931 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 78 செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: சித்த மருத்துவர்<br>தொ.இ: G/3953 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 43.25<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/ வங்கியாளர்<br>தொ.இ: B/3932 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 46 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 156cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி/அரச தொழில்<br>தொ.இ: G/3956 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 30 சூரிசெவ்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் (கனடா NOT PR)<br>தொ.இ: B/3933 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 39 செவ் 12 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSC/ பொறியியளாளர்<br>தொ.இ: G/3957 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானம் விற்ற 'புலிக்குட்டி' கைது

யாழ். கொழும்புத்துறை பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்றதாக கூறப்படும் ஒருவரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.


நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவே அவரை கைது செய்ததாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய பொலிஸார், தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து 750 மில்லிலீற்றர் மதுபானம் அடங்கிய 2 மதுபானப் போத்தல்களையும் தாம் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

புலிக்குட்டி என்று அழைக்கப்படும் சந்தேகநபர், இதுவரையில் 6 தடவைகள் இதே குற்றத்துக்காக கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் தொடர்ந்து விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும குறித்த சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற் கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக போதைப்பொருட்களுடன் பலர் கைது செய்யப்பட்டு வரும் நிலையில் குறித்த சந்தேக நபரின் கைது நடவடிக்கை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்படத்தக்கது. (இ)



# நாம் நண்பர்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் வழங்கல்



கிறிஸ்மஸ் பண்டிகையினை முன்னிட்டு நாம் நண்பர்கள் அமைப்பினூடாக இருபாலை ஆனந்தபுரம் பகுதி மாணவர்களில் ஒரு தொகுதியினரிற்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

நாம் நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் **'கல்வியில் வறுமையினை ஒழிப்போம்'** எனும் தொனிப்பொருளில் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக **"புத்தகப் பைச் சவால்"** நாம் நண்பர்கள் அமைப்பினரால் உருவாக்கப்பட்டு அதன்மூலம் கிடைக்கப்பெற்று வரும் உதவிகளினூடாக மாணவர்களுக்கான கற்றல் உபகர ணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

மாணவர்களது தேவைப்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன்படி, யாழ். இருபாலை ஆனந்தபுரம் பகுதியிலிருந்து கிடைக்கப்பெற்ற விண்ணப்பத்தின் அடிப்படையில் மாணவர்களில் ஒரு தொகுதியினருக்கு கடந்த வியாழக்கிழமை கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட 30 மாணவர்களுக்கு சுமார் இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான அனுசரணையினை புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் சண்முகநாதன் ஜீருபரன் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் இருபாலை ஆனந்தபுரம் பகுதி மாணவர்கள். பெற்றோர்கள், கிராமமட்ட தலைவர்கள் , நாம் நண்பர்கள் அமைப்பினைச் சேர்ந்த அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த மாணவர்கள் கல்வி அடைவுமட்டத்தில் காட்டும் முன்னேற்றத்திற்கேற்ப தொடர்ந்தும் கல்விக்கான உதவிகள் வழங்கபபடுமென நாம் நண்பர்கள் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (இ-23)




# குடிநீர் விநியோகத்திட்டம் மீண்டும் ஆரம்பம்

யாழ். தென்மராட்சி சரசாலை கிராமத்துக்கான குடிநீர் விநியோகத திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.சரசாலை கிராமமக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அண்மையில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் சந்தித்து தமது தேவைப்பாடுகள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

தேசிய நீர் வழங்கல் வடிகா லமைப்புச் சபை இக்கிராமத்துக்கு ஐந்து பொது நீர்விநியோக குழாய்களை அமைத்து அவற்றின் ஊடாக குடிநீரை வழங்கி வந்த நிலையில் ஒவ்வொரு குழாய்களுக்கும் தலா 500 ரூபா வீதம் மக்களால் குறித்த சபைக்கு செலுத்தி வந்தனர்.

இந்நிலையில் அப்பணத்தை மக்கள் செலுத்தாத காரணத்தினால் குடிநீர் விநியோகம் இடை நிறுத்தப்பட்டதையடுத்து மக்களால் செலுததப்பட வேண்டிய தொகையினை இரத்துச் செய்யும் அதேவேளை, குடிநீர் விநியோக மீள் இணைப்புக்கான தொகையினையும் செலுத்தாத வகையில் குறித்த கிராமத்துக்கான குடிநீர் விநியோகத் திட்டத்தை மீள ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, அமைச்சின் செயலாளர் நிஹால் சோமவீர ஊடாக கலந்துரையாடி அதற்கான அனுமதியையும் பெற்றிருந்தார்.

இதனையடுத்து குடிநீர் விநியோகத் திட்டத்தை மீளவும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையினை முன்னெடுக்குமாறு இம்மாதம் 15 ஆம் திகதி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் ஜெகதீஸிடம் பணிப்புரை விடுத்திருந்தார்.

இதற்கமைவாக இக்குடிநீர் விநியோகத்திட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முயற்சியின் பயனாக மக்களுக்குக் கிடைக்கப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து தமது கோரிக்கை தொடர்பில் உரிய கவனம் செலுத்தி துரித நடவடிக்கை எடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மக்கள் தமது நன்றி களையும் தெரிவித்துக் கொண்டனர். (இ-5)

# வேலைவாய்ப்பு வழங்கும் துறையாக கூட்டுறவு விரைவில் மறுசீரமைக்கப்படும்

## அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

மத்திய அரசின் தலையீடுகள் இல்லாமல் வேலைவாய்ப்புகளை வழங்கக்கூடிய வகையில் மாகாண அரசின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள ஒரேயொரு துறையாக இன்று வடக்கு மாகாண சபைக்கு இருப்பது கூட்டுறவுத்துறைதான். அந்த வகையில், ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் விதத்தில் கூட்டுறவுத்துறை விரைவில் மறுசீரமைக்கப்பட உள்ளது என்று வடக்கு மாகாண கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அறிவித்துள்ளார்.

கூட்டுறவு அமைச்சுக்குரிய மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபி விருத்தி நன்கொடை நிதியில் இருந்து கடற்றொழில் மற்றும் விவசாயம் தொடர்பான கூட்டுறவு அமைப்புகளுக்கு முறையே மீன்பிடி வலைகள், நீரிறைக்கும் இயந்திரங்கள் போன்றவற்றை வழங்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் சனிக்கிழமை அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்றது.

மாகாணக் கூட்டுறவு ஆணையாளர் வ.மதுமதியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டுறவுத்துறையின் பெருமகனார் வீரசிங்கத்தின் பெயரால் கம்பீரமாக ஒரு மண்டபத்தைக் கொண்ட வடக்கில் இன்று கூட்டுறவுத்துறை மிகவும் நலிவுற்ற ஒரு துறையாகப் பின்தங்கிவிட்டது. 1970களில் பண்டத்தரிப்பு கூட்டுறவு அமைப்பால் உருவாக்கப்பட்ட பன்ரெக்ஸ் என்னும் காற்சட்டைத் துணி மிகவும் பிரசித்தி பெற்றது. புடைவை உற்பத்தி, கால்நடை வளர்ப்பு என்று பல்வேறு துறைகளில் வளர்ச்சி கண்டு, ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிக்கொண்டிருந்தது கூட்டுறவுத்துறை. இன்று மற்றவர்களிடம் கடனும் நிவாரணமும் வேண்டி காத்துக் கிடக்கிறது.

கூட்டுறவின்மேல் நம்பிக்கையில்லாமல் அதிலிருந்து எமது சமூகமும் விலகிச் சென்று கொண்டிருக்கிறது. கூட்டுறவுத்துறையின் இந்தச் சரிவுக்குப் போர் மட்டுமே காரணம் அல்ல. உலக மயமாக்கலோடு வேகமாக வளர்ந்து வரும் தனியார் முதலீட்டை எதிர்கொள்ளத்தக்கவாறு கூட்டுறவு இயக்கம் வலுப்பெறவில்லை. பழைய சட்டங்களையும் யாப்பு விதிகளையும் கொண்டே கூட்டுறவு அமைப்புகள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவற்றில் உள்ள நெளிவுசுழிவுகள் நிர்வாகச் சீர்கேட்டுக்கும், ஊழலுக்கும், பொறுப்புக் கூறலின்மைக்கும் காரணமாக அமைந்து வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்களைக் குத்தகைக்கு எடுத்தது போன்று ஒருவரே பல வருடங்களுக்கு பதவியில் நீடிக்கும் பரிதாபம் இந்தத் துறையில் மட்டும்தான் உள்ளது.

அரசியல் கட்சிகளும் தங்களுக்கான வாக்குகளின் கூடாரமாகக் கூட்டுறவையே பயன்படுத்த நினைக்கின்றன. இந்நிலை மாற்றப்பட்டு, மக்களுக்கான இயக்கமாகக் கூட்டுறவுத்துறை மாற்றம் பெறவேண்டும். இந்த நோக்கத்தில் எமது முதல்வர் கூட்டுறவுத்து றையை மேம்படுத்துவது தொடர்பான ஆய்வு ஒன்றைச் செய்வதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

இதன் முடிவுகள் இப் போது எனக்குத் தரப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டும் கூட்டுறவுத்துறை வல்லுநர்களின் அபிப்பிராயங்களைக் கொண்டும் வடக்கின் கூட்டுறவுத்துறை மீண்டும் மிடுக்கோடு நிமிர விரைவில் ஆவன செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-5)

# வயோதிபரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

வயோதிபர் ஒருவர் கிணற்றினுள் விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கச்சாய் வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த சுந்தையாநவரட்ணம்(வயது76) என்பவரே இவ்வாறு நேற்று உயிரிழந்துள்ளார்.

6 பிள்ளைகளின் தந்தையான இவரைக் காணாது தேடியபொழுது கிணற்றினுள் இறந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டதாகவும் சம்பவம் குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சடலம் பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப் பட்டதாகவும் தெரியவருகின்றது.

இவர் கச்சாய் வடக்கு ஒட்டங்கேணி பிள்ளையார் பரிபாலனசபைத் தலைவர் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களில் சிறார்களைப் பயன்படுத்தத் தடை!

(கொழும்பு)

**ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் சிறார்கள் பயன்படுத்தப்படுவதை தடை செய்யுமாறு தேர்தல்கள் ஆணையாளரிடம் முறையிடப்பட்டுள்ளது.**

நல்லாட்சிக்கான சட்டத்தரணிகள் சங்கம் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளது.

தேர்தல் பிரசார கூட்டங்களில் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் உருவப் படங்களை ஏந்துவதற்கும் கொடிகளை அசைப்பதற்கும் சிறார்கள் பயன்படுத்தப்பட்ட பல சந்தர்ப்பங்கள் ஊடகங்களில் காண்பிக்கப்பட்டன.

சிறார்கள் தொடர்பான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதாக பல்வேறு சர்வதேச உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ள இலங்கை அரசு, சிறார்களின் உரிமைகளைக் காப்பதற்கு கடமைப்பட்டுள்ளதாக நல்லாட்சிக்கான சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சேனக டி சில்வா தெரிவித்தார்.

இந்த சட்டவிதிமுறைகளுக்கு அமைய சிறார்களை தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் பயன்படுத்த முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

தற்போது ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் பெருமளவிலான சிறார்கள் பயன்படுத்தப்படுவதை ஊடகங்களில் காணமுடிவதாகவும் சட்டத்தரணி சேனக டி சில்வா தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரங்களில் சிறார்கள் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தேர்தல்கள் ஆணையாளரை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சிறார்கள் தொடர்பான புகார்களை ஆராய்வதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கு அதிகாரங்கள் உள்ளனவா? என்று கேட்டபோது, "ஜனாதிபதி தேர்தல்கள் தொடர்பான சட்ட விதிமுறைகளுக்கு அமைவாக இவ்வாறான சட்ட விரோத செயல்களைத் தடுக்கும் அதிகாரங்கள் தேர்தல்கள் ஆணையாளருக்கு உள்ளதாக சேனக டி சிலவா மேலும் தெரிவித்தார். (இ-5)

## ஐ.தே.க. தொகுதி அமைப்பாளர்களுக்கு தேர்தல் பிரசார நிதியாக தலா 10 இலட்சம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுக்கு தலா பத்து இலட்சம் ரூபா தேர்தல் பிரசார நிதி வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பிரசாரத்தில் ஈடுபடுவதற்காக இவ்வாறு நிதி வழங்கப்படவுள்ளது. ஏற்கனவே சில தொகுதி அமைப்பாளர்களுக்கு இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் ஏனைய தொகுதி அமைப்பாளர்களுக்கும் பணம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 170 தொகுதி அமைப்பாளர்களுக்கு தலா 10 இலட்சம் ரூபா நிதி வழங்கப்படவுள்ளது.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை வெற்றியீட்டச் செய்ய வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்ய ஐக்கிய தேசியக் கட்சி தீர்மா

## மகிந்த ஆட்சியில் புத்திஜீவிகளுக்கு இடமில்லையாம்

புத்திஜீவிகளுக்கும் படித்தவர்களுக்கும் மகிந்த ஆட்சியில் இடமளிக்கப்படவில்லை எனவும் ஒனறு சேர்வதன் மூலம் எந்தவொரு சவாலையும் வெற்றி கொள்ள முடியும் என்றும், எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இளம் தொழிற்றுறையினருடனான சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்தார்.தற்போதைய அரசாங்கத்தின் கீழ் கல்வி கற்றவர்களுக்கும், புத்திசாலிகளுக்கும் அங்கீகாரம் வழங்கப்படுவதில்லை என்று அவர இதன்போது தெரிவித்தார்.

நன்கு ஒன்றிணைந்த 10 பேரினால் ஒன்றிணையாத ஒரு இலட்சம் பேரை வேண்டுமானாலும் தோல்வி காண செய்ய முடியும்.ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவின் ஆட்சியில், கல்வி கற்றவர் கள் மற்றும் புத்திசாலிகள் முன் வைக்கின்ற கருத்துக்களுக்கு சரியான இடம் வழங்கப்படுவதில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஓ...கிக்கு ஊறுதே!



பாருக்கு போகத் தேவை இல்லை, பாட்டிலைத் தொடணும்னு அவசியம் இல்லை. தினமும் போதை தலைக்கேறி மட்டையாகலாம்னு யாராவது சொன்னா, "ஏம்பா அதுக்கும் அமேசன் காட்டுல இருந்து அரிய வகை மூலிகை இறக்கீட்டீங்களா'னு நீங்க காமெடி பண்ணலாம். ஆனா, அது சாத்தியம் எப்படி?

"ஆட்டோ ப்ரீவரி சிண்ட்ரோம்' என்ற அரிய வகை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் நினைத்த நேரத்தில் போதையாகிச் சரியலாம். நாம் சாப்பிடும் உணவில் இருக்கும் கார்போஹைட்ரேட்களை "ஈஸ்ட்' எனும் நொதிப்பான்கள் செரிமானத்துக்குத் தேவையான அற்கோலாக மாற்றுகின்றன. ஆனால், "ஆட்டோ ப்ரீவரி சிண்ட்ரோம்' எனும் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் சிறுகுடலில் ஈஸ்ட் அதிக அளவு தங்கிவிடுவதால், நாம் உண்ணும் கார்போஹைட்ரேட்களை அற்ககோலாக மாற்றிக்கொண்டே இருக்கும். இதனால் அளவுக்கு அதிகமான அற்ககோல் இரத்தத்தில் கலந்துவிடும்.




அப்புறமென்ன? காசே இல்லாமல், சொந்தமாகவே சரக்கை உற்பத்தி செய்துகொண்டு "டண்டணக்கா' டான்ஸ் ஆடலாம்னு நினைத்தால் தவறு. இதோ, "ஆட்டோ ப்ரீவரி சிண்ட்ரோம்' நோயால் பாதிக்கப்பட்டு, தான் படும் கஷ்டங்களை விபரிக்கிறார் லண்டனைச் சேர்ந்த மேத்யூ ஹாக். கிட்டத்தட்ட 20 வருடங்களாக இந்த நோயால் பாதிக்கப்பட்டிருக்கேன்.

சின்ன வயசுல இருந்தே வயிற்றுப் பிரச்சினை, செரிமானப் பிரச்சினைன்னு ஏகப்பட்ட கஷ்டங்கள். டீன் ஏஜைத் தாண்டினதுக்கு அப்புறம்தான் டாக்டர்கிட்ட போனேன். அவர்தான் இந்த நோயைப் பற்றிச் சொன்னார். சாதாரணமா ஒரு சொக்லேட் வாங்கிப் போட்டாலே உடம்பு போதையாகிடும். வாந்தி, மயக்கம், குமட்டல், பதற்றம்ன்னு தண்ணி அடிச்சா வர்ற எல்லாப் பக்க விளைவுகளும் வந்துடுது. கொடுமை என்ன தெரியுமா பாஸ்? இதுவரை நான் சரக்கை முகர்ந்துகூட பார்த்தது இல்லை.

இப்போ கார்போஹைட்ரேட் இல்லாத உணவுப்பொருட்களை மட்டுமே சாப்பிடுகிறேன். ஆனாலும் "உனக்கென்னப்பா நினைச்ச நேரத்துல சரக்கு அடிப்பே' னு கலாய்க்கிறாங்க என்கிறார்! என்ன கொடுமை மேத்யூ?

# வெயிட் லேடி!



இங்கிலாந்தைச் சேர்ந்த பெட்டிட் பக்கியின் (Petite Becki) செயல்களைப் பார்த்தால், "அம்மான்னா சும்மா இல்லடா' சோகப்பாடலைக் குத்துப்பாட்டாகவும் பாடலாம். அந்த அளவுக்கு "வெயிட்டான காரியங்களைக் கையாள்கிறார் 32 வயதான பெட்டிட் பக்கி.

திருமணமான பக்கி, வீட்டைச் சுத்தம் செய்வது, சமைப்பது, குழந்தையை ஸ்கூலுக்கு அனுப்புவது என "அம்மா'க்களுக்கே உரிய வழக்கமான காரியங்களைச் செய்து கொண்டிருந்தாலும் வீட்டில் இருக்கும் வெயிட்டான பொருட்களைத் தூக்கிப் பார்த்து பொழுதுபோக்குவது பிடித்தமான செயலாகிவிட்டதாம்.

விளைவு, கணவரையும் குழந்தையையும் காரில் உட்காரவைத்து இழுப்பது, ஒற்றைக் கையால் 50கிலோவுக்கும் அதிக எடைகொண்ட சோபாவைத் தூக்கிப் பிடித்து சுத்தம் செய்வது, ஷொப்பிங் முடிந்து திரும்பும்போது குழந்தையைத் தலையில் உட்கார வைத்து, அத்தனை பொருட்களையும் தனி ஆளாகத் தூக்கிக் கொண்டு வருவது என "வெயிட்டான பொருட்களைத் தூக்குவதில் புகுந்து விளையாடுகிறார்.மனைவியின் அதிக எடை தூக்கும் வெறியை வேடிக்கை பார்க்காமல் உற்சாகப்படுத்தி பயிற்சி கொடுத்திருக்கிறார் பக்கியின் கணவர் ஆடம்.

அப்புறமென்ன? வாரத்தின் ஆறு நாட்களும் அதி தீவிரமாக பளுதூக்கிப் பயிற்சி எடுத்த பக்கி, இங்கிலாந்தில் நடைபெறும் பெண்களுக்கான பளுதூக்கும் போட்டிகளில் கலந்துகொண்டிருக்கிறார். போட்டிகளில் இவர் தூக்கிய அதிகபட்ச எடை 133 கிலோ!

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா.ஜ.க.காங்கிரஸ் அரசாங்கத்தை விட மனிதாபிமானத்துடன் செயற்படுகின்றது


தமிழக மீனவர் விவகாரத்தில் காங்கிரஸ் அரசைக் காட்டிலும் பாஜக அரசு மனிதாபிமானத்துடன் நடந்து கொள்கிறது என இந்திய மத்திய வர்த்தகம், தொழிற்றுறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை உள்ளிட்ட அயல்நாடுகளுடன்உறவுநன்றாகஇருப்பதுஅவசியமானது என்றும் நிர்மலா சீதாராமன் இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

பாஜக தேசிய செயற்குழு உறுப்பினர் சி.பி.ராதாகிருஷ்ணன், மாநிலச் செயலர் வானதி சீனிவாசன் ஆகியோர் இதன்போது உடனிருந்தனர். (இ-5)

## பாரதச் செய்தி




# மீனவர்கள் பிரச்சினைக்கு 3 மாதங்களுக்குள் தீர்வு

## பா.ஜ.கட்சி உறுதி



**இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பகுதியிலும் இலங்கை மீனவர்கள் இந்திய கடற்பகுதியிலும் மீன்பிடித்து வந்த கடந்த காலச்சூழ்நிலையை மீண்டும் ஏற்படுத்துவதே மத்திய பா.ஜ.கஅரசின் நோக்கம் எனக் குறிப்பிட்ட பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் இல.கணேசன், மீனவர் பிரச்சினைகளுக்கு இன்னும் 3 மாதத்தில் தீர்வு காணப்படும் எனவும் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

தேசிய ஜனநாயக கூட்டணி என்பது நாடு தழுவிய கூட்டணி ஆகும். இந்த கூட்டணியில் பா.ஜனதா தான் தலைமை வகிக்கிறது.

எதிர்வரும் 2016இல் நடைபெறும் தமிழக சட்டமன்ற தேர் தலில பா.ஜனதா கட்சி முதல்வர் வேடபாளரை அறிவித்து தேர்தலை சந்திக்கும் என்பதை கட்சி தலைவர் அமித்ஷா தெளிவாக கூறி விட்டார். மேலும் முதல்வர் வேட்பாளர் பற்றி உரிய நேரத்தில் கட்சி அறிவிக்கும்.

அ.தி.மு.க.வுடன் பா.ஜனதா கூட்டணி அமைப்பது பற்றி கற்பனை செய்து கூட பார்க்க வில்லை. தி.மு.க. மற்றும் அ.தி.மு.க.வுக்கு மாற்றாக பா.ஜனதா அணி அமையும்.

ஆர்.எஸ்.எஸ் மற்றும் பா.ஜனதா கொள்கைகளுக்கும் இந்து மகா சபா கட்சி கொள்கைக்கும் வேறுபாடு உள்ளது. இந்து மகா சபா இந்துக்கள் மட்டுமே நாட்டில் இரு க்க வேண்டும் என்ற கொள்கை உடையவர்கள். ஆனால் எங்களுக்கு அப்படிப்பட்ட கொள்கை கிடையாது.

நாடு முழுவதும் மக்களால் போற்றப்படுகிற தேசத்தின் அடையாளமாக மகாத்மா காந்தி விளங்குகிறார். அவரை சுட்டு கொன்ற கோட்சேவுக்கு சிலை அமைக்கும் முயற்சி சரியானது அல்ல.

மனமாற்றம் மூலமே நடைபெறும் மதமாற்றத்தை பா.ஜனதா ஏற்றுகொள்ளும். ஆனால் ஆசையை காட்டி கட்டாய மதமாற்றம் செய்வது தண்டிக்கப்பட வேண்டும். இந்துக்களை ஏனைய மதங்களுக்கு மாற்றுகிறார்கள். ஆனால் இது பற்றி எந்த அரசியல் கட்சிகளும் கருத்து தெரிவிக்கவில்லை.

கச்சதீவை தானமாக வழங்கியது மறைந்த பிரதமர் இந்திரா காந்தி. சுமார் 40 ஆண்டுக்கு முன்னர் இந்திய மீனவர்கள் இலங்கை கடல் பகுதியிலும், இலங்கை மீனவர்கள் இந்திய கடல் பகுதியிலும் மீன்பிடி த்து வந்தனர். அதுபோன்ற நிலையை ஏற்படுத்த மத்திய அரசு முனைப்பாக செயற்பட்டு வருகிறது.

ஒரு சில அம்சங்கள் தவிர்த்து ஏனைய வேலைகள் அனைத்தும் முடிந்து விட்டன. இன்னும் 3 மாதத்தில் தமிழக மீனவர்கள் பிரச்சி னைக்கு நிரந்தர தீர்வை அறிவிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். பேட்டியின் போது பா.ஜனதா மாநில பிரசார அணி தலைவர் சரவணன், தெற்கு மாவட்ட தலை வர் ராஜேஷ்குமார், சட்டத்தரணி அணி மாநில தலைவர் பழனிச்சாமி ஆகியோர் உடனிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# நிழல் உலக தாதா தாவூதை இந்தியாவிடம் ஒப்படைக்கவும்

## பாகிஸ்தானிடம் மீண்டும் வலியுறுத்தல்



மும்பை குண்டுவெடிப்பு வழக்கில் தொடர்புடைய தாவூத் இப்ராஹிமை ஒப்படைக்க வேண்டும் என்று பாகிஸ்தானிடம் இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கடந்த 1993 மார்ச் 12ஆம் திகதி மும்பையில் 13 இடங்களில் தொடர குண்டுவெடிப்புகள் நடந்தன. இதில் 300 பேர் உயிரிழந்தனர். ஆயிரத்து 200இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதல் சம்பவத்தின் மூளையாகச் செயற்பட்ட நிழல் உலக தாதா தாவூத் இப்ராஹிம் பாகிஸ்தானுக்கு தப்பிச் சென்றுவிட்டான்.

அவனை இந்தியாவிடம் ஒப்படைக்கக் கோரி மத்திய அரசு பல முறை வலியுறுத்தியுள்ளது. ஆனால தாவூத் பாகிஸ்தானில் இல்லை என்று அந்த நாட்டு அரசு சாதித்து வருகிறது. அண்மையில் தொழில் ரீதியாக டுபாயை சேர்ந்த ஒருவருடன் தாவூத் தொலைபேசியில் பேசியதை ஐரோப்பிய உளவு நிறுவனம் வழிமறித்துக் கேட்டது. பாகிஸ்தானின் கராச்சி நகரில் இருந்து தாவூத் பேசியிருப்பதாக அந்த உளவு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக மத்திய உள்துறை இணை அமைச்சர் கிரண் ரிஜ்ஜு டில்லியில் நிருபர்களிடம் நேற்று முன்தினம் கூறியதாவது:

தாவூத் இப்ராஹிம் பாகிஸ்தானில் பதுங்கி உள்ளார். கராச்சியில் உள்ள வீட்டில் அவரும் அவரது குடும்பத்தினரும் வாழ்கின்றனர் என்று பாகிஸ்தானிடம் இந்தியா பலமுறை சுட்டிக்காட்டியுள்ளது. ஆனால் பாகிஸ்தான் அரசு அவரை ஒப்படைக்க மறுத்து வருகிறது. இது தொடர்பாக பல்வேறு ஆதாரங்களை பாகிஸ்தானிடம் அளித்தும் அந்த நாட்டு அரசு ஒத்துழைப்பு அளிக்க மறுக்கிறது. தீவிரவாதம் மீண்டும் தலை தூக்கியுள்ள நிலையில் இப்போதாவது தாவூத் இப்ராஹிமை பாகிஸ்தான் ஒப்படைக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், லக்னோவில் நிருபர்களிடம் கூறியபோது, இந்தியாவால் தேடப்படும் தீவிரவாதிகளில் தாவூத் இப்ராஹிம் முக்கியமானவர். அவர் கராச்சியில் இருப்பதை உளவு ஏஜென்சிகள் உறுதி செய்துள்ளன. கராச்சியில் இருந்து கொண்டு அவர் இந்தியாவுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார். இந்த விவகார த்தல் இந்தியாவின் நடவடிக்கையை பொறுத்திருந்து பாருங்கள் என்று தெரிவித்தார். (இ-5)

# பாதுகாப்பு விபரங்களைக் கோரிய பிரதமர் மனைவியின் மனுநிராகரிப்பு

பிரதமர் நரேந்திர மோடியின் மனைவி யசோதா பென்னுக்கு அளிக்கப்பட்டு வரும் பாதுகாப்பு குறித்த விபரங்களை ஆர்.டி.ஐ. சட்டத்தின் கீழ் தெரிவிக்க இயலாது என்று பொலிஸ் தெரிவித்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியின் மனைவி யசோதா பென், தனக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆர்.டி.ஐ. சட்டத்தில் தகவல் கோரியிருந்தார். அவரது மனுவில்,

"நான் பிரதமரின் மனைவி. அந்த வகையில்எனக்கு என னென்ன சலுகைகள் உள்ளன. நான பொது போக்குவரத்தையே பயன் படுததி வருகிறேன். ஆனால், எனது பாதுகாவலரகள் அரசு வாக னங்களில என்னை பின் தொடர்கின்றனர்.

என்னைச் சுற்றி பாதுகாப்பு வளையம் இருப்பதால் சில நேரங்களில் அச்சப்பட வேண்டியுள்ளது. எனக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து முழுமையான தகவல்களை அளிக்க வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், ஆர்.டி.ஐ. சட்டத்தின் கீழ் அவர் கோரியிருந்த தகவல்களை அவ்ருக்கு தெரிவிக்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து குஜராத்தின் மெஹாசனா மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் ஜே.ஆர். மொதா லியா கூறும் போது, "பிரதமர் நரேந்திர மோடியின மனைவி யசோதா பென் கோரியுள்ள தகவல்கள் உள்ளூர் புலனாய்வுப் பிரிவுக்கு சம்பந்தப்பட்டது. அதனால் தகவல்களை அவருக்கு தெரிவிக்க இயலாது. இது தொடர்பான விளக்கம் அவருக்கு அனுப்பப்பட்டுள்ளது" என்றார். யசோதா பென்னுக்கு அனுப்பப்பட்டுள்ள மனுவுக்கான பதில் விபரத்திலும் இதே தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (இ-5)

## வடமாநிலங்களில் கடும் குளிர்

# உத்தரப் பிரதேசத்தில் மேலும் 20 பேர் பலி!

(ஸ்ரீநகர்)

ஜம்மு - காஷ்மீர், பிஹார், உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட வடமாநிலங்களில் கடும் குளிர் காற்று வீசி வருகிறது. காஷ்மீரில் வெப்பநிலை மைனஸ் 5.6 டிகிரி செல்சியஸ் அளவுக்கு குறைந்து விட்டது.

காஷ்மீர் உள்ளிட்ட வடமா நிலங்களில் குளிர் காற்று வீசுகிறது. காஷ்மீரில் உள்ள தால் ஏரியின் ஒரு பகுதியில் உள்ள தண்ணீர் உறைபனியாக மாறத் தொடங்கியுள்ளது. காலை வேளையில் வெப்ப நிலை 1.5 டிகிரி செல்சியஸாக இருந்தது. இரவு வேளையில் மைனஸ் 5.6 டிகிரி செல்சியஸாக வெப்பநிலை நிலவியது. வீதிகளில் பனி படர்ந்துள்ளதால், பல பகுதிகளில் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் பஹல்காமில் மைனஸ் 7.4 டிகிரி செல்சியஸ், குல்மார்க்கில் மைனஸ் 4.7 டிகிரி செல்சிய்ஸ், குப்வாராவில் மைனஸ் 5.7 டிகிரி செல்சியஸ், கார்கிலில் மைனஸ் 14.5 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. இன்னும் சில நாட்களுக்கு இதே குளிர்ந்த பருவ கால நிலை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**உ.பி.யில் மேலும் 20 பேர் பலி**

உத்தரப் பிரதேசத்தில் கடும் குளிரான சூழ்நிலை நிலவுவதால், உடல் நிலை பாதிக்கப்பட்டு மேலும் 20 பேர் உயிரிழந்தனர். இந்த மாநிலத்தில் இதுவரை குளிரால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தோர் எண்ணிக்கை 100 ஆக உயர்ந்துள்ளது. குறைந்தபட்ச வெப்பநிலை, ஆக்ராவில் 3.3 டிகிரி செல்சிய ஸாகவும், லக்னோவில் 6 டிகிரி செல்சியஸாகவும் பதிவாகி இருந்தது.

ஏழைகள் மற்றும் வீதியோர நடைமேடைகளில் படுத்து உறங்கும் நலிவடைந்த பிரிவினர் தற்காலிகமாக தங்குவதற்கு உரிய ஏற்பாடுகளை செய்து தரும்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்டத்தில் 32 ஆயிரத்து 736 பேர் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்

(குருமன்காடு)

**வவுனியாவில் 9040 குடும்பங்களை சேர்ந்த 32 ஆயிரத்து 736 பேர் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வவுனியா மாவட்ட உதவி பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.**

வெள்ள அனர்த்தம் தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

வவுனியா பிரதேச செயலகப்பிரிவில் 20 நலன்புரி நிலையங்களில் 504 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 947 பேரும், செட்டிகுளம் பிரதேச செயலகப்பிரிவில் 16 நலன்புரி நிலையங்களில் 649 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 416 பேருமாக 36 நலன்புரி நிலையங்களில் ஆயிரத்து 153 குடும்பங்களை சேர்ந்த 4 ஆயிரத்து 363 பேர் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இதேவேளை வவுனியா பிரதேச செயலகப்பிரிவில் 5 ஆயிரத்து 762 குடும்பங்களை சேர்ந்த 21ஆயிரத்து 31 பேரும் வவுனியா வடக்கு பிரதேச செயலகப்பிரிவில் 291 குடும்பங்களை சேர்ந்த 959 பேரும் வவுனியா தெற்கு பிரதேச செயலகப்பிரிவில் 625 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 222 பேரும் செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் 2 ஆயிரத்து 362 குடும்பங்களை சேர்ந்த 8 ஆயிரத்து 524 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

## 92 வீடுகள் முற்றாகவும் 282 வீடுகள் பகுதியளவிலும் சேதம்



**இதேவேளை** 92 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 282 வீடுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் பாவற்குளத்தின் வான் கதவுகள் மேலும் திறக்கப்படவுள்ளமையினால் கந்தசாமிநகர் மற்றும் கிறிஸ்தவகுளம் மக்களை அவதானத்துடன் இருக்குமாறும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வவுனியா மாவட்ட உதவி பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(2-250)

# மழையின் வேகம் குறைவடைந்துள்ள போதிலும் மக்கள் இருப்பிடங்களை நகர நாட்கள் செல்லும்

### வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தெரிவிப்பு

மன்னார் மாவட்டத்தில் பெய்துவரும் மழை காரணமாக சில தாழ் நிலப் பிரதேசங்களில் வெள்ள நிலை தொடர்ந்தும் காணப்படுகின்றது. முசலி பிரதேச செயலகப் பிரிவில் 4 ஆம் கட்டை, மருதமடு கிராமங்களில் இருந்து பெயர்ந்த மக்களை வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் மற்றும் முசலி பிரதேச சபையின் பிரதி தவிசாளர் பைரூஸ் மௌலவி ஆகியோர் நேரில் சென்று குறை நிறைகளை கேட்டறிந்தனர்.


கடந்த சில தினங்களாக பெய்துவரும் அடைமழையினையடுத்து மன்னார் மாவட்டத்தின் நானாட்டான், மடு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ள நிலையில் அங்கிருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை நேரில் சென்று பார்வையிட்ட மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தேவையான வசதிகளை செய்து கொடுத்தார். இது தொடர்பில் றிப்கான் பதியுதீன் தெரிவிக்கையில்,

தற்போது மழையின் வேகம் குறைந்துள்ள போதும், மக்கள் மீண்டும் தமது இடங்களுக்கு செல்வதற்காக இன்னும் சில தினங்கள் எடுக்கலாம் என்றும் அதேவேளை பாதிப்புக்குள்ளான மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள்ள உடன் பெற்றுக் கொடுக்குமாறு பிரதேச செயலாளர்கள், கிராம அதிகாரிகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அதிகாரிகளையும் மாகாண சபை உறுப்பினர் கேட்டுள்ளார்.

இதேவேளை வெள்ள அச்சுறுத்தலினால் பாதிப்புக்குள்ளாகியுள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தவுள்ளதாகவும் இது தொடர்பில் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீனுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் கூறினார்.

எதிர்வரும் மாதத்தில் நடைபெறவுள்ள வடமாகாண சபையின் அமர்வின்போது, விவசாயிகள் தொடர்பில் கோரிக்கையினை முன்வைக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2)




# கிணற்றுக்குள் குழந்தையுடன் குதித்ததாய் உயிர் பிழைத்தார்

## குழந்தை பரிதாப மரணம்

(பனிக்கன்குளம்)

தனது இரண்டு மாத குழந்தையுடன் கிணற்றில் குதித்ததாய் உயிர் தப்பினார். எனினும் அக் குழந்தை உயிரிழந்துள்ளது.


இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வள்ளுவர்புரம் கிராம சேவையாளர் பிரிவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குடும்பத்தகராறு காரணமாக ஆத்திரமடைந்த பிரஸ்தாப பெண் தனது இரண்டுமாத குழந்தையுடன் கிணற்றில் குதித்த வேளையில் அயலவர்களினால் தாயார் காப்பாற்றப்பட்டு உடனடியாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் குழந்தை சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே உயிரிழந்துள்ளது. உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (2-281)

# வவுனிக்குளம் வான் பாய்வதால் போக்குவரத்துக்கள் பாதிப்பு



நாட்டில் தெர்டர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக வன்னியில் அனைத்து குளங்களிலும் நீர் நிரம்பி வான்பாய்வதால், போக்குவரத்துப்பாதைகள் பல நீரில் மூழ்கியுள்ளன.

இந்நிலையில் வன்னியின் பெரிய குளங்களில் ஒன்றான வவுனிக்குளம் வான் பாய்வதால் விநாயகபுரம் துணுக்காய் வீதியும், பறங்கி ஆறு வான்பாய்வதால்சிராட்டி குளம் நெட்டாங்கண்டல் வீதியும் மற்றும் பாண்டியன் குளம், செல்வபுரம், துணுக்காய் ஆகிய வீதிகளிலும் நீர குறுக்கறுத்து பாய்வதால் போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வவுனிக்குளம் அணை வழியாக போக்குவரத்தினை மேற்கொள்ள வேணடிய நிலை ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. தற்போதும் சீரற்ற கால நிலை காரணமாக தொடர்ந்து பரவலாக பலத்த மழை பெய்துவருவது குறிப்பிடத்தக்கது. (2)




**வவுனியா வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத்தில் கஜமுக சம்ஹாரம் கடந்த 26 ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது. இரவு ஆலய சூழலில் எழுந்தருளிய விநாயகப் பெருமான் கஜமுகனை வதம் செய்வதைப் படங்களில் காணலாம்.**
**(படங்கள்: குருமன்காடு செய்தியாளர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1027

# தனிச்சிறப்பு

ஒரு குருவிடம் மூன்று சீடர்கள் இருந்தனர்.

குருகுல வாசம் முடிந்து மூவரும் குருவிடம் சொல்லிக் கொண்டு தத்தமது வழியில் பிரிந்து சென்றனர்.

என்ன வேலை செய்வது என்று முதலா வது சீடன் யோசித்தான்.

இந்த நாட்டின் அரசன் கற்றறிந்த அறிஞர்களை மதிப்பவன் என்பதால் அரசவை சென்று மன்னனை போற்றிப் பாடி நின்றான்.

அந்தத் துதிப்பாடல் கேட்டு பெருமகிழ்ச்சி கொண்ட அரசன் சீடனுக்கு வெகுமதி அளித்ததோடு, அரசவையிலேயே வைத்துக் கொண்டான்.

இரண்டாவது சீடனிடம் நிறைய யோசனைகள் இருந்தன.

ஆனால் எதைச் செய்வது, எப்படிச் செய்வது என்பதில் குழப்பம் இருந்தது.

அவன் தன் மனம்போன போக்கில் எங்கெங்கோ சுற்றித் திரிந்தான். ஒரு நாள் சத்திரம் ஒன்றில் இளைப்பாறினான்.

அந்தச் சத்திரத்தில் அன்ன தானம் வழங்கப்பட்டது.

அவன் அதை வாங்கி உண்ட போது, அதுவரை கண்டறியாத ருசியை உணர்ந்தான்.

அந்த அறுசுவை உண வைத் தயாரித்து அளித்த சமையல்காரரைச் சந்தித்துப் பேசினான்.


தனக்குப் பின்னால் அந்தக் கலையை, அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லத் தகுந்த வாரிசு இல்லாமல் அவர் வாடுவது புரிந்தது.

சற்றும் தயங்காமல், அந்தப் பெரியவரிடம் உதவியாளராகச் சேர்ந்து கொண்டான்.

அவனைப் பிடித்துப் போனதால் சமையல் கலையின் நுணுக்கங்கள் எல்லாவற்றையும் அவனுக்குக் கற்றுக் கொடுத்தார்.

அவனும் வெகு விரைவிலேயே சிறந்த நளபாகச் சக்கரவர்த்தியாக உருவெடுத்தான்.

மூன்றாவது சீடனோ முதலில் தனது சொந்த ஊருக்குச் சென்றான். அப்போது தான் அந்தக் கிராமத்தில் நிறையச் சிறுவர்கள் காடுகளிலும் வரப்புகளிலும் கிடைத்த வேலைகளைச் செய்து பொழுதைக் கழிப்பதைக் கண்டான்.



தனக்கு அமைந் தது போல ஒரு குருவின் வழிகாட்டல் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டான்.

ஏன் அந்தச் சிறுவர்களுக்குத் தான் கற்ற கல்வியை அளிக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் செயலில் இறங்கினான்.

ஆனால் தன் னுடைய வாழ்க்கைக்கே வழிதேட வேண்டிய நிலையில் தன்னால் எப்படி மற்றவர்களுக்கு உதவ முடியும் என்ற சந்தேகம் அவனுக்கு.

குரு அடிக்கடி சொல்லும் உபதேசம் ஒன்று நினைவுக்கு வந்தது. எந்த ஒரு நல்ல காரியத்தையும் சிந்தித்தவுடன் செயற்படுத்தத் துவங்கி விட வேண்டும் அவ்வாறு துவங்கி விட்டால் அதை வெற்றிகரமாக முடிப்பதற்குத் தேவையான அனைத்து உதவிகளும் தானே தேடி வரும் என்பதுதான் அந்த உபதேசம்.

உடனடியாக, அந்தச் சீடன், அச்சிறுவர்களின் பெற்றோர்களைச் சந்தித்துப் பேசினான்.

சில சிறுவர்களைச் சேர்த்துக் கொண்டு, ஒரு மரத்தடியில் அவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க ஆரம்பித்தான்.

அவனுடைய அர்ப்பணிப்பு உணர்வைக் கண்ட அந்த மக்கள் அவன் எதிர்பார்த்ததற்கும் மேலாகவே, தாமாக முன்வந்து உதவிகளைச் செய்தனர்.

அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்தி, படிப்படியாக வளர்ந்தான். சீக்கிரத்திலேயே, பெரிய தொரு கல்விச் சாலையை நிறுவி, சிறந்த கல்வியாளனாகத் திகழ்ந்தான்.

பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாள் தன் சீடர்களைக் காண விரும்பினார் குரு.

மூவரும் குருவைக் காண ஒரு சேரக் கிளம்பிப் போனார்கள்.

தனது சீடர்க ளைக் கண்டதும், அவர் பெரிதும் மகிழ்ந்தார்.

தங்களுக்கு ஞானம் அளித்த குருவுக்கு, சிலநாட்கள் பணிவிடை செய்வது என்று மூவரும் தீர்மானித்தனர்.

ஆசிரமத்தில் தங்கி, குருவுக்குப் பணி விடைகள் செய்தனர்.

அப்போது மற்ற இரண்டு சீடர்களைக் காட்டிலும் மூன்றாவது சீடனுக்குக் கூடுதல் முக்கியத்துவம் தந்தார் குரு.

இது மற்ற சீடர்கள் இருவரையும் மனம் நோகச் செய்தது.

ஒருநாள், மூன்றாவது சீடன் இல்லாத சமயம் பார்த்து, இருவரும் தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

குரு புன்னகைத்தார்.

பின்னர் முதலாமவனைப் பார்த்துச் சொன்னார்.

"நீ அரசவைப் புலவன்! சிறந்த இலக்கியங்களைப் படைக்கின்றாய்.

உனது படைப்பு, படிப்பவர்களுக்கு மகிழ்ச்சி தருகிறது.

மன எழுச்சியையும் தருகிறது.

அதனால் நீ உயர்ந்தவன் தான்! நான் மறுக்க வில்லை! 'என்றார்.

பின்னர், இரண்டாமவனைப் பார்த்து, "நீ சிறந்த நளபாகனாக இருக்கின்றாய்.

வயிற்றுக்கு உணவளித்தவன் தாய்க்கு ஒப்பானவன்! அதனால் நீயும் உயர்ந்தவன் தான்! நான் ஏற்றுக் கொள்கிறேன்," என்ற குரு மேலும் தொடர்ந்தார்.

"ஆனால், அறியாமையில் இரு க்கும் ஒருவனுக்குக் கல்வி அளிப்பது என்பது, பார்வையில்லாதவனுக்கு பார்வை அளிப்பது போல! கல்விக்கண் திறக்கப்பட்டவனுக்குத்தான் உலகின் மற்ற வளங்கள் அனைத்தும் கிடைக்கும்! அதனால் எழுத்தறிவித்தவன் இறைவனாகிறான்! அதனால்தான் உங்கள் இருவரையும்விட மூன்றாமவனுக்குச் சற்றுக் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்து விட்டேன்.

ஒரு குருவாக நான் இதைச் செய்திருக்கக்கூடாதுதான்! உங்கள் மூவரையும் சமமாகப் பாவித்திருக்க வேண்டும் என்னை மன் னித்துவிடுங்கள்' என்றார் குரு.

"அகங்காரம் எங்கள் கண்களை மறைத்துவிட்டது.

எங்கள் இருவரைக் காட்டிலும் அவனுடைய சேவை உயர்வானது என்பதை நாங்கள் இப்போது தெளிவாக உணர்ந்து கொண்டோம்.

தாங்கள்தான் எங்களை மன்னிக்க வேண்டும்' என்றனர் சீடர்கள் இருவரும்.

12.2014

29

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ✦ 1690 - இத்தாலியின் அன்கானோர் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டது.
- ✦ 1778 - அமெரிக்கப் புரட்சிப் போர்: 3,500 பிரித்தானிய போர் வீரர்கள் ஜோர்ஜியா மாநிலத்தின் சவான்னா நகரைக் கைப்பற்றினர்.
- ✦ 1835 - மிசிசிப்பி ஆற்றின் கிழக்கேயுள்ள செரோக்கீ இன மக்களின் நிலங்கள் அனைத்தையும் ஐக்கிய அமெரிக்காவுக்குக் கொடுக்கும் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.
- ✦ 1845 - டெக்சாஸ் ஐக்கிய அமெரிக்காவின் 28ஆவது மாநிலமாக இணைந்தது.
- ✦ 1851 - அமெரிக்காவின் முதலாவது இளைய கிறிஸ்தவர்களின் அமைப்பு (வை.எம்.சி.ஏ) பொஸ்டனில் அமைக்கப்பட்டது.
- ✦ 1891 - தோமஸ் அல்வா எடிசன் வானொலிக்கான காப்புரிமம் பெற்றார்.
- ✦ 1911 - சுன் யாட்-சென் சீனக் குடியரசின் முதலாவது அதிபரானார்.
- ✦ 1911 - மங்கோலியா கிங் வம்சத்திடமிருந்து விடுதலை பெற்றது.
- ✦ 1930 - அலகாபாத் நகரில் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய கவிஞரும், மெய்யியலாளருமான முகமது இக்பால் முஸ்லிம்களுக்கென தனிநாடு கோரிக்கையைக் கொண்ட தனது இரு-நாடுகள் கொள்கையை முன் வைத்தார்.
- ✦ 1987 - 326 நாட்கள் விண்வெளியில் பயணித்த சோவியத் விண்வெளி வீரர் யூரி ரொமானின்கோ லூரசல Romanenko பூமி திரும்பினார்.
- ✦ 1989 - ஹொங்கொங் வியட்நாமிய அகதிகளை பலவந்தமாக வெளியேற்றியதை அடுத்து அங்கு கலவரம் மூண்டது.
- ✦ 1993 - உலகின்மிகப்பெரிய செம்பினாலான புத்தர் சிலை ஹொங்கொங்கில் அமைக்கப்பட்டது.
- 1996 - குவாத்தமாலாவில் அந்நாட்டு அரசுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதில் 36-ஆண்டு கால உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்தது.

பிறப்புகள்

- ✦ 1937 - மாமூன் அப்துல் கயூம், மாலைதீவுகளின் முன்னாள் குடியரசுத் தலைவர்
- ✦ 1942 - ராஜேஷ் கன்னா, இந்தி நடிகர்
- ✦ 1965 - சி. ஜெயசங்கர், ஈழத்து எழுத்தாளர்
- ✦ 1971 - பிறட் ஹொட்ஜ், அவுஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்


இறப்புகள்

- ✦ 1924 - கார்ள் ஸ்பிட்டெலெர், நோபல் பரிசு பெற்ற சுவிட்சர்லாந்து எழுத்தாளர் (பி. 1845)
- ✦ [illegible] மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1912)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு...



12

## "அபூர்வ ராகங்கள்" முதல் நாள் படப்பிடிப்பு

...தமிழ் கற்றுக்கொண்டால் உங்களை எங்கோ கொண்டு போய் விட்டுவிடுவேன் என்று பாலசந்தர் சொன்னது, ரஜினியின் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. அன்றுமுதல் தமிழ் படிக்க ஆரம்பித்தார். தமிழ்ப் பத்திரிகைகளில் வரும் செய்திகள், கதைகளை எல்லாம் படித்தார். ஒவ்வொரு வார்த்தையையும் எப்படி உச்சரிக்க வேண்டும் என்பதை மற்றவர்களிடம் கேட்டுத்தெரிந்து கொண்டார்.

மகிழ்ச்சி

ஒருநாள்- ஞாயிற்றுக்கிழமை. கலாகேந்திரா அலுவலகத்திலிருந்து ரஜினிக்கு போன் வந்தது.

அபூர்வ ராகங்கள் படத்தின் ஷூட்டிங் நாளைக்கு நடக்கிறது. உங்கள் சம்பந்தப்பட்ட காட்சிகளை பாலச்சந்தர் எடுக்கப் போகிறார். ஸ்டூடியோவுக்கு வந்துவிடுங்கள் என்று கூறினார்கள்.

ரஜினிக்கு ஏக சந்தோஷம். இருந்தாலும் ஒரு நெருடல். அவருக்கு வியாழக்கிழமை தான் அதிர்ஷ்ட நாள். முக்கிய நிகழ்ச்சிகள் எல்லாம் வியாழக்கிழமைகளில்தான் நடந்து வருகின்றன. முதல்நாள் படப்பிடிப்பு வியாழக்கிழமை இருக்கக்கூடாதா என்று எண்ணினார். ஆனால், படிப்பிடிப்புக்காக முதல் முதலாக அழைப்பவர்களிடம் இதை எல்லாம் கூறமுடியுமா? எனவே, அவர்கள் சொன்னபடியே திங்கட்கிழமை ஸ்டூடியோவுக்குப் போனார்.

ஆனால், அன்று அவரது காட்சிகள் எடுக்கப்படவில்லை. மறுநாளும் போனார். அன்றும் அதற்கு அடுத்த நாளும்கூட படப்பிடிப்பு இல்லை. கடைசியில் வியாழக்கிழமையன்று அவர் சம்பந்தப்பட்ட காட்சிகளைப் படமாக்கினார். பாலசந்தர்.

தான் விரும்பியபடியே, முதல்நாள் ஷூட்டிங் தானாகவே வியாழக்கிழமை நடந்ததில் ரஜினிக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி.

முதலில் படமாக்கப்பட்ட காட்சி

ஒரு பெரிய பங்களா. அதற்கு ஒரு பெரிய கதவு. அதைத் திறந்துகொண்டு, தாடி- மீசையுடன் உள்ளே நுழைகிறார் ரஜினி.

"பைரவி விடு இது தானா? நான் பைரவியோட புருஷன்!" என்று கமல்ஹாசனிடம் கூறுகிறார். ரஜினி பேசிய முதல் வசனம் இது தான்.

படப்பிடிப்புக்கு முன், இந்த வசனத்தை சுமார் ஆயிரம் தடவை பேசிப் பேசி ஒத்திகை பார்த்திருந்தார்!

முதல் நாள் அனுபவம் பற்றி ரஜினி கூறியிருப்பதாவது:-

என் முகம் எல்லாம் கம் தடவி, தாடியை ஒட்ட வைத்திருந்தார்கள். சிரிக்கவும் முடியாது. அழவும் முடியாது.

சுமார் 20 கிலோ எடையுள்ள கோட்டை அணிந்திருந்தேன். அதைத் துவைத்து எத்தனை வருடம் இருக்குமோ தெரியவில்லை! ஒரே வியர்வை நாற்றம். தாங்க முடியாத அரிப்பு! கிளர்ப் என்று கத்தினார் டைரக்டர் சார். கிளாப் அடிக்கும் உதவி டைரக்டர் வெள்ளைக்காரன் மாதிரி இருப்பார். இதனால் அவரை ஜப்பான் என்று எல்லோரும் செல்லமாகக் கூப்பிடுவார்கள்.



அபூர்வராகங்களில் ரஜினிகாந்த் தோன்றிய முதல் காட்சி

ஜப்பான் என் முன்னால் கிளாப் அடித்து விட்டு ஓடினார். எனக்கு ஒரே பதற்றம். எப்படியோ டயலாக்கை சொல்லிவிட்டேன். உண்மையில் உளறினேன் என்பது தான் பொருந்தும்.

நான் கமலைப் பார்த்துத்தான் இந்த வசனத்தைச் சொன்னேன். ஆனால், சற்று துரத்தில் நின்றுகொண்டிருந்த பாலசந்தர் சார் தான் என் கண்ணுக்குத் தெரிந்தார். நான் கேமராவைக் கண்டோ, அங்கிருந்த கூட்டத்தைக் கண்டோ பயப்படவில்லை. என் பயம் எல்லாம் பாலசந்தர்சார்கிட்ட தான். (தொடரும்)



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 34

...இன்னம் ரெண்டு நாள் விட்டா ஒழவு எறங்காது; விழுந்த வெத மொளைக்காது.

நான் என்ன பண்ணுவேன்; ஏது பண்ணுவேண்ணு ஆளில்லாத ஊருக்குள்ள அவ அலைய அரசமரத்து அம்பலக்கல்லுல படுத்துக்கெடக்கான் கேப்பக்களியான். கட்ன வேட்டியோட- வெறும் ஒடம்போட- தலைக்கு வச்சாக் கனவு போயிரும்னு துண்டச் சுருட்டித் தொடையிடுக்குல வச்சுப் படுத்திருக்கான்.

பாவம் பெறவியிலயே வாயும் பேசாது. காதும் கேக்காது அவனுக்கு. குடும்பம் இல்ல; ஒத்த ஆளு. ரெண்டு மாடுகளும் மூணு செம்பி லியாடுகளும் தான் சொந்த பந்தங்க.

இவன் கஞ்சிக்கு அதுக பொறுப்பு; அதுக தீனிக்கும் இவன் பொறுப்பு. ஒரு கெட்ட பழக்கமில்ல அவனுக்கு ஒழைச்சுப் பொழைக்கிற சந்நியாசி. ஒரு பெறவி முடிஞ்சாத்தான் இன்னொரு பெறவின்னு சாமியாருக சொல்ற மாதிரி ஒரு வேட்டி கிழிஞ்சாத்தான் இன்னொரு வேட்டிங்கிறது அவன் பொருளாதார ஐதீகம்.

அவனுக்கின்னு உள்ளதெல்லாம் ஒரே ஒரு ஆசதான். நெல்லுக் கஞ்சி. நெல்லுக் கஞ்சின்னா உசுரு. கேப்பக்களியானுக்கு. தைப்பொங்க தீபாவளிக்குத்தான் நெல்லுக் கஞ்சிங்கிற ஆடம்பரமெல் லாம் அப்ப.

கல்யாண வீடு கருமாதி வீடுகள்ல ரெண்டு எல வாங்கி ஒண்ணுக்கு மேல ஒண்ணு போட்டு ஒக்காந்திருவான். மேல் எலையில மொதப் பந்திச் சோத்த வாங்கித் தின்னுட்டு அந்த எலையில எடுத்தெறிஞ்சிட்டு வேட்டியில கையத் தொடச்சு ரெண்டாம் பந்திக்கு வந்த மொத ஆளு மாதிரி அங்கயே ஒக்காந்திருவான். இப்ப... மூச்சு விட்டற பொணம் மாதிரி ஒறங்குறான்.



கத்திக் கத்திப் பாத்தா பெரியமூக்கி. அவன் எந்திரிக்கல. காத்து சத்தம் போட்டா கல்லு எந்திருக்கும்? ஒரு குச்சி எடுத்து அடிச்சு எழுப்புனா. கனாக் கண்டு எந்திரிச்சவன் மாதிரி மேலயும் கீழயும் முழிச்சவன் கொறட்டைய நிறுத்திவிட்டுக் கொட்டாவிய விடுறான்.

எந்த மொழியில பேசுனாலும் காசுல பேசுற மாதிரி வருமா? அதுலயும் இவன் வாய் பேசாதவன். அண்டா அடகு வச்ச ஏழு ரூவா யில விதைத்த தானியத்துக்கு ரெண்டே முக்கா ரூவா போக முடிஞ்சு வச்சி ருந்த நாலே கால்ல ஒரு ஒண்ணேகால் எடுத்துக் குடுத்து உழுக வாப்பான்னு சாடையில சொல்லவும் அவன் தலையச் சொரண்டி கர்று புர்றுன்னு மொன குறான்.

சாமியக் கும்பிட்டு அவன் மேல பிரமாஸ்திரத்த எடுத்து எறிஞ்சா பெரியமூக்கி.

பச்ச நெல்லுக் குத்தி மத்தியானம் நெல்லுக் கஞ்சி உருண்ட புடிச்சுத் தாரேன்னு சாடையில சொல்லவும். அதுவரைக்கும் கண்ல ஒட்டியிருந்த ஒறக்கம் ஓடியே போச்சு கேப்பக்களியானுக்கு. சரின்னு தலையாட்டிட்டான். பாதிக் கெணறு தாண்டிட்டா பெரிய மூக்கி. இன்னொரு ஏருக்கு என்னா பண்றது?


முக்குறுணி வீட்டுக்கு அடிக்கு விருந்தாடி வந்திருக்கான் அவ மருமகன் சவட்டையன்; பின்னத் தேவன் பட்டிப் பெறப்பு. நல்ல எளந்தாரி. மாடு மாதிரி வேல செய்வான். ஆனா சாராயமும் கஞ்சாவும் குடுத்தா வேட்டியக் கழத்திக் குடுத்திட்டு வெறும் ஆளா வீட்டுக்கு வந்திருவான். சுத்தி வளைச்சுப் பாத்தா பெரியமூக்கிக்கு முக்குறுணி நாத்துனா மொறையில வந்து சேருவா. உழுது முடிச்ச அவ மாடுக ரெண்டும் தொழுவுல இருக்கு.

யப்பா முக்குறுணி மருமகனே! சாமியாப் பாத்து ஒன்னிய அனுப்பிருக்கு ராசா. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யாழ்.மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலையில் நடைபெற்ற போது...



வடக்கு மாகாண சபையின் கார்த்திகை மாதத்துக்கான மரநடுகை செயற்றிட்டத்தின் கீழ் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சன சமூக நிலையங்களுக்கும் கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கும் மாதர் சங்கங்களுக்கும் முன்பள்ளி பாடசாலைகளுக்கும் பயன்தரு மரக்கன்றுகள் மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகத்தினால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்ட போது... (படங்கள்:-கரணவாய்ச் செய்தியாளர்)





பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் ஒளிவிழா நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது.... (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)


யா/வயாவிளான் மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரியின் ஆர்.சி. கலையரங்கில் நடைபெற்றது. இதன்போது நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுலகுமாரன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவிகளினது கலை நிகழ்வின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம்.


(படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

## நிழல்கள்









யாழ். தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு மானிப்பாய், இணுவில், உரும்பிராய், சுன்னாகம், தெல்லிப்பழை, மல்லாகம் போன்ற லயன்ஸ் கழகங்கள் ஊடாக நோயாளர்களுக்கான சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல்கள், கண் வில்லைகள், நீரிழிவு நோயாளர்களுக்கான சத்துப்பால் மாவகைகள் என்பன அண்மையில் வழங்கப்பட்ட போது...

(படங்கள்:- புன்னாலைக்கட்டுவன், மானிப்பாய் செய்தியாளர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு பிளவுபடுவதனை அனுமதிக்க மாட்டோம்

## எதிரணி உறுதி



நாடு பிளவுபடுவதனை எதிர்க்கட்சிகள் அனுமதிக்கப் போவதில்லை என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். சர்வதேச யுத்தக் குற்றச் செயல் விசாரணைகளின் மூலம் நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்த அனுமதிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனம் வீடு வீடாகச் சென்று விநியோகம் செய்யும் நிகழ்வு நேற்று முன்தினம் பொரளையில் நடைபெற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சகல பிரதேசங்களுக்கும் இந்த விஞ்ஞாபனம் விநியோகம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் இறைமையை பாதிக்கும் வகையில் இந்த விஞ்ஞாபனத்தில் எந்தவொரு விடயமும் உள்ளடக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனிதவுரிமை மீறல் மற்றும் யுத்தக் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் எந்தவொரு படைவீரரும் வெளிநாட்டு நீதிமன்றமொன்றில் தண்டிக்க அனுமதிக்கப்படமாட்டாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# இளையோர் நாடாளுமன்றத்தினது உறுப்பினர்கள் மைத்திரிக்கு ஆதரவு

(கொழும்பு)

இலங்கையின் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10பேர் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவை வெளியிட்டுள்ளனர்.

"ஜனநாயகத்துக்கான இளையோர் நாடாளுமன்ற உறுப்பினர்கள்" என்ற பெயரில் அழைக்கும் குழுவினரே இந்த ஆதரவை வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் இளைஞர்களுக்கு சிறிய வாய்ப்புக்களே வழங்கப்படுகின்றன.

அதில் மாற்றம் ஏற்படவேண்டும் என்று இந்த இளைஞர்கள் கோரியுள்ளனர்.

மகிந்த சிந்தனையின் கீழ் மேற்கொள்ளப்படும் ஊழல்கள் காரணமாக ஒரு சிலரே நன்மையடைவதாக இளையோர் நாடாளுமன்ற உறுப்பினரான ஹெலஸ்ரீ கனேகொட தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவரை அரசாங்கம் தமது பிரசாரத்துக்கு பயன்படுத்துவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவரே நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் நீலப்படையின் செயலாளராகவும் செயற்படுகிறார் எனில் தேசிய இளைஞர் சேவை மன்றத்துக்கான பணம் எங்கே போகிறது என்று ஊகித்துக்கொள்ளலாம் என்றும் கனேகொட சுட்டிக்காட்டினார். (எ-11)

# மகிந்தவின் அனர்த்த நிதி போதுமானதாக இல்லை

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கம் ஒதுக்கியுள்ள நிதி போதுமானது இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.கல்கமுவ பிரதேசத்தில் சீரற்ற கால நிலையால் பாதிக்கப்பட்ட மக்களை நேற்று சந்தித்து பேசும்போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவசர அனர்த்தங்களைச் சமாளிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு தேர்தல் பிரசார தன்சல்கள் வழங்கப்பட்டு விட்டன.தற்போது நிவாரண நடவடிக்கைகளுக்கு பணம் இல்லை.இந்த நிலையில் அவசரமாக நாடாளுமன்றத்தை கூட்டியேனும் இதற்கான நிதி ஒதுக்கத்தை வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று அவர் தெரிவித்தார். (இ-5)

# மண்சரிவு அபாய எச்சரிக்கை 11 ம்ாவட்டங்களுக்கு நீடிப்பு!

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 11 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

மாத்தளை, பதுளை, கண்டி, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை உள்ளிட்ட 11 மாவட்டங்களில் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு அபாயம் அதிகளவில் காணப்படுகின்ற பகுதிகளில் வாழ்கின்ற மக்கள், அங்கிருந்து தற்காலிகமாக வெளியேறுவது பாதுகாப்பான நடவடிக்கையாகும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்தல் விடுத்துள்ளது.


இத்தகைய பிரதேசங்களில் அதிக மழை பெய்கின்றமையே கூடுதல் மண்சரிவு அபாயம் நிலவுவதற்கு காரணமாகும் என்றும் மண்சரிவு ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர ஆர.எம்.எஸ். பண்டார தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையை அண்மித்த பகுதியில் மற்றுமொரு தாழமுக்கம் ஏற்பட்டுள்ளால், காற்றுடன் கூடிய கடும் மழை கால நிலை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து 400 கிலோ மீற்றர் தூரத்தில் தாழமுக்கம் நிலை கொண்டுள்ளது. (எ-11)

# திருக்குடும்பத்தின் முன் மாதிரிகையை எமது குடும்பங்களிலும் வாழுவோம்

ஏதேன் தோட்டத்தில் தன்னை விட்டுப் பிரிந்த மனித இனத்தை (தொ.நூ. 3:23) மீண்டும் உறவை ஏற்படுத்தி தன்னோடு இணைத்துக் கொள்ள விரும்பிய மூவொரு கடவுள். மனுக்குலம் மீட்பதற்காக நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் கபிரியேல் என்னும் வானதூதரை அனுப்பினார். அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமானவர், அவர் பெயர் மரியா. அவர்கள் இருவரும கலிலேயாவிலுள்ள நாசேரத்து ஊரிலிருந்து யூதேயாவிலுள்ள பெத்தலகேம் என்ற தாவீதின் ஊருக்கு வந்த போது தனது தலைமகனைப் பெற்றெடுத்தார். இவரே "பலமுறை, பல வகையில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள் இவ்விறுதி நாட்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்..." (எபி 1: 1-2) முன்னறிவிக்கப்பட்ட மெசியா மானிட மக்கள் நெடுங்காலமாக எதிர்பார்த்துக் காத்திருந்த "காலம்" கனிந்துள்ளது "மீட்பின் நாள்" காலத்தின் நிறைவு வந்து விட்டது. (மூ.ஆ.வ.எண் 11) நம்மோடு வளர்ந்து (லூக் 24: 29) நம்மோடு தங்கிய இறைவன் மனித இனத்தைத் தனது மதிப்பீடுகளின் வழியாக வளர்த்தெடுக்க நம்மை அழைக்கின்றார். "கடவுள் நம்மோடு" "இம்மானுவேல்" (மத் 1:22-23) எசாயா 7:14 என்ற பொருளை அறிந்து கொண்ட யோசேப்பு தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து ஆண்டவரின் தூதர் தமக்குப் பணித்தவாறே தம் மனைவியை ஏற்றுக் கொண்டார் என்ற நிலைபோல் நம் சமூகம் இன்னும் விழித்தெழாமல் இருப்பதால் மரியன்னையை ஏற்றுக் கொண்டு உண்மை நிலை ஏற்று அறிந்து வாழும் போது இயேசு பாலகன் இன்றும் என்றும் இம்மானுவேலாக இருக்கின்றார். எமது குடும்பங்களில் வாசம் செய்கின்றார். எனவே நாம் நமது குடும்பங்களைப் புனித குடும்பமாக மாற்ற அன்னை மரியாளிடமிருந்து தூய வாழ்வையும், யோசேப்பிடமிருந்து வாய்மை உணர்வையும், குழந்தை இயேசுவிடமிருந்து அன்புணர்வையும் பெறுவோம். அப்போது எமது குடும்பங்கள் ஒளி நிறைந்த அமைதி, சாந்தி நிலவும் நல் குடும்பங்களாக மாறும். நல்ல பலன் கொடுக்கும் விளை நிலமாகவும் அர்ப்பண வாழ்வுக்கு தேவையான நற்பிரஜைகள் உருவாகவும் வழி வகுக்கும்.



### அர்ப்பண ஆண்டில்

இவ் அழைப்பின் மேன்மையை சிறப்பைப் புரிந்து கொண்டு திருத்தந்தை பிரான்சிஸ் இவ்வாண்டை துறவற அர்ப்பண ஆண்டாக கடந்த கார்த்திகை மாதம் 30ஆம் திகதி, திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை பிரகடனப்படுத்தியுள்ளார்.

### இன்றைய சமூகச் சூழலில்

குடும்பங்கள் தான் ஒரு சமூக அமைப்பின் அடித்தளமாக உள்ளது. மனித மாண்பும் அந்தஸ்தும், சமத்துவமும் இழந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மனித மாண்பையும் அந்தஸ்தையும் கொடுத்து மனிதவுரிமைகளுக்கு வழிவகை செய்ய அடிப்படைத் தேவைகளையும், உரிமைகளையும் இழந்த மக்கள் உரிமை வாழ்வு பெறுவதற்காக வழிவகைகளைச்செய்து சமூகத்தின் ஏற்ற தாழ்வுகளை நீக்குகின்ற பண்புகளை வளர்க்க வாழ்ந்து காட்டிய திருக்குடும்பமதில் பிறந்த பாலன் இயேசு என்றும், எப்போதும் எம்மோடு உடனிருப்பதால் (கடவுள் நம்மோடு இம்மானுவேல்) குடும்பங்களில் இவ்வுறவு, வாழ்வு இறைவன் - மனிதனுககு மட்டுமல்லாமல் இறைமைக்குள்ளும் தனித்தன்மை பெற்று விளங்குகிறது.

இவ்வாறு இறைமைகளுள் ஒரு தனித்தன்மையுள்ள உறவு நிகழ்கிறது. நாம் வணங்கும் திருத்துவக் கடவுள் ஒரு குடும்பமாக செயற்படுகின்றார். எனவே மூவொரு இறைவன் குடும்ப உறவு கொண்டது. "சச்சிதானந்தா" (சத்ஸ்ரீ இறைவன், சித்ஸ்ரீ மகன், ஆனந்தாஸ்ரீ தூய ஆவி) இவ்வாறு அன்புறவில் இணைந்துள்ள இறை குடும்ப வாழ்வில் பங்கு பெற மனுக்குல இயலுலகும் அழைக்கப்பட்டுள்ளன.

மனித சமுதாயத்தில் இந்த இசைவான ஒருங்கிணைப்பு கொண்ட சமூக குடும்ப குழும வாழ்வில் வாழ அழைப்புப் பெற்ற அர்ப்பண வாழ்வுக்கு திருமுழுக்குப் பெற்ற அனைவருமே இறைவனால் அர்ச்சிக்கப்பட்டவர்கள்.

அதனால்பெரும்கொடையாகவும் குடும்ப வாழ்வுக்கும், தொழில் துறைக்கும், திருச்சபைப் பணிக்கும், இரக்கச் செயலிலும் வாழ அழைப்புப் பெற்றுள்ளோம். குறிப்பாக துறவற வாழ்வைத் தேர்ந்தெடுத்தவர்கள் சிறப்பான முறையில் இந்த அர்ப்பண வாழ்வு வாழ அழைப்புப் பெற்றவர்களாவர். எனவே இறை வார்த்தையில் மிளிரும் இயேசுவின் மதிப்பீடுகள் ஒவ்வொரு கிறிஸ்தவ குடும் பங்களில் தாக்கத்தை உணடு பண்ணி ஒவ்வொரு மனித நேய மதிப்பீடும் விதை போல ஊன்றி மரமாக உருவெடுக்க குடும்பம் துணை நிற்க வேண்டும்.

இதற்கு அர்ப்பண வாழ்வு வழி செய்ய 'குடும்பம்' ஒரு குட்டித் திருச்சபை எனும் நிலையில் இறையரசிற்கு முழு அர்ப்பணத்துடன் சான்று பகரட்டும.

"தாயும் தந்தையும் உள்ள ஒரு குடும்பத்தில் பிள்ளைகள் நன்கு வளர அவர் களுக்கென உள்ள உரிமையை நாம் மீண்டும் உறுதிப் படுத்த வேண்டும்." - திருத்தந்தை பிரான்சிஸ்

**தகவல் சகோ. செ.தொபியாஸ் CMSF. இளவாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிப்பா? புறக்கணிப்பா? தமிழரின் தனிப்போட்டி இது

தமிழரின் அரசியல் அபிலாசைகளுக்கு நியாயமான ஒரு தீர்வைப் பெறுவதில் இந்தத் தேர்தல் ஊடாக தமிழ் அரசியல் தலைமைகள் உலகுக்கு எடுத்துச் சொல்லப் போகின்ற செய்தி என்னவென்று புகலிடத் தமிழர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர். தமிழகத் தொலைக்காட்சியொன்றில் இடம்பெற்றுவரும் 'நீயா நானா' நிகழ்ச்சி தமிழர் மத்தியில் பிரபல்யமான ஒன்று.

இதேபோன்று தென்னிலங்கை மேடைகளை இன்று ஆக்கிரமித்து வருகின்ற 'நீயா நானா' போட்டி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும் மைத்திரிபாலவுக்கும் இடையிலானது. இவர்கள் இருவரும் இப்போது ஒருவகை 'குடுமிபிடி' சண்டையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இப்போது ஜனாதிபதியாக இருப்பதால் அரசாங்க உலங்குவானூர்திகளில் பறந்து பறந்து சென்று வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்று சூறாவளிப் பரப்புரையை மேற்கொண்டு வருகிறார்.

மைத்திரிபால சிறிசேன இன்று அமைச்சராகவும் இல்லாததால், எதிரணியினரின் நிதி வளங்களை மட்டுமே பயன்படுத்தி ஊர் ஊராக வீதிவழிப் பயணங்களை மேற்கொண்டு தமது கூட்டங்களை நடத்தி வருகிறார்.

மகிந்த தரப்பு அரச வாகனங்களில் ஆட்களை ஏற்றி கூட்டங்களுக்கு இறக்குகிறது. 'ரெடிமேட்' மேடைகளும், பாடசாலைச் சிறாரின் அணிவகுப்புகளும் அவரை மகாராஜாவாகக் காட்டுகின்றன.

விவசாய உபகரணங்களுடனான ஏழை மக்களின் தோழனாக மைத்திரிபாலவைச் சித்தரிக்கும் வகையில் தொழிலாள வர்க்கத்தினரின் பெரும் கூட்டங்களை எதிரணி நடத்தி வருகின்றது.

சிங்களப் பகுதிக் கூட்டங்களுக்கு நீல நிறச் சேட் அணிந்து செல்லும் மகிந்த, வடக்கு கிழக்குக்கு செல்லும்போது தனது 'கலரை' மாற்றி, வெள்ளை மயமாகத் தமது பிரபல்யமான சால்வையுடன் காட்சி கொடுக்கிறார்.

ஆனால், மைத்திரிபாலவுக்கு இப்போது அந்த பிரச்சினை இல்லை. சிங்களப் பிரதேசங்களில் மட்டுமே இவரது கூட்டங்கள் நடைபெறுவதால் வழமையான வெண்ணிற ஆடையில் தூய்மையான அரசியல்வாதியாகத் தம்மைக் காட்டி வருகிறார்.

தேர்தல் விஞ்ஞாபனத்தை 'நீயா நானா' முதலில் வெளியிடுவதென்ற பனிப்போரில் மைத்திரிபால வென்றுவிட்டார்.

ஜனவரி 8 ஆம் திகதி தாமே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவது உறுதியானது என்ற தீர்க்கமான முடிபில் இவரது தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஜே.ஆர்.ஜெயவர்த்தன தமது பதவிக்காலத்தின்போது ஆணைப் பெண்ணாக மாற்றுவதைத் தவிர மற்றெல்லா அதிகாரங்களும் தம்மிடம் இருப்பதாகக் கூறியதை நினைவூட்டும் வகையில் மைத்திரிபாலவின் தேர்தல் விஞ்ஞாபனம் ஒரு 'டயரி'யின் பாணியில் அமைந்துள்ளது.

உதாரணத்துக்கு , ஜனவரி 9 ஆம் திகதியிலிருந்து அடுத்துவரும் நூறு நாட்களும் தம்மால் என்னென்ன செய்யப்படும் என்பதை டயரியில் முற்கூட்டியே எழுதும் போக்கில் இது வரையப்பட்டுள்ளது.

அரை டசினுக்கும் அதிகமான அரசியல் கட்சிகளும் சில சொரியல்களும் ஒன்றுசேர்ந்து (இதுவரை) அமைத்திருக்கும் எதிரணியின் பொதுவேட்பாளராகக் களமிறக்கப்பட்டிருக்கும் மைத்திரிபால, இந்த டயரியில் சொன்னவைகளில் இருபத்தைந்து வீதத்தையாவது செய்து முடிக்க அவரது கூட்டுக் கட்சிகளின் தோழர்கள் அனுமதிப்பார்களாயின், உண்மையில் அது பெரும் சாதனையாக அமையும்.

தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை முற்கூட்டியே வெளியிடவிருந்த ஜனாதபதி மகிந்த ராஜபக்ச, காரணம் கூறாமல் பின்போட்டார். இந்த வாரத்தில் வெளிவரவிருக்கும் இதில் நிச்சயமாக பல விடயங்கள் மைத்திரிபாலவுக்கு சவால் விடும் பாணியில் அமையலாமென நம்பலாம்.

சிங்கள தேசத்துக்கு, அதன் அரசியல் நிலைப்பாட்டுக்கு, எதிர்கால சுபீட்சத்துக்கு என்னென்னவோ எல்லாம் செய்யப்போவதாக அறிவித்திருக்கும் மைத்திரிபால, தமிழர் தேசம் பற்றியோ, அங்கு வாழும் மக்கள் பற்றியோ எதுவுமே குறிப்பிடவில்லை.

தமிழீழமென்று ஒன்று இருப்பதாகக் கூறாவிட்டாலும், தமிழினம் என்று ஒன்று இருப்பதாகக்கூட குறிப்பிட விரும்பாத இவர், தற்செயலாக ஜனாதிபதியானால் தமிழர் பிரச்சினையை எவ்வாறு கையாளுவார் என்பதை எண்ணிப்பார்க்கவே முடியவில்லை.

தமிழீழத் தேசியக் கவிஞர் புதுவை இரத்தினதுரையின, 'நீங்கள் வேறு நாடய்யா, நாங்கள் வேறு நாடு,' என்பதை மைத்திரியும் அவரது தோழர்களும் நன்குணர்ந்தே இப்படியொரு தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்திருப்பார்கள யின், அதனைத் தமிழர்கள் வரவேற்றேயாக வேண்டும்.

அப்படியென்றால், ஜனவரி 8 இல் நடக்கப் போகின்ற ஜனாதிபதித் தேர்தல், தமிழ் மக்களின் தாயக தேசியக் கொள்கைக்கான கருத்தறி வாக்கெடுப்பாக இருக்குமென்று சொல்லலாமா?

இதுதான் சிங்களத்தின் இன்றைய நிலைப்பாடென்றால், இந்தத் தேர்தலில் தமிழர்கள் வாக்களிக்க வேண்டிய தேவை உண்டா? அல்லது இதனைப் புறக்கணிக்க வேண்டுமா? என்ற கேள்விகள் எழுகின்றன.

சிங்களத்தின் தேர்தல் நிலைப்பாட்டில் தமிழினம் என்ற ஒன்று அந்நாட்டில் இருப்பதையே காட்டிக் கொள்ள அந்தப் பேரினவாதம் விரும்பவில்லையென்றால், தமிழருக்கு அந்தத் தேர்தலில் அக்கறை காட்ட வேண்டிய தேவை ஏன் இருக்க வேண்டுமென்கின்ற ஒரு நியாயம் சிலரிடம் உள்ளது.

"மைத்திரிபால என்பவர் இன்னொரு மகிந்த" என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சில நாட்களுக்கு முன்னர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இருவரில் யார் வென்றாலும் அவர்கள் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதில்லை என்பதைப் போதிய ஆதாரங்களுடன் சுட்டிக்கூறிய கஜேந்திரகுமார், இந்தத் தேர்தலை தமிழர்கள் புறக்கணிக்க வேண்டியதற்கான முக்கிய காரணங்களையும் முன்வைத்துள்ளார்.

இவரது அறிவிப்பு வெளியாகிய 24 மணிநேரத்துள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜாவின் அறிக்கையொன்று அரைவேக்காட்டில் வெளியானது. "தமிழ் மக்கள் அனைவரும் தவறாது - கட்டாயம் இத்தேர்தலில் வாக்களிக்க வேண்டும்" என்று மாவையர் தமது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்பதை தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்னர் கூட்டமைப்பின் தலைமைப்பீடம் பகிரங்கப்படுத்துமெனவும் அவர் தெரிவித்துள்ளார். 'சில தினங்களுக்கு முன்னர்' என்ற கால அளவின் காரணத்தை புரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

முற்கூட்டியே இதனை அறிவித்தால் மறுதரப்பு (அனேகமாக மகிந்த ராஜபக்ச அணி) இதனை ஓர் ஆயுதமாகக் கையிலெடுத்து, நாட்டைப் பிரிக்கவும் இராணுவத்தைக் காட்டிக் கொடுக்கவும் விடுதலைப் புலிகளின் பினாமியான கூட்டமைப்புடன் மைத்திரிபால ரகசிய ஒப்பந்தம் செய்துவிட்டார் என்று கோஷமிட்டு தமிழருக்கு எதிரான இன்னொரு இனப்படுகொலையை ஆரம்பிக்கலாமென்ற அச்சமே இதன் அடிப்படைக் காரணமாக இருக்கலாம்.

அப்படியென்றால், தேர்தலில் மைத்திரிபால வெற்றிபெற நேர்ந்தாலும், இப்படியான களேபரத்தை மகிந்த தரப்பு உருவாக்க மாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? அப்படியொரு நிலைமை ஏற்படுமானால், அதனை சந்திரிக்க - ரணில்- மைத்திரிபால கூட்டு தடுக்க முன்வருமா?

"மைத்திரிபாலவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர் பிரச்சினை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. இது தமிழிலும் வெளியிடப்படவில்லை" என்று தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கும் சுரேக்ஷ் பிரேமசந்திரன், எதிரணி வேட்பாளர் மைத்திரிபால மீதான விருப்பமின்மையை நாசூக்காக வெளிப்படுத்தியுள்ளார்.

ஆனால், கூட்டமைப்பின் பிரதேச ரீதியான கூட்டங்களில் பங்கேற்றவர்களில் 98 வீதமானவர்கள் மைத்திரியையே விரும்புவதாக தெரிவித்ததாக மாவை சேனாதிராஜா அறிவித்துள்ளார்.

கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் தமிழரசுக் கட்சி ஆகியவற்றுக்கிடையே தேர்தல் நிலைமை தொடர்பான முரண்பாட்டை இங்கு கவனிக்கலாம்.

மறுபுறத்தில், தமிழர் தாயகத்திலுள்ள இராணுவத்தை அப்புறப்படுத்தவும், மகிந்தவை போர்க்குற்ற நீதிமன்றத்தில் ஏற்றவும் ரணிலும் மைத்திரியும் இரகசிய ஒப்பந்தம் செய்ததாக, தற்போது மகிந்த அணியில் சேர்ந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஓர் ஆவணத்தின் பிரதிகளை ஊடகங்களுக்கு விநியோகித்துள்ளார்.

கூட்டமைப்பின் ஆதரவை மைத்திரிக்குப் பெறுவதற்காகவே ரணில இதனைச் செய்ததாக அவர் மேலும் விபரித்துள்ளார். இது உண்மையானால் கூட்டமைப்பின் ஆதரவு யாருக்காக இருக்குமென்பதை சம்பந்தர் சொலலித்தான் மக்கள் அறிய வேண்டுமென்பதில்லை.

இது தொடர்பாக வி.ஆனந்த சங்கரி விடுத்த அறிக்கையொன்று நகைப்புக்கிடமானது. "தமிழர்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்று கூறும் தகுதியை கூட்டமைப்பு இழந்துவிட்டது" என்று தம்மை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரென அறிமுகப்படுத்தும் ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

பாவம் சங்கரி! வெறும் கடிதத் தலைப்பில் மட்டும் கூட்டணி என்ற அரசியல் கட்சியை நடத்திவரும் இவர், தமிழர் அரசியலிலிருந்து எப்போதோ தூக்கி வீசப்பட்டவர் என்பதை மறந்து, இன்னமும் அறிக்கைகள் ஊடாக அரசியல் சீவியம் நடத்த முனைவதை என்னென்று சொல்வது?

தெற்கில் அடுத்த சிங்கள ஜனாதிபதியைத் தெரிவதற்கான போட்டி நடைபெறும் வேளையில், தமிழர் தரப்பில் வாக்களிப்பா அல்லது புறக்கணிப்பா என்ற போட்டி புயல் வேகம் கொண்டுள்ளது.

தமிழரின் அரசியல் அபிலாஷைகளுக்கு நியாயமான ஒரு தீர்வைப் பெறுவதில் இந்தத் தேர்தல் ஊடாக தமிழ் அரசியல் தலைமைகள் உலகுக்கு எடுத்துச் சொல்லப் போகின்ற செய்தி என்னவென்று, புகலிடத் தமிழர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர்.



–பனங்காட்டான்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மக்களை மிரட்டினால் தேர்தலை இரத்துச் செய்வேன்

## தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த எச்சரிக்கை



(கொழும்பு)

*வடபகுதி மக்களில் எவரையேனும் அச்சுறுத்தி வாக்களிக்காமல் செய்யும் பட்சத்தில் தேர்தல் முழுமையாக இரத்துச் செய்யப்படும். இவ்வாறு எச்சரித்திருக்கிறார் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய. கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.*

இந்த நேர்காணலில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவத்தினரின் அராஜக நடவடிக்கைகளால் வட பகுதி மக்கள் தேர்தலை பகிஷ்கரிக்கத் தயாராகின்றனர் என வட மாகாணத்தின் உதவி தேர்தல் ஆணையாளர்கள் எவரும் இதுவரை எனக்கு தெரியப்படுத்தவில்லை.

இராணுவம் மக்கள் வாக்களிப்பை தடுக்கும் எனவும் நான் கருதவில்லை. எனினும் வடக்கின் நிலைமை தென்பகுதியை விட வித்தியாசமானது என்பது எங்களுக்கு தெரியும். வெளிநாட்டவர்கள் தென்பகுதியில் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்.

ஆனால் வடக்கில் எனது உத்தியோகத்தர்கள் கூட படையினரிடம் அனுமதி பெறவேண்டும். நாட்டின் ஏனைய பகுதிகளை விட அதிகளவான இராணுவஆட்சி வடக்கில் காணப்படுகின்றது.

வடக்கு மக்கள் வாக்களிக்க விரும்பினால், அந்த பகுதி அரசியல்வாதிகள் அவர்களை வாக்களிப்பதை தடுக்க விரும்பாவிட்டால், வேறு எவரும் மக்களை மிரட்ட முடியாது.

வடபகுதியில் மக்களை யாராவது மிரட்டி அச்சுறுத்தி வாக்களிக்க விடாமல் செய்தனர் எனத் தெரிய வந்தால் முழுத் தேர்தலையும் இரத்துச் செய்துவிடுவேன் என தேர்தல்கள் ஆணையாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

# ஜனநாயகத்தைப் பின்பற்ற மகிந்த அரசு தவறியுள்ளது

விடுதலைப்புலிகளை தோற்கடித்த பின்னர் அரசாங்கம் ஜனநாயகத்தை பின்பற்ற தவறிவிட்டது. எனவே மக்கள் அரசாங்கத்தின் மாற்றம் ஒன்றை எதிர்ப்பார்ப்பதாக ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அகழ்வாராய்ச்சி விரிவுரையாளர் தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் வீழ்ச்சிக்கு பினைர் நாட்டில் அரசியல் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை மக்கள் எதிர்பார்த்தனர். எனினும் அவை எதுவும் மேற்கொள்ளப் படவில்லை.

விடுதலைப்புலிகள் செயற்பட்ட காலத்தில் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்கு அரசாங்கத்துக்கு கஷ்டநிலை இருந்தது. எனினும் போருக்குப் பின்னர் அதனை நிறுவியிருக்க முடியும்.

இந்தக் காலகட்டத்தில் வறுமை ஒழிப்பு, குற்றச்செயல்களின் குறைப்பு, கல்வியில் முன்னேற்றம் என்பவற்றையே மக்கள் எதிர்ப்பார்த்தனர் என்றும் தம்பர அமில சுட்டிக் காட்டினார்.

எனினும் எதுவும் இடம்பெறவில்லை. எனவே மக்கள் அரசாங்கத்தில் மாற்றம் வேண்டும் என்று கோருவதாக அமில தேரர் தெரிவித்துள்ளார். (இ-5)

# மைத்திரிபால சிக்கித்தவிப்பு

ஆட்சி மாற்றம், ஜனாதிபதி மகிந்தவை மாற்றல் இவை இரண்டையும் மட்டுமே தமது கருப்பொருளாகக் கொண்டு பிரசாரம் செய்து வரும் எதிரணியினர் ஒரு நாட்டை நிர்வகிப்பது தொடர்பான எவ்வித மான அடிப்படைக் கொள்கை அறிவுகூட இல்லாதவர்கள் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிதுள்ளார்.

ஒரு நாட்டை நிர்வகிப்பது என்பதை இவர்கள் ஏதோ விளையாட்டுத்தனமாக நினைக்கிறார்கள். சந்திரிகாவும். ரணில் விக்ரமசிங்கவும் சரத் பொன்சேகாவும் தமது குறுகிய பழிவாங்கும் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக தாய் நாட்டைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாது மைத்திரிபால சிறிசேனவைப் பகடைக் காயாகப் பயன்படுத்தி வருவதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தான் ஜனாதிபதி ஆகிவிட்டால் எல்லாமே சரியாகிவிடும் என்பதாகவே மைத்திரிபால நினைத்துக் கொண்டிருக்கிறார். அவர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான கருத்துக்களை மேடைகளில் தெரிவித்து வருகிறார்.

தன்னைச் சந்திக்கும் தலைவர்களுடன் ஒவ்வொரு மாதிரி முன்னுக்குப்பின் சம்பந்தமில்லாது கதைக்கிறார். இத்தகைய ஒருவரால் ஒருநாட்டை எப்படி நிர்வகிக்க முடியும்?

இது விளையாட்டல்ல. நாட்டை நிர்வகக்க முதலாவதாக சரியான முறையல் வெளிநாட்டுக் கொள்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# அசாதாரண நிலைகளினால் வாக்களிப்பில் பாதிப்புவரும்!

## தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவிப்பு

நாட்டின் பல பகுதிகளிலும் பெய்து வரும்மழைகாரணமாகஉருவாகியுள்ள வெள்ளநிலைமை ஜனாதி பதி தேர்தல் வாக்களிப்புக்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று தேர் தல் கண்காணிப்பு அமைப்பு சுட்டிக் காடடியுள்ளது. தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவிற்கு எழுதி யுள்ள கடிதத்தில் இதனை சுட்டிக் காட்டியுள்ள சி.எம்.ஈ.வி. தேர்தல் கண்காணிப்பு அமைப்பு, நாட்டின் வடமத்திய மற்றும் கிழக்கு மாகா ணங்களில் வெள்ள நிலைமை வாக்களிப்பை பாதிக்கும் என குறிப்பிட்டுள்ளது. அந்த அமைப் பின் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளதாவது,

வெள்ளம் காரணமாக பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்கள் தங்களது வாக்களிப்பு நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ளனர். வாக்காளர்கள் அட்டைகள், அடையாளஅட்டைகள் போன்றவற்றைத் தவறவிட்டுள்ளனர். இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் வாக்களிப்பதற்காக எவ்வாறான நடவடிக்கைகளை தேர்தல் செயலகம் எடுத்துள்ளது என்பதை நாம் அறிய விரும்புகின்றோம். அத்துடன், இந்த மக்கள் வாக்களிப்பதற்கான விசேட ஏற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ளவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கிறோம் என்றுள்ளது. (எ-11)

# மைத்திரிபாலவுக்கு மக்கள் ஆதரவு அதிகரித்துள்ளது

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி குறித்த மக்களின் எண்ணங்களில் அதிகரிப்பு ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பாணந்துறை நகரசபையின் முன்னாள் தலைவர் நந்தன குணதிலக்க இந்தக்கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரங்களில் அக்கறை கொள்ளவில்லை என்று சுட்டிக் காட்டினார்.

எனவே அடுத்த 10 நா[illegible] தெளிவான மாற்றம் ஒன்[illegible]ர்ப்பார்க்க முடியும் என்று குணதிலக்க தெரிவித்தார்.

இதேவேளை முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் 8 பேரும் பிரதேச சபை உறுப்பினர்களும் நேற்று முன்தினம் எதிரணியில் இணைந்துள்ளனர்.

மேலும் பலர் விரைவில் எதிரணி [illegible]

# இன்று ஒரு தகவல்

## அர்த்தமில்லாத சண்டைகள்

கணவன்– மனைவி அன்பாக இருக்க வேண்டும். ஒருவரையொருவர் நன்றாக புரிந்து கொள்ள வேண் டும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வேண்டும்.

அது தான் நல்ல குடும்பம்.

இன்றைய உலகில் பல குடும்பங்களில் அர்த்தமில்லாத சண்டைகள் தான் அதிகம்.

கிராமப்புறங்களில் வேடிக்கையாக ஒரு கதை சொல்லுவார்கள்.

ஒரு ஊரில் ஒரு நபர் இருந்தான். வேலை வெட்டி இல்லாமல் சும்மாகவே இருந்தான். அவனுக்குத் திருமணம் முடித்து வைத்தார்கள். மனைவி அவரது வாழ்வில் இணைந்து கொண்டாள்.

"சும்மாவே உட்கார்ந்திருக்கிறியே…ஏதாவது சம்பாதிக்கிற வழியைப்பார்" என்றாள்.

"அதற்குத் தான் யோசனை செய்து கொண்டிருக்கிறேன். ஒரு அருமையான ஐடியா!" என்றார்.

"என்ன அது… சொல்லுங்கள்…" என்றாள் ஆவலோடு.

"ஒரு ஆட்டுக்குட்டி வாங்கப் போகிறேன்" என்றார்.

"அதை வாங்கி என்ன செய்யப் போகிறீர்கள்…" என்றாள் மனைவி.

"அந்த ஆட்டுக்குட்டி வளரும் பெரிதாகும்… அதன் பின் அதிகமான குட்டிகளை ஈனும்"

"சரி… அதற்குப் பின்…"

"அவைகளையெல்லாம் சந்தையில் கொண்டு போய் விற்றுவிட்டு… அந்தப் பணத்திற்கு ஒரு எருமை மாடு வாங்குவேன்"

"அது எதற்கு?"

"எருமை மாடு நிறைய பால் கொடுக்கும். அதைக் கொண்டு போய் பால் பண்ணையில் கொடுப்பேன் அல்லது நானே விற்பேன்… கைநிறைய பணம் கிடைக்கும். அதன் பின் ஒரு பசுமாடு வாங்குவேன்…பாலையும் விற்கலாம் …நாமும் போட்டிபோட்டுப் குடிக்கலாம்"

"அதேநேரம் அயல் தெருவில் இருக்கிற எங்கள் அம்மா வீட்டிற்கும் கொஞ்சம் பால்கொடுத்தனுப்பலாம்" என்றாள் மனைவி.

இந்த இடத்தில் கணவனுக்குக் கோபம் வந்துவிட்டது.

"அது எப்படி… உங்கள் அம்மா வீட்டிற்கு எதற்குக் கொடுக்க வேண்டும்? அதெல்லாம் முடியாது" என்றான்.

இந்த இடத்தில் சண்டை ஆரம்பமாகிவிட்டது.

சிறிது நேரம் இருவரும் சத்தம் போட ஆரம்பித்தார்கள்.

கடுமையான சண்டைநடப்பதை அறிந்து அயல் வீட்டுக்காரன் ஓடிவந்தான்.

அவனுக்குத் தெரியும்… வாங்காத மாட்டுக்காக இப்படி சண்டை போட்டுக்கொள்கிறார்கள் என்று அவன் ஓடி வந்து சொன்னான்.

"ஏண்டா… உன்னுடைய பசுமாட்டை ஒழுங்காக கட்டிப் போடக்கூடாதா? " என்றான்.

"என்னடா? சொல்கிறாய்?" என்றான் இவன்.

"உன்மாடு என்தோட்டத்தில் வந்துமேய்ந்துவிட்டது பயிரெல்லாம் நாசம்.பத்தாயிரம் ரூபாய் அளவிற்கு சேதம்.

அதைப் பெற்றுக் கொண்டு செல்வதற்காகத்தான் வந்தேன். பத்தாயிரம் ரூபா கொடு" என்றான்.

இவன்அரண்டுபோனான். அதன்பின் சொன்னான்,

"டேய்.. நான் இன்னும் மாடே வாங்கவில்லையே அது வந்து எப்படி உன் தோட்டத்தில் மேயும்? என்னடா? உளறுகிறாய்?" என்றான். "நீதான் இப்போது உளறிக்கொண் டிருக்கிறாய். மாடே வாங்கவில்லை. அதற்குள் எப்படி உன்மனைவி அவளுடைய அம்மாவீட்டிற்கு பால்கொடுத்து அனுப்பமுடியும்?" என்றார் அவர். நம் ஆளுக்கு இப் போது தான் புத்தி தெளிவுபட்டது.

அர்த்தமில்லாமலே சண்டைபோட்டுக் கொண்டிருக்கிறோமே என்பதை உணர்ந்தார்.

இது நம்முன்னோர்கள் சொல்லும்கதை சண்டையில்தான். அர்த்தமில்லையே தவிர கதையில் அர்த்தமுண்டு.

இல்லாத விடயங்களுக்காக சண்டைபோட்டுக் கொண்டு இல்லறத்தை வீணாக்கிக்கொண்டிருக்கிற மனிதர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள்.

ஒருத்தன் தன் மனைவியைப் பற்றி மாமனாரிடம் புகார் சொன்னானாம்.

"மாமா உங்க பொண்ணு அர்த்தமில்லாமல் சண்டை போடுகிறா எதற்கெடுத்தாலும் எடுத்தெறிந்து பேசுகிறா?"

அப்போ" நீங்க எப்படி மாப்பிள்ளை சமாளிக்கிறீங்க?"

"அவ எடுத்தறியிறது என்மேலே படாமல் ஒதுங்கி நின்று கொள்வேன்"

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சியா? நிலையான ஆட்சியா?

*சண்டே டைம்ஸ் பத்திரிகையில் நல்லாட்சியா? நிலையான ஆட்சியா? போர் ஆரம்பமாயிற்று! என்னும் தலைப்பில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் பிரசுரிக்கப்படுகிறது.*





எதிரணியினர் நல்லாட்சி என்பதையே தேர்தலுக்கான தமது மையவிடயமாக அறிவித்துள்ளனர். இந்த மூலோபாயம் வருகின்ற தேர்தலில் பலனளிக்குமா என்பதை கண்டுகொள்வதற்கு ஜனவரி 8 வரை நாம் காத்திருக்க வேண்டியிருக்கும். அது வெற்றியளிக்குமானால் அதற்கான பெருமை, வணமடுலுவவே சோபித தேரர் அவர்கட்கும் அர்ப்பணிப்புடன் கூடிய அவரது சிறிய குழுவான "சமூக நீதிக்கான தேசிய இயக்கம் -NMSJ என்ற அமைப்புக்குமே சேரும். ஆனாலும் அவரசப்பட்டு இதனைத் தீர்மானிப்பது முட்டைகள் பொரித்துக் குஞ்சுகள் வெளிவருவதற்கு முன்னரே அவற்றின் எண்ணிக்கையை தீர்மானிப்பது" போல் ஆகிவிடும்.

**நல்லாட்சி (Good Governance)**

1977 ஆம் ஆண்டிலிருந்தே நாட்டின் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்காக, அரசியல் எதிர்க் கட்சிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புகள் அனைத்தாலும் முன்வைக்கப்படும் பிரசித்த வாக்குறுதிகளில் ஒன்றே இந்த நல்லாட்சி என்ற விடயமாகும். 1977 ஆம் ஆண்டுத் தேர்தலுக்கான தனது தொடர் பிரசார இயக்கத்தை "தார்மீக இராச்சியம்" ஒன்றுக்கான பாதையில் நாட்டை கட்டியெழுப்புவது (Dharmishta Samajaya- தார்மீக சமுதாயம் - Righteous Society) என்ற வாக்குறுதியின் அடிப்படையில் ஆரம்பித்திருந்த ஜே.ஆர் ஜெயவர்த்தன அவர்கள் சிறிமாவோ அம்மையாரின் அப்போதைய ஆட்சியை தவறான ஒன்றென கண்டித்ததுடன் குறிப்பாக, 1970 ஆம் ஆண்டுக்கான அவரது பாராளுமன்ற ஆட்சிக் காலத்தை சட்டத்திற்குப் புறம்பான விதத்தில் 1975 இலிருந்து 1977 வரையில் நீடித்துக்கொண்டதை பாரதூரமான ஒன்றாக சுட்டிக்காட்டியுமிருந்தார்.

அந்த தேர்தலில் சிறப்பான வெற்றியை பெற்றுக்கொண்ட அவர் தனது பிரச்சாரத்தின்போது அளித்திருந்த வாக்குறுதிகளை அந்தப்படியே கைவிடவும் மறக்கவில்லை. மிகவும் துந்திரமாகச் செயற்பட்டிருந்த அவர் வழமையான பாராளுமன்ற தேர்தலொன்றுக்குப் பதிலாக மக்கள் ரீதியான வாக்கெடுப்பொன்றினை நடத்தியதன் மூலம் 1977 ஆம் ஆண்டுப் பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தினை ஆறு வருடங்களால் அதிகரித்தும் கொண்டார். சிறிமாவோ மற்றும் ஜெயவர்த்தன போன்றவர்களது துரதிஷ்டமானதும் ஜனநாயகத்திற்குப் புறம்பானதுமான இந்த நடவடிக்கைகள் அழிவுக்கேதுவான முன்னுதாரணங்களாக அமைந்துவிட்டது.

1995 ஜூலை 15 ஆம் திகதியளவில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்துவிடுவதாக 1994 இல் வாக்குறுதியளித்திருந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுங்கூட அதனை நிறைவேற்றத் தவறியதுடன் தனது 11 வருடகால பதவிக்குப் பிற்பாடு 2005 இல் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுக் கொண்டார்.

2005 இல் மகிந்த ராஜபக்சவும் அதே வாக்குறுதியினையே அளித்திருந்த போதிலும் அதே கதைதான் வரலாறாயிற்று. இவரோ வென்றால் தனது சேவைக் காலத்தை இரண்டு தடவைகளுடன் நிறுத்திக் கொள்ளாது தானும் தனக்குப் பின்னர் பதவிக்கு வருவோரும் எந்தவித வருடகாலவரையறைகளும் தேவையற்ற விதத்தில் பதவியைத் தொடர அனுமதிக்கும் விதத்தில் அரசியலமைப்பில் திருந்தங்கள் மேற்கொண்டார். இவ்விதமாக நல்லாட்சி சம்பந்தமான வாக்குறுதிகளை வழங்கிவிட்டு நிறைவேற்றாதுபோகும் அரசியல்வாதிகளையிட்டு களைத்துப்போயிருந்த சராசரிவாக்காளர்களுக்கு போதும் போதுமென்றாகிவிட்டிருந்தது, சிறிதும் ஆச்சரியத்திற்குரியதல்ல.

ஆனாலும் மனித மனங்கள் நம்பிக்கையை என்றும் இழந்து போவதில்லை. தற்போதும் நம்பிக்கை துளிர்விட எதிரணியானது மைத்திரி ஆட்சியொன்றின் மூலம் மீண்டும் "நல்லாட்சி" ஒன்றிற்கான உத்தரவாதத்தினை வாக்குறுதியாக வழங்குகிறது.

பேச்சிற்கே இடமில்லாத விதத்தில் இவ்விடயத்தை அரசாங்கம் முற்றிலும் தவிர்த்துவிடுவதன் மூலம் மௌனமாக [illegible] றுக்கொண்டிருப்பதுபோல் தெரிகிறது. தனது பங்கிற்கு அது "நிலையான ஆட்சி",நிஜமோகற்பனையோ"வெளிநாட்டு சக்திகளின் சதி மோசடிகளிலிருந்து நாட்டிற்கான பாதுகாப்பு" மற்றும் பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றை வழங்குவதாக இருக்கிறது. இவர்களில் எவரை நம்புவதென தீர்மானிப்பதற்கு ஏறக்குறைய ஐந்து வாரங்களே வாக்காளர்களுக்கு இன்னும் உள்ளது.

### நெருக்கமான போட்டி

தேர்தலைப் பற்றிய அறிவுபூர்வமான ஓர் ஊகத்தினடிப்படையில் அதன் போருக்குப் பிந்திய ஓரளவு கிட்டிய விபரமொன்றை தருவதற்கு போதிய நம்பகமான ஒரு தேர்தலாக இது இல்லாததுடன் நாம் சமூக பொருளாதார- புள்ளிவிபர ரீதியான ஆய்வாளர்களுமல்ல. எப்படியும் அண்டைக்கால தேர்தல் பெறுபேறுகளின் அடிப்படையில் 2014 நவம்பர் 23 ஆம் திகதி சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு எமது பங்களிப்பாக வழங்கிய கட்டுரையில் ஜனவரி தேர்தல் மிகவும் நெருக்கமான போட்டியாக அமைதியுமென சுட்டிக்காட்டியிருந்தோம். அதன்படி இன- மத சிறுபான்மை வாக்குகள் 30% வீதமும் சிங்கள பௌத்தவாக்குப் பலம் 70% எனவும் கணிப்பிடப்பட்டது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கபட்டதைத் தொடர்ந்து ராஜபக்சவின் பிரபல்யம் கொடிகட்டிப் பறந்த நேரத்தில் அதாவது 2010 ஆம் ஆண்டுத் தேர்தலில் 58% தேசிய வாக்குகளைப் பெற்றதன் மூலம் அவர் நேர்த்தியான வெற்றியைப் பெற்றிருந்தார். இதில் அவர் பெற்றிருந்த மொத்த சிங்கள பௌத்த வாக்குகள் 65% ஆகும். இதே பெறுபேற்று விகிதாசாரம் ஜனவரி 15 இலும் கிடைக்குமானால் தேசிய வாக்குகளில் அநேகமாக 46% வீதம் அவருக்கு கிடைப்பதன் மூலம் வெற்றி பெறுவதற்கு அவருக்கு தேவைப்படும் சிறுபான்மை வாக்குகள் 4% மட்டுமேயாகும் (இது ஒட்டுமொத்த சிறுபான்மை வாக்குகளின் 13% ஆகும்) 2010இல் ஏறக்குறைய முற்றிலும் தமிழ் தேர்தல் தொகுதி[illegible] 25% வாக்குகளை பெற்றிருந்த அதே நேரம் முஸ்லிம்களையே பெரிதும் கொண்ட கிழக்கின் தேர்தல் தொகுதிகளில் 40% வாக்குகள் அவருக்கு கிடைத்திருந்தது.

அண்மையில்இடம்பெற்றமாகாண சபைத் தேர்தல் பெறுபேறுகளின்படி சிறுபான்மை வாக்காளர் மத்தியில் ராஜபக்சவுக்கான செல்வாக்கு பெருமளவில் இல்லாது போனது மட்டுமல்லாமல் முன்னர் கூறிய அந்த 13% மேலதிக வாக்குகளும் நிச்சயமானதாக இல்லை. அண்மைக்கால தேர்தல்பெறுபேறுகளின்படி 2010 இல் அவர் பெற்றிருந்த அந்த மொத்த சிங்கள- பௌத்த வாக்குகளான அந்த 65% மேற்கொண்டும் அவருக்கு கிடைக்காது என்பது அவருக்கான மற்றுமொரு தேர்தல் சாபமாகும்.

### சிறிய கட்சிகள்

ராஜபக்ச பிரபல்யமிழந்துவரும் காரணியொன்றே இந்த முறை தேர்தலில் போட்டி நெருக்கமாகி இருப்பதற்கு போதுமானதாகும். அனுபவம் வாய்ந்த பழைய 'SLFP' அரசியல்வாதியான மைத்திரிபால சிறிசேனாவின் முற்றிலும் எதிர்பாராத வருகையானது அவருக்கு சவாலாக அமைந்ததில் போட்டி நெருக்கமானதற்கு மேற்கொண்டும் சில காரணங்கள் உள்ளன. கிராமப்புற பௌத்த வாக்காளர்களுடன் ஒட்டுமொத்த 'SLFP' வாக்காளர்களுள் ஒரு பகுதியினரிடமும் ஆதரவுக்காக வேண்டுகோள் விடுத்திருந்த சிறிசேனாவுக்கு 'JHU' வின் முழுமையான ஆதரவு உண்டு. இந்த மூன்று காரணிகளும் ராஜபக்சவின் சிங்கள பௌத்த ஆதரவு தளங்களை அரித்துவிடக்கூடியவையேயாகும்.

ராஜபக்சவுக்கு எதிராக மக்கள் ஆதரவைத் திரட்டுவதாக 'JVP' பகிரங்க அறிக்கை விட்டிருந்தது. சிறிசேனாவுக்கு 'JHU' க்குமிடையில் அண்மையில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வுஒப்பந்தம் அதேபோன்ற ஒப்பந்தமொன்றுக்குள் 'JVP' யை கொண்டு வருவதற்கான வழியொன்றை ஏற்படுத்தியதாயிற்று. அதாவது 'UNP' உட்பட ஏனைய மாற்றுக் கட்சிகளையும் ஒரே கூட்டணியாக இணைக்கும் பொது எதிரணியின் பிரதான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் புறம்பாக 'JHU' வுடன் மேற்கொள்ளப்பட்டது போன்ற மற்றுமொரு கிளை உடன்படிக்கையை செய்துகொள்ளலாம்.

'TNA' தனது முடிவை அறிவிப்பதற்கான தருணத்தைத் தொடர்ந்தும் நீடித்துக்கொண்டே போனாலும் சிறிசேனாவுக்கு வாக்களிக்கும்படி கூறுவதற்கான எந்தவொரு சிறிய அறிகுறியைத் தானும் அது வெளிப்படுத்துமென நம்புவதற்கு எதுவித காரணமுமில்லை. இவ்வித அறிகுறிகளெதனையும் அது வெளிப்படுத்தாது போனால் "இரு தரப்புகளுமே அணுகுவதற்கு உகந்தவை அல்ல" என்றவித அணுகுமுறை போன்ற ரீதியில் உள்ளக இணை அரசியலுக்குள் ஆழமாக நுழைவதற்கான சந்தர்ப்பத்தைள அது இழந்து போகும் ஆபத்தும் உள்ளது. பிரபல்யமான ஒருசில முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள் சிறிசேனவிக்கான தமது ஆதரவினை பகிரங்கமாக அறிவித்ததுடன் மேலும் கூடுதலானவர்களும் இணைந்து கொள்ளக்கூடும் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது. ராஜபக்சவுக்கு பெரிதும் சாதகமற்ற விதமான அறிகுறிகளுங்கூட மலைநாட்டு தமிழ் சமூகத்திடமிருந்து இடையிடையே வெளிப்பட்டுக் கொண்டுதானிருக்கிறது.

### ஆறுவருடங்களா? அல்லது எட்டு வருடங்களா?

நெருங்கியவிதமான இடைவெளிகளில் ராஜபக்ச வெற்றிபெற்றாலுங்கூட அவர் தனது பதவியை தொடர்பவராகவே இருப்பார். தனது புதிய பதவிக்கான காலம் ஜனவரி தேர்தல் பெறுபேறுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் ஆரம்பமாகுமா? என்ற விடயத்தை ராஜபக்ச தெளிவற்றதாகவே வைத்திருக்கிறார். நாம் இப்போது அரசியலமைப்பு சம்பந்தமான விடயங்களையிட்டு உச்ச நீதிமன்றத்தின் கருத்தினைக் கேட்டு பெற்றுக்கொள்ளும் ஜனாதிபதியவர்களின் முன்னுதாரணமொன்றினையும் நாம் ஏற்கனவே பெற்றிருக்கிறோம்.

அதன்படி தனது நடப்பு ஆட்சிக் காலத்தின் எஞ்சிய கடைசி 2 வருடங்களையும் முதலில் முடித்துக் கொண்டு பின்னர் தனது 3 ஆவது தடவைக்கான பதவிக்காலமாகிய அடுத்த ஆறு வருட ஆட்சியை ஆரம்பிப்பது என்ற விதிமுறையை அறிவிக்கும்படி நீதிமன்றத்தை கோர அவரால் இயலும். ராஜபக்சவுடைய தேர்தலுக்குப் பிந்திய இதுபற்றிய நோக்கங்கள் மீதான சந்தேகத்திற்கிடமில்லாத பதில் ஒன்றினைக் க்ண்டிப்பான முறையில் கேட்டுப் பெற்றுக்கொள்ளும் உரிமை வாக்காளர்களுக்கு இருக்கிறது.

சிறிசேனா அவர்கள் வெற்றி பெற்றாலுங்கூட ஜனாதிபதிக்கான ஆட்சியதிகாரத்தைப் புதியவரிடம் கையளிப்பதற்கு முன்னர் தனது நடப்பாண்டின் இறுதி இரண்டு வருட காலப்பகுதி ஆட்சியைத் தொடரும் படியான அனுமதியை நீதிமன்றத்திடம் ராஜபக்ச கேட்டுப்பெற்றுக் கொள்ளவுங்கூடும். எப்படியும் தேர்தலுக்குப் பிந்தியதும் மாற்றமுற்றிருப்பதுமான தற்போதைய சந்தர்ப்ப சூழ்நிலைகளிலும் எதுவித தண்டனைக்கும் குற்ற உணர்வுக்கும் தப்பித்து எதேச்சையாகச் செயற்படும் இப்போக்கினை பொதுமக்களின் தொடர்ந்து சகித்துக்கொள்ள மாட்டார்கள் என்பதால் அவரது இவ்விதமான சிந்தனை வெறும் பரவசக் காட்சியடிப்படையிலான ஒரு கற்பனையாகவேதான் இருக்கும் எனலாம்.

(தொடரும்)

**தமிழில்-யோகர்**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 16 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் அடங்கலாக 574 முறைப்பாடுகள்

**(கொழும்பு)—ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து இது வரையில் 16 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் அடங்கலாக 51 தேர்தல் வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.**

தேர்தல் வன்முறைகளில் ஈடுபடுவோர் குறித்து பொலிஸ் நிலையங்களில் செய்யப்படும் முறைப்பாடுகளுக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை எனவும் இவ்வாறான நிலைமை தொடரும் பட்சத்தில் வன்முறை சம்பவங்கள் மேலும் அதிகரிக்க வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் தேர்தல் வன்முறைகள் குறித்து இதுவரையில் மொத்தமாக 574 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் நபர்கள் மீதான தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல்கள் குறித்து 43 முறைப்பாடுகளும் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் 8 முறைப்

## கபே பட்டியல்

பாடுகளும் அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் மற்றும் நியமனங்கள் வழங்கல், இடமாற்றங்கள் போன்றவை குறித்து 146 முறைப்பாடுகளும் சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் 377 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

தேர்தல் வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படுகின்ற போதிலும் அவர்கள் சாதாரண குற்றங்களை இழைத்தவர்கள் போன்று விசாரணை செய்து விரைவில் விடுவிக்கப்படுகின்றனர்.

இதனால் வன்முறை சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் அச்சமின்றி நடமாடுகின்றனர். இந்த நிலைமை மிகவும் மோசமான வன்முறை சம்பவங்களுக்கு வித்திடுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலோடு ஒப்பிடுகையில் இம்முறை பாரியளவிலான அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் காணப்படுகின்றது. அத்தோடு சட்டத்தை மதிக்காமல் அச்சமின்றி வன்முறைகளில் ஈடு படுவதானது சுதந்திரமான தேர்தலுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

பிரதியமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம இவ்வாறான வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டமை குறித்து முறைப்பாடு செய்யப்பட்டது. ஆனால் ஆரம்பத்தில் அவருக்கு எதிரான விசாரணைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை. பின்னர் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. இருந்தும் அவர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். இவ்வாறான நிலைமைகளை கருத்திற் கொண்டு சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாதது நியாயமான தேர்தலை உறுதி செயவதற்கு உரிய தரப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# நாடு பாரிய பொருளாதார வீழ்ச்சியில் பய்ணிக்கிறது

## அநுரகுமார தெரிவிப்பு

நாடு அண்மைய கால வரலாற்றில் பாரிய பொருளாதார வீழ்ச்சியை எதிர்நோக்கியிருப்பதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார். பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் பணம் கொள்ளையிடப்பட்டமையே இந்த பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம் எனவும் அவர் கூறியுள்ளார். மக்கள் அதிகாலையில் எழுந்ததும் யார் எந்த பக்கம் தாவினர், யார் தாவ போகின்றனர் என்பதையே பார்க்கின்றனர். என்ன அரசியல் இது?. பணத்திற்கு விற்பனையாகும் நாடாளுமன்ற உறுப்பினர்களே நாட்டில் இருக்கின்றனர்.

பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாவுக்கு விற்பனையாகிறார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றால் 5 கோடி ரூபா. திஸ்ஸ அத்தநாயக்கவை பாருங்கள். மூன்று நாட்களுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் அரசாங்கத்தை தோலுரித்தார். மூன்று நாட்களின் பின்னர் அரசாங்கத்திற்கு சென்று அரசாங்கத்தின் செயற்பாடுகளை வர்ணித்து வருகிறார் எனவும் அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 240 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 500 | 400 |
| தக்காளி | 280 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 |
| கோவா | 150 | 140 |
| கரட் | 220 | 200 |
| பூசணி | 50 | 60 |
| புடோல் | 120 | 140 |
| வாழைக்காய் | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 130 | 140 |
| பாகற்காய் | 350 | 320 |
| வெண்டிக்காய் | 160 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 |
| பயற்றங்காய் | 300 | 240 |
| லீக்ஸ் | 350 | 320 |
| பீற்றூட் | 220 | 240 |
| கறிமிளகாய் | 400 | 260 |
| முருங்கைக்காய் | — | — |
| போஞ்சி | 350 | 240 |
| கத்தரிதம்புள்ள | 250 | 20 |
| கீரை – 1 பிடி | 60 | 50 |
| தேசிக்காய் | 140 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 35-40 |
| இராசவள்ளி | 160 | 140 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 235

சுதன் சுதர்சன்





பிச்சைக்கார நலச்சங்கம்

மேஸ்திரி பயங்கர குடிகாரணா இருப்பான் போல!




துஷா துஷா

உயிர் இல்லாத மலரை கூட நாம் நேசிக்கிறோம்... ஆனால் நமக்காக உயிரையும் கொடுப்பவர்களை நேசிக்க ஏன் யோசிக்கிறோம்....!? அதனால நேசிங்க...



கோழி,ஆடு,,மீன்

டொறின் மன்மதநாயகம்




சுஜன் மகேந்திரன்




மயூரதன் மயூரன்

"மேனேஜர், உங்க ஹோட்டல ரூம் 708– லேயிருந்து பேசுறேன்"

"சொல்லுங்க ஸார், என்ன வேணும்?"

"எனக்கும் என் பொண்டாட்டிக்கும் பெரிய வாக்குவாதம். ஜன்னல் வழியா வெளியா குதிச்சுருவேன்னு மிரட்டறா.."

"ஸார் இது உங்க பர்ஸனல் விடயம்..."

"முட்டாள், ஜன்னல் திறக்க வரலை, சீக்கிரம் அதை திறக்க ஒரு ஆளை அனுப்பு"

**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதய வைத்திய நிபுணராக வேண்டும்

## ஆங்கில மொழிமூலம் உயிரியல் பிரிவில் யாழில் முதலிடம் பெற்ற மாணவன் தெரிவிப்பு



எதிர்காலத்தில் இருதய வைத்திய நிபுணராக வந்து எமது மக்களுக்கு சேவையாற்றுவதே எனது இலட்சியம் என ஆங்கில மொழி மூலம் உயிரியல் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மாண வன் முகுந்தன் தர்சிகன் தெரிவித்தார்.

நான்எனதுகல்வியினைகடினமான முறையில்கற்காமல்இலகுவானமுறையில் சாதாரணமாக கற்றேன்.

எதனையும் கஷ்டமென்று பாராமல் எதுவும் இலகுவானதே என்ற சிந்தனையுடன் உடம்பினை வருத்தாமல் பாடசாலைக்கல்வியினை முதன்மைப்படுத்தியும் தனியார் கல்வியினை முறைப்படியும் பயின்றும் வந்தேன்.

சாரணர் அமைப்பில் இருந்து கொண்டுஜனாதிபதிவிருதினை பெற்றதோடுகூடைப்பந்து அணியின்தலைவராகவும் இருந்துள்ளேன்.

தனியே கல்வியில் மட்டும் நாட்டம் காட்டாது விளையாட்டிலும் ஆர்வம் காட்ட வேண்டும். அதனால் தான் ஒரு இயல்பு நிலையினை அடைய முடியும். விளையாட்டில் ஆர்வம் காட்டவேண்டும் என்பதற்காக எல்லாவற்றிலும் பங்குபற்றாமல் பிடித்த ஒரு விளையா ட்டி னையும் அமைப்பினையும் தெரிவு செய்து அதில் ஈடுபாடு காட்டுவது நல்லது.

எல்லாவற்றுக்கும் மேலாக நேர முகாமைத்துவம் என்பது முக்கியமானதாகும் .விளையாட்டுக்கும் கல்விக்கும் என நேரம் ஒதுக்கி செயற்பட்டு கல்வியில் அதிக ஈடுபாடு காட்டினால் தேசிய ரீதியில் மிளிர முடி யும் என அம்மாணவன் மேலும் தெரிவித்தார். (இ-4)

# சாதிக்கும் எண்ணம் மேலோங்கினால் வெற்றி

## ஆங்கில மொழிமூலம் கணிதப்பிரிவில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற மாணவன் அறிவுரை



எமக்கு கிடைக்கும் அனைத்து வளங்களினையும் சரியான முறையில் பயன்படுத்தி சாதிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் கல்வி கற்றால் சிறந்த பெறுபேற்றை பெற முடியுமென ஆங்கிலமொழிமூல கணிதப்பிரிவில்தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் பாக்கியராஜ் டாருக்சன் தெரிவித்தார்.

கல்வியில் மட்டுமே எமது கவனத்தைச் செலுத்தி அன்று படிப்பதனை அன்றே மீட்டு படிப்பதன் மூலம் படித்தவற்றை இலகுவில் நினைவில் கொள்ளமுடியும்.

ஒவ்வொரு மாணவனின் மனதிலும் நான் படித்து சாதிக்க வேண்டுமென்ற கனவு இருந்தால்தான் கல்வியில் மிளிரவேண்டும்.

பாடசாலை மற்றும் எனது வீட்டில் காணப்பட்ட வளங்களினை கல்விக்காக சரியான முறையில் திட்டமிட்டு பயன்படுத்தியிருந்தேன்.

அதிபர், ஆசிரியர், பெற்றோர்களின் ஊக்கமும் விடாமுயற்சியுமே என்னை இன்று இந்த நிலைக்கு கொண்டு சென்றுள்ளது.

அன்று படிப்பதனை அன்றே படித்து படித்தவற்றினை நினைவில் நிறுத்திக்கொள்ளவேண்டுமென்றே எதிர்கால மாணவர்களுக்கு சொல்ல விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# எனது குறிக்கோளிலிருந்து விலகாமையால் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை அடைந்தேன்

## வர்த்தகப் பிரிவில் கிளிநொச்சியில் முதலிடம் பெற்ற மாணவி



(கிளிநொச்சி)

இடம்பெயர்ந்த நிலையிலும் பல்வேறு தடைகள் மத்தியிலும் எனது குறிக்கோளிலிருந்து விலகாமல் கல்வியைக் கற்று சிறந்த பெறுபேற்றை அடைந்து முகாமையாளராக வேண்டுமென்பதே எனது இலட்சியம் என வர்த்தகப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற கிளி/ மத்திய கல்லூரி மாணவி தியாகலிங்கம் தயந்திகா வலம்புரிக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது பேட்டியில், வன்னி யுத்தத்தினால் இடப்பெயர்வுகளைச் சந்தித்த போதிலும் பெற்றோரின் அயராத உற்சாகத்தினாலும் எனது முயற்சியாலும் வர்த்தகப் பிரிவில் 3 பாடங்களிலும் ஏ திறமைச் சித்தியை பெற்றமையையிட்டு மகிழ்ச்சி கொள்கின்றேன்.

எனது கல்வியைத் தொடர்ந்து கற்று முகாமையாளராக வரவே ண்டுமென்பதே எனது விருப்பமாகும்.

விடுமுறை நாட்களில் எனது பிரத்தியேக வகுப்புக்களைத் தொடர்வதற்கு யாழ்ப்பாணக் கல்வி நிலையங்களுக்கு சென்று வந்தேன்.


எனது பாடசாலை அதிபர் கல்விக்கு மிகவும் உந்து சக்தியாக இருந்தார்.

பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் பாடங்களை அன்றாடமே மீட்டுக் கொள்வேன்.

எனது தந்தையார் விவசாயம் செய்பவர். எனது உறவினர்கள் மற்றும் பெற்றோரின் உதவியுடன் எது கல்வியைத் தொடர்ந்தேன். அதனால் சிறந்த பெறுபேற்றை அடைந்தேன் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# பாடங்களை அன்றன்றே படித்தால் பரீட்சையை எதிர்கொள்வது சுலபம்

## கணிதப்பிரிவில் கிளிநொச்சியில் முதலிடம் பெற்ற மாணவன்



பாடசாலையில் படிக்கும் பாடங்களை அன்றன்றே படித்தால் பரீட்சை நேரங்களில் ஏற்படுகின்ற சுமையைக் குறைக்க முடியும்.இதுவே எனது சிறந்த பெறுபேற்றுக்குக் காரணம் என கிளிநொச்சி மாவட்டத்தில் கணித ப்பிரிவில் முதலிடம் பெற்ற மாணவன் குணரத்தினம் கதீஸ் தெரிவித்தார். மாவட்டத்தில் முதலாமிட த்தை யும் தேசிய மட்டத்தில் 36 ஆவது இடத்தையும் பெற்ற கதீஸ் மேலும் கூறுகையில்,

பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் ஊக்குவிப்பே எனது இந்தப் பெறுபேற்றுக்கு காரணமாகும். எல்லா ஆசிரியர்களிடமும் கற்கவேண்டும் என்ற தேவை இல்லை.படிக்கின்ற பாடங்களை அன்றைய தினமே மீட்டல் செய்வது மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது.

தரம் 1 இல் இருந்து தரம் 11 வரை கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற நான் உயர் தரத்தை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பயின்றேன்.

கற்பது மாத்திரமின்றி கடந்த கால வினாத்தாள்களை நிறையவே செய்து பயிற்சி பெற்றிருந்தேன்.

இது எந்தவிதமான கேள்விகளையும் எதிர்கொள்ள உதவியாக அமைந்தது.மேலும் என்னை ஊக்குவித்த பெற்றோர், ஆசிரியர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின் றேன்.

எதிர்காலத்தில் சிறந்தவொரு பொறியியலாளராக வருவதே எனது குறிக்கோள் என்று மாணவன் மேலும் தெரிவித்தார். (இ-2)

# கணக்காளராக வேண்டும் என்பதே எனது இலக்காகும்

## வர்த்தக பிரிவில் யாழில் முதலிடம் வந்த மாணவி விபரிப்பு




பாடசாலை மற்றும் தனியார் நிறுவன கல்வியை உரிய முறையில் கற்றதன் மூலமே என்னால் சிறந்த பெறுபேற்றினை பெறமுடிந்தது என வர்த்தகப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய ரீதியில் 5ஆம் இடத்தையும் பெற்ற யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி கௌசணா பாலசுந்தரம் தெரிவித் தார்.

கடின முயற்சியுடன் கல்வி கற்பதன்மூலம்யாரும் கல்வியில் சாதிக்க முடியும். பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிலையத்தில் கற்ற கல்வியினை அன்றன்றே மீட்டுக் கற்க வேண்டும்.

எதிர்காலத்தில் கணக்காளராக வந்து எனது மக்களுக்கு சேவை யாற்றுவதே எனது விருப்பம். கல்வியில் சாதிக்க வேண்டுமென்ற உறுதியுடன் கல்வி கற்றால் சாதிக்க முடியும் என அம்மாணவி தெரிவித்தார். (இ-4)

# மனம் வைத்து கற்றால் கல்வியில் மிளிர முடியும்

## உயிரியல் பிரிவில் கிளிநொச்சியில் முதலிடம் பெற்ற மாணவன்



கஷ்டங்கள் காணப்படுகின்ற போதிலும் சாதிக்க வேண்டுமென்று மனம் வைத்தால் கல்வியில் மிளிர முடியுமென கிளிநொச்சி மாவட்டத்தில் உயிரியல் பிரிவில் முதலிடம் பெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவன் இராமமூர்த்தி ஜெனத் தெரிவித்தார்.

பாடசாலையில் நடைபெறுகின்ற செயன்முறைகளையும் பாட சாலை மற்றும் தனியார் நிலைய கல்வியினையும் விளங்கிப்படிக்க வேண் டும்.

உயரியியல் பாடத்தினை காலை வேளையிலும் ஏனைய இரு பாடத்தை இரவு வேளையிலும் கற்பது எனது வழமை. முக்கியமான கணிதம் சார்ந்த பாடங்களை அன்றன்றே திரும்ப திரும்ப செய்து பார்த்தல் அவசியமானதாகும்.


ஆசிரிய கைநூலினை பின்பற்றியும் கடந்தகால வினாப் பத்திரங்களை மீட்டிப்பார்த்து எனது சுய கற்றலினை தொடர்ந்தேன்.

எனது பிரதேசமான கிளிநொச்சி பெரிய பரந்தனில் மின்சாரம் கிடைத்து 7 மாதங்களேயாகும். மின்சாரம் இல்லாத நீண்ட நாட்களில் அதனை ஒரு குறையாக பொருட்படுத்தாமல் மனம் வைத்து படித்து இன்று இந்நிலைக்கு வந்துள்ளேன்.

எதிர்காலத்தில் வைத்தியராக வந்து எனது மக்களுக்கு சேவையாற்றுவதே எனது விருப்பமாகும் என அம் மாணவன் மேலும் தெரிவித்தார். (இ-4)

# வைத்தியராக வேண்டும் எனது விருப்பம் அதுவே

## உயிரியல் பிரிவில் யாழில் மூன்றாமிடம் வந்த மாணவி விபரிப்பு



எதனையும் பாடமாக்காமல் விளங்கிப் படிப்பதன்மூலமே சாதிக்க முடியுமென உயிரியல் பிரிவில் மாவட்ட மட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்ற வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி நர்மதா திருஞானச் செல்வன் தெரிவித்தார்.

அதிபர், ஆசிரியர், பெற்றோர்களுக்கு முதலில் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அன்று கற்பதனைஅன்றே மீண்டும் கற்று அனைத்தையும் பாடமாக்காமல் விளங்கிப்படிக்க வேண்டும். வினாவிடைகள் செய்து பார்த்து கற்பதன்மூலம் பரீட்சையினை இலகுவில் எதிர்கொள்ளமுடியும்.

எதிர்காலத்தில் வைத்தியராக வந்து எனது மக்களுக்கு கடமையாற்றுவதே எனது இலட்சியம் என அம் மாணவி தெரிவித்தார். (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றுமொரு விமானம் பயணிகளுடன் மாயம்

(ஜகார்த்தா)

**இந்தோனேசியாவில் இருந்து 155 பயணிகளுடன் சிங்கப்பூர் சென்ற விமானம் ஒன்று நடுவானில் மாயமான தாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. ஏர்ஏசி யாவிற்குச் சொந்தமான பயணிகள் விமானம் ஒன்று இந்தோனேசியாவில் இருந்து சிங்கப்பூர் புறப்பட்டுச் சென் றது. 155 பயணிகளுடன் சென்ற இந்த விமானம் நேற்று காலை 8.30 மணி அளவில் சிங்கப்பூர் சென்றடைந்திருக்க வேண்டும். ஆனால் வழக்கமான பாதையிலிருந்து விமா னம் விலகிச் சென்றுள்ளதாகவும் அதன் தகவல் தொடர்பு காலை 6.30 மணி முதல் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**



மாயமான விமானத்தை அதிகாரிகள் தீவிரமாக தேடி வருகின்றனர். ஏற்கனவே இந்தாண்டு மார்ச் மாதம் 239 பயணிகளுடன் மாய மான மலேசிய விமானத்தி ற்கு என்ன நடந்தது என்ற குழப்பம் நீடித்து வருகிறது.

இந்நிலையில், தற்போது மீண்டும் ஒரு விமானம் மாயமாகியுள்ளது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படு த்தயுள்ளது. மாயமான விமா னத்திற்கு என்ன ஆனது, அதில் பயணம் செய்தவர்க ளின் கதி என்ன என்று அந்த விமானத்தில் பயணம் செய் தவர்களின் உறவினர்கள் கவலையில் ஆழ்ந்துள்ள னர்.

இதற்கிடையே, தொடர் ந்து சிங்கப்பூர் விமான நிலைய இணையத்தளத்தில் மாய மான விமானம் தாமதம் என அறிவிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**ஜாவா கடலில் ஏர்ஏசியா விமானப் பாகம்?** மாய மான ஏர்ஏசியா விமானம் பெலிங்டங் தீவு அருகே ஜாவா கடற்பகுதியில் விழுந்துள்ள தாக தகவல்கள் வெளியாகியு ள்ளன. அப்பகுதியில் கண் டெடுக்கப்பட்ட பாகங்கள் மாயமான விமானத்தின் பாகங்களா? என ஆய்வு நடை பெற்று வருகிறது. (இ-5)

**விமானம் உயரத்தில் பறக்க கேட்டுக்கொள்ளப்பட்டதாம்**

மாயமான ஏர்ஏசியா விமா னம் மேக மூட்டத்தை தவிர் க்க மிகஉயரத்தில் பறக்க கேட்டுக்கொள்ளப்பட்டது என்று அதிகாரிகள் தரப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவின் சுராபாயா நகரில் இருந்து சிங்கப்பூருக்கு 162 பேருடன் புறப்பட்டுச் சென்ற விமானம் நடுவானில் மாயமானது. காலை 8.30 மணிக்கு சிங் கப்பூர் சென்றடைய வேண் டிய ஏர்ஏசியா விமானம், விமான கட்டுப்பாட்டு அறை தகவல் தொடர்பில் இருந்து விலகியது. காலை 7.24 மணியளவில் விலகிச்சென் றது.

துண்டிப்பை அடுத்து மாய மான ஏர்ஏசியா விமான த்தை தேடும் பணியில் அதி காரிகள் தீவிரம் காட்டி வரு கின்றனர்.

இதற்கிடையே மாய மான விமானம் ஏர் ஏசியா விமானம் ஜாவா கடலில் விழுந்தது என்று தக வல்கள் தெரிவித்துள்ளன.

பெலிடன் கடற் பகுதியில் விமானத்தின் பாகங்கள் கிடப்பதாக தெரிவிக்கப்ப ட்டுள்ளது. (இ-5)




## இராணுவத் தாக்குதலில் 39தீவிரவாதிகள் மரணம்

ஆப்கானிஸ்தான் எல் லையை ஒட்டிய பழங்குடி யின பகுதிகளில் பாகிஸ்தான் விமானப் படை, இராணுவம் நடத்திய தாக்குதல்களில் 39 தீவி ரவாதிகள் கொல்லப்பட்டனர்.

வடக்கு வஜிரிஸ்தானின் தத்தாகெல்பகுதியில்நேற்றுமுன தினம் மாலை தீவிரவாதிக ளின்முகாம்களைகுறிவைத்து பாகி ஸ்தான் போர் விமானங்கள் குண்டுமழை பொழிந்தன.

அதேநாளில் கைபர், ஒரக் ஜாய் பகுதிகளில் பாகிஸ்தான் இராணுவம் தரைவழியாக தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதல்களில் ஒட்டுமொத்த மாக 39 தீவிரவாதிகள் கொல் லப்பட்டனர். 20 தீவிரவாதிகள் படுகாயம் அடைந்தனர். இரா ணுவ தரப்பில் 4 வீரர்கள் காயமடைந்தனர்.

வடக்கு வஜிரிஸ்தான் பகுதி யில கடந்த ஜூன் 15ஆம் திகதி முதல் இதுவரை சுமார் 1200 தீவிரவாதிகள் சுட்டுக் கொல் லப்பட்டிருப்பதாக பாகிஸ் தான் இராணுவம் தெரிவித்து ள்ளது.

500 வெடிகுண்டுகள் பறிமுதல்?

பாகிஸ்தானின் குவெ ட்டா பகுதியில் இரண்டு தற் கொலைப் படை தீவிரவா திகளை பாதுகாப்புப் படையி னர் சுட்டுக் கொன்றனர். அவ ர்களிடம் இருந்து 500 வெடி குண்டுகள், 200 கிலோ வெடிமருந்துகள், 13 அராக் கெட்டுகள் ஆகியவை கைப்ப ற்றப்பட்டுள்ளன.


**24 கைதிகள் இடமாற்றம்?**

குவெட்டா மாவட்ட சிறைச் சாலையில் 97 மரண தண் டனை கைதிகள் அடைக்கப்ப ட்டுள்ளனர். அவர்களில் 24 பேர் தீவிரவாத சம்பவங் களில் தொடர்புடையவர் கள். அவர்களை மீக குவெட்டா மாவ ட்ட சிறை மீது தீவிர ாதிகள் தாக்குதல் நடத்த திட்டமி ட்டிருப்பதாக உளவுத் துறை யினர் எச்சரிக்கை விடுத்தனர்.

இதைத் தொடர்ந்து 24 மரண தண்டனை கைதி களும் இரகசியமாக வேறு சிறைக்கு மாற்றப்பட்டுள்ளனர். அவர் கள் எங்கு மாற்றப்பட்டார்கள் என்பது குறித்து தகவல் வெளி யிடப்படவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. (இ-5)

## மரண தண்டனை நிறைவேற்றுவதை பாகிஸ்தான் அரசு நிறுத்த வேண்டும்

### ஐ.நா.பொதுச் செயலாளர் வலியுறுத்தல்



குற்றவாளிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்று வதை நிறுத்தி வைக்க வேண் டும் என்று பாகிஸ்தான் அரசை ஐக்கிய நாடுகள் (ஐ.நா) வலி யுறுத்தியுளளது.

இது தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரிப்புடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேசியதாக அவரது செய்தித் தொடாபாளர் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கிடையிலான உரையாடல் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை யில், "பெஷாவர் பாடசாலை மீது நடைபெற்ற தீவிரவாத தாக்குதலில் பாதிக்கப் பட்ட வர்களுக்கு பான் கீ மூன் இரங்கல் தெரிவித்தார். குற் றவாளிகளுக்கு மரண தண் டனை நிறைவேற்றுவதை நிறுத்தி வைக்குமாறும் மரண தண்டனைக்கு மீண்டும் இடைக் காலத் தடை விதிக்கு மாறும் நவாஸ் ஷெரீப்பிடம் வலியுறுத்தினார்" என கூறப் பட்டுள்ளது.

மரண தண்டனையை கைவிட சர்வதேச நாடுக ளிடம் ஆதரவு பெருகி வரும் நிலையில், பாகிஸ்தான் மீண் டும் மரண தண்டனையை நிறைவேற்றி வருவதற்கு, ஐ.நா. மனிதவுரிமை ஆணை யத்தின் தலைவர் ஜெய்த் ராத் அல் ஹுசைன் கட ந்த ஒரு வாரத்துக்கு முன்பு கணடனம் தெரிவித்திருந்தார்.

கடந்த சில வாரத்துக்கு முனபு பாகிஸ்தானின் பெஷா வர் நகரில் உள்ள இராணுவ பாடசாலைக்குள் புகுந்த தலி பான் தீவிரவாதிகள், நூற் றுக்கணக்கான குழந்தை கள் உட்பட மொத்தம் சுமார் 150 பேரை சுட்டுக்கொன்றனர்.

இதையடுத்து, தீவிரவாதி களுக்கு எதிரான நடவடிக் கையை தீவிரப்படுத்தும் வகையில் மரண தண்ட னைக்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையை 6 ஆண்டுகளுக்குப் பிறகு பாகிஸ தான் அரசு விலக்கிக் கொண் டது. இதையடுத்து சிலருக்கு தூக்கு தண்டனை நிறை வேற்றப்பட்டது. மேலும் பல ருக்கு தண்டனையை நிறை வேற்ற திட்டமிட்டுள்ளத் குறிப்பிடத்தக்கது. (இ-5)

**தூக்குத்தண்டனைகளை இரத்துச் செய்ய விடுத்த கோரிக்கைகளை**

## பாகிஸ்தான் அரசாங்கம் முற்றாக நிராகரித்தது

ஐ.நா.சபையும், ஐரோப் பிய யூனியனும் விடுத்த கோரிக்கையை நிராகரித்து விட்ட பாகிஸ்தான் தீவிரவா திகளை தூக்கில் போடுவதை நிறுத்த முடியாது என திட்ட வட்டமாக அறிவித்துள்ளது.

**ஐரோப்பிய யூனியன் வலியுறுத்தல்**

பாகிஸ்தானுக்கான ஐரோப் பிய யூனியன் தூதுக்குழு, 'தீவிரவாதத்தை எதிர்த்து போரிடுவதில் மரண தண் டனை வலுவான ஒரு கரு வியாக இருக்கும் என்று நாஙகள் நம்பவில்லை. 2008 ஆம் ஆண்டுமுதல் அமுலில் இருந்து வந்த மரண தண் டனை மீதான தடையை அகற்றியது எங்களுக்கு வரு த்தத்தை அளிக்கிறது. எல்லா சூழ்நிலைகளிலும், மரண தண்டனையை நாங்கள் எதிர்க்கிறோம்' என கூறியது.

பாகஸ்தான் நிராகரிப்பு

ஆனால் ஐ.நா.சபை மற் றும் ஐரோப்பிய யூனியனின் கோரக்கையை பாகிஸ்தான் தி டவட்டமாக நிராகரித்துவிட் டது.

இது தொடர்பாக பாகிஸ் தான் அரசின் செய்தி தொடர் பாளர் கூறுகையில், 'சர்வ தேச சமுதாயத்தை பாகிஸ் தான் மதிக்கிறது. ஆனால் எங்கள் நாடு இப்போது கடின மான சூழ்நிலைகளை கட ந்து சென்று கொண்டிருக்கி றது. இது வலுவான நடவடி க்கை எடுக்க வேண்டிய தரு ணம். அமைதியான பாகிஸ் தான் வேண்டும் என்பது தான் உலகின் விருப்பமாக அமைந்துள்ளது என கூறினார்.

பாகிஸ்தான் வெளியுறவு துறை செய்தி தொடர்பாளர் தஸ்னிம் அஸ்லாம் கூறுகை யில், 'ஐ.நா.வின் மனித உரிமை உடன்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டியதன் கடமைகளை பாகிஸ்தான் அறிந்திருக்கிறது. அதே நேர த்தில் மரண தண்டனையை நிறைவேற்றுவது என்பது சர்வதேச சட்டத்தை மீறிய செயல் அல்ல' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## ஒபாமாவை குரங்குடன் ஒப்பிட்டு வட கொரியா கடும் விமர்சனம்

தமது நாட்டின் இணை யத்தள சேவைகளை அமெரி க்கா முடக்கியதாக குற்றம் சாட்டி, "வெப்ப மண்டலக் காடுகளில் உலவும் குரங்கு தான் ஒபாமா" என்று வட கொரியா பாதுகாப்பு ஆணை யம் விமர்சித்துள்ளது.

வட கொரியாவின் இணைய சேவைகள் கடந்த சில நாட் களாக அவ்வப்போது முடங் கிய வண்ணம் இருந்தன. இந்த முடக்கத்துக்கு அமெ ரிக்காதான் காரணம் என்று வட கொரிய பாதுகாப்பு ஆணை யம் அறிவித்துள்ளது.

மேலும், இதற்குக் கார ணம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா என்று குறிப்பிட்ட வட கொரிய பாதுகாப்பு ஆணை யம், அவரை "வெப்பமண் டலக் காட்டில் உலவும் குர ங்கு" என்றும் விமர்சித்து ள்ளது. இந்த விமர்சனத் துக்கு அமெரிக்கா தரப்பிலிரு ந்து எந்த பதிலும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

அத்துடன், "தி இன்டெ ர்வியூ" திரைப்பட சர்ச்சை க்காக சோனி பிக்சர்ஸ் ஹேக் செயயப்பட்டதற்கும் வட கொரி யாவுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

அமெரிக்க தயாரிப்பு நிறு வனமான ஹொலிவுட் ஸ்டுடி யோஸ் தயாரித்திருக்கும் திரைப்படம் "தி இன்டெர் வியூ". இந்தப் படம் வட கொரிய ஜனாதிபதி கிம்ஜோங்கை மையப்படுத்தி "புலிகேசி" பாணியில் நகைச்சுவையாக எடுக்கப்பட்டுள்ளது. அவரை படுகொலை செய்ய அமெ ரிக்க புலனாய்வு துறை திட்ட மிடுவதாக கதை அம்சம் உள்ளது.

இந்தப் படத்தை வெளி யிட இருந்த சோனி பிக்சர் ஸின் பல நூறு ஊழியர்க ளின் அலுவலக கோப்புகள் ஹேக்கர்களால் திருடப்பட்டு, படத்தை வெளியிட்டால் தியே ட்டர்களில் தாக்குதல் நடத் தப்படும் என்று மர்ம நபர் களால் மிரட்டல் விடுக்க ப்பட்டது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறுதலாக கிணற்றினுள் விழுந்த இரு பிள்ளைகளின் தாயார் உயிரிழப்பு

வீட்டுக் கிணற்றில் தண்ணீர் அள்ளுவதற்கு சென்ற குடும்பப்பெண் ஒருவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் இல, 84 கனகபுரம் கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது. இதில் சந்திரகுமார் திலக்சனா (வயது-30) என்ற இரு பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பிரஸ்தாப குடும்பப்பெண் வீட்டு வளாகத்தில் உள்ள கிணற்றில் தண்ணீர் அள்ளுவதற்காக சென்ற வேளை, திடீரென வலிப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து அவர் கிணற்றினுள் தவறி விழுந்துள்ளார். சற்று நேரம் சென்ற நிலையில் பிள்ளைகள் தாயாரைத் தேடிய போது சடலமாக கிணற்றில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து சடலம் அயலவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (2-259)

# முத்தையன்கட்டுக்குளத்தின் இரு வான்கதவுகள் இன்று திறக்கப்படும்

**மக்களை பாதுகாப்பாக இருக்குமாறு எச்சரிக்கை**

**(முல்லைத்தீவு)**

**முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான முத்தையன்கட்டுக் குளத்தின் வான்கதவுகள் இன்று திங்கட்கிழமை காலை 7 மணிக்கு திறந்து விடப்படவுள்ளதாக முத்தையன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

முத்தையன்கட்டு நீர்ப்பாசனக் குளத்தின் கீழுள்ள 6 குளங்களில் ஏற்கனவே வான் பாய்ந்து வரும் நிலையில், முத்தையன்கட்டு குளத்தின் நீர் மட்டம் தற்போது 20 அடி 6 அங்குலமாக அதிகரித்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக சராசரியாக 57 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. இந்நிலையில் குளத்தின் நீர்மட்டம் இன்று காலைக்குள் 21 அடியாக அதிகரிக்கும் வாய்ப்புள்ளதால் முத்தையன்கட்டு குளத்தின் 2 வான் கதவுகளையும் திறந்து விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முத்தையன்கட்டு குளத்தின் வான் கதவுகள் திறந்து விடப்படும் போது, வான் பாயும் பிரதேசங்களான வசந்தபுரம், மல்லாககண்டல், மற்றும் கன்னுத்திரபுரம் ஆகிய இடங்களை சேர்ந்த மக்களை பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டு, அனர்த்த முன்னெசசரிக்கை நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை, முத்தையன்கட்டு நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழுள்ள தண்ணிமுறிப்பு குளத்திலும் நீர்மட்டம் 20 அடி 9 அங்குலமாக காணப்படுகின்றது. இந்த குளத்தில் வான் கதவுகளும் திறக்க வேண்டிய தேவையுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். முத்தையன்கட்டு குளத்தின் கீழுள்ள தட்டமலை, விசுவமடு, கணுக்கேணி, உடையார்கட்டு, மருதமடு, மடவாளசிங்கம் ஆகிய குளங்கள் ஏற்கனவே வான் பாய்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(2)




## குளத்தில் விழுந்தவரை காப்பாற்ற குதித்த இளைஞன் மரணமடைந்தார்

(குருமன்காடு)

வவுனியா, கல்மடு குளத்தின் வான் பாயும் பகுதியில் இருந்து தவறி குளத்திற்குள் விழுந்தவரை காப்பாற்ற முயற்சித்த இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இதன்போது தவறிவிழுந்தவர் காப்பாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் கல்மடு, மறவன்குளம் பகுதியைச் சேர்ந்த பெரியண்ணன் சுதாகரன் (வயது-23) என்ற இளைஞனே உயிரிழந்தார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, கல்மடு குளத்தின் வான் பாயும் பகுதியை பார்வையிட்டுக் கொண்டிருந்த ஒருவர் குளத்திற்குள் தவறி விழுந்துள்ளார்.

விழுந்த நபரைக் காப்பாற்ற, குளத்தை பார்வையிட வந்திருந்த இளைஞன் ஒருவர் குளத்திற்குள் குதித்த நிலையில் நீரில் மூழ்கி மரணமடைந்தார்.

குளத்தில் தவறி விழுந்தவர் காப்பாற்றப்பட்டார். இதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-250)


# பரிசுத்த பாப்பரசரின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக மடுத்திருப்பதியில் ஐந்து இலட்சம் மக்கள் ஒன்றுகூடுவார்கள்

## மடுத்திருத்தல பரிபாலகர் தெரிவிப்பு

பரிசுத்த பாப்பரசரின் மடுத் திருத்தல வருகையின்போது ஐந்து இலட்சம் மக்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக மடுத் திருத்தல பரிபாலகர் அருட்பணி எஸ்.எமிலியானுஸ் பிள்ளை அடிகளார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பாப்பரசரின் மடு திருத்தல வருகைக்காக சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்து வருகின்றன. எதிர்வரும் ஜனவரி மாதம் 14ஆம் திகதி மடுவிற்கு வருகை தரும் பரிசுத்த பாப்பரசர் அன்றைய தினம் பிற்பகல் 3.15 மணிக்கு உலங்கு வானூர்தி மூலம் மடுத் திருத்தலத்திற்கு வந்து இறங்குவார். அவ்விடத்திலிருந்து பாப்பரசரை ஆலய மண்டப முன்றலுக்கு திறந்த வாகனம் மூலம் மன்னார் மறை மாவட்ட ஆயரும், கர்தினாலும் அழைத்து வருவர்.



இதன்போது அங்கு கூடியிருக்கும் மக்களை பாப்பரசர் ஆசீர்வதிப்பார்.

அத்துடன் பாப்பரசர் மக்களைச் சந்தித்து கலந்துரையாடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர் ஒரு மணித்தியாலம் மட்டுமே மடுவில் தங்கியிருப்பார்.

இறை வழிபாடும் பாப்பரசரின் விசேட ஆசீர்வாதமும் இடம்பெற்ற பின் மடு அன்னையின் திருச்சொரூப ஆசீர்வாதத்தையும் மக்களுக்கு பாப்பரசர் வழங்குவார். பாப்பரசரின் வருகையை முன்னிட்டு சகல ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும் தற்பொழுது இப்பகுதியில் பெய்துவரும் கடும் மழை காரணமாக ஒரு சில ஆயத்த வேளைகள் காலதாமதம் அடைந்து வருகின்றன. பாப்பரசரின் வருகையின்போது யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், அநுராதபுரம் ஆகிய ஐந்து மறை மாவட்டங்களை சேர்ந்தவர்களும் கலந்து கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மக்கள் மடுத் திருப்பதிக்கு வருவதை இலகுபடுத்துவதற்காக நான்கு பாதைகளை பயன்படுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி, வவுனியாவிலிருந்து பிராமணக்குளம் வழியாகவும் யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரியூடாகவும், மன்னார் - மடு வீதியூடாகவும், பெரியமடு வீதி வழியாகவும் மடுத் திருப்பதிக்கு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரிசுத்த பாப்பரசரின் வருகை நிகழ்வில் கலந்து கொள்ள வரும் மக்களை அன்றைய தினம் முறபகல் பத்து மணி தொடக்கம் பிற்பகல் இரண்டு மணி வரையுமே சோதனைக்கு உட்படுத்தப்பட்டு உடசெல்ல அனுமதிக்கப்படுவர். அதன்பின்னர் சோதனை நிறுத்தப்படுவதுடன் குறிப்பிடப்படும் சில இடங்களுக்குள் எவரும் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என மடு பரிபாலகர் மேலும் தெரிவித்தார்.

நிகழ்வு அன்று போட்டிக்கோ (ஆலயத்தின் முன்) பகுதிக்குள் வருபவர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களுக்கு விசேட அடையாள சின்னம் அணிவிக்கப்படும். அதன்பின்னர் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் அமர்ந்து கொள்ளலாம். விசேடமாக அழைக்கப்பட்டவர்களுக்கு விசேட இடங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் குருக்கள், அருட் சகோதரிகள், அருட்சகோதரர்கள் மா[illegible] நாற்றல் உள்ளவர்களுக்கும் விசேட இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தனியார், அரச போக்குவரத்து சேவைகளுக்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பங்கு பற்றும் ஐந்து மாவட்டங்களிலிருந்து வரும் குருக்களுக்கு வாகன பாஸ் வழங்கப்படும். அவர்கள் ஆலயத்தை அண்மித்து வரலாம்.

எனினும் பாப்பரசரின் மடு வருகை தொடர்பில் எதிர்வரும் 3 ஆம் திகதி விசேட கூட்டம் ஒன்று இடம்பெறும். அதன்பின் நடைமுறைகள் குறித்து இறுதி அறிக்கை வெளியிடப்படும் என்றார். (2-250)




## முல்லைத்தீவில் இருகடைகள் உடைக்கப்பட்டு 2இலட்சம் பெறுமதி வாய்ந்த பொருட்கள் சூறை

(குருமன்காடு)

சிலாவத்தை வடக்கு முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் இரு கடைகள் உடைக்கப்பட்டு சுமார் இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதி வாய்ந்த பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளதாக கடை உரிமையாளர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு நடைபெற்றுள்ளது.

இதில் செல்லத்துரை ஜெகதீஸ்வரன் என்பவருக்கு சொந்தமான கடற்றொழில் உபகரண பொருட்களைக் கொண்ட கடையினை உடைத்து எண்ணாயிரம் ரூபா பணமும் நாகரத்தினம் சிவலோகநாதன் என்பவருக்கு சொந்தமான பலசரக்கு வாணிபத்தின் பின் கதவினை அலவாங்கு மற்றும் கூரிய ஆயுதங்களினால் உடைத்து சுமார் 2 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை வாகனத்தில் ஏற்றி சென்றுள்ளதாக உரிமையாளர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

ஒரே இரவில் இரண்டு கடைகள் உடைக்கப்பட்டு பொருட்கள் கொள்ளையிட்டப்பட்ட சம்பவம் அப்பகுதி வாழ் மக்களிடையே சற்று பதற்ற நிலைமையை தோற்றுவித்துள்ளது.

மேற்படி சம்பவத்தை வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இது போன்ற கொள்ளைச் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருவதாக அப்பகுதி பொதுமக்களால் தெரிவிக்கப்படுகின்றது. ( 2-250-300)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறும்பு போல் உபதேசித்தவர் யாரும் இல்லை. ஆனால் அது பேசுவதே இல்லை. -ஃப்ராங்கிளின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நுணல் தன்வாயால் கெடும் கூட்டமைப்பின் வாயால் யார் கெடுவார்?

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பதென்ற முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்தே ஆகுவது என்று விடாப்பிடியாக நிற்கிறது.

நாங்களும் இவ்விடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வேண்டாம்... வேண்டாம்... என்று எழுதி விட்டோம்.

கெடுகுடி சொற்கேளாது என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பதென்று வெளிப் படுத்தப் போவதாக கூட்டமைப்பு கச்சை கட்டி நிற்கிறது.

ஐயா! எங்களுக்கென்ன? யார் வென்றாலும் ஒன்று தான். எனினும் யார் வென்றால் நல்லது என்று தமிழ் மக்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்தால் மட்டுமே தமிழ் மக்கள் அதன்படி நடப்பார்கள் என்று எதுவும் கிடையாது. அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாரை ஆதரிப்பதென்று வெளிப்படுத்தப் போகும் அறி விப்பை தமிழ் மக்கள் எதிர்பார்க்கவும் இல்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களின் நிலைப்பாடு கூட்டமைப்பு வாய் திறக்காமல் இருக்க வேண்டுமென்பதாகும்.

நிலைமை இதுவாகவிருக்க, ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பதென்ற முடிவை வெளியிடப் போவதா க கூட்டமைப்பு கூறுவதற்குள் ஏதோ ஒரு தந்திரம் இருப்பதாகத் தெரிகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதாகக் கூட்டமைப்பு விடுத்த அறிவிப்பு தென் பகுதியில் எவ்வாறு மாற்றியமைக்கப்பட்டதென்பது தெரிந்த விடயம்.

சரத் பொன்சேகாவை ஆதரிப்பதாகக் கூட்டமைப்புக் கூறியதை மாற்றியமைத்து பிரசாரம் செய்யப்படும் என்று நாங்கள் கனவிலும் நினைக்கவில்லை என்று கூறி னால் ஏற்புடையது.

ஆனால் எதிர்வரும் 8-ந் திகதி நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் அதே பிழையை விடுவதென் றால் அதனைப் பிழையென்று எப்படிக் கூறமுடியும்?

மாறாக ஜனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்பு உள் நோக்கத்துடன் செயற்படுகிறது என்றே கூறவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை ஆத ரிப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிக்கை விட்டால் இதற்கு மைத்திரிபால சிறிசேன தரப்பு வேறு ஒரு வடிவம் கொடுக்கும்.

அதேநேரம் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றால் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த பேச்சுக்கான சாத்தியப்பாடுகள் சங்கட ப்படும்.

தவிர, மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்தால் அந்தோ கதிதான்.

முஸ்லிம்களும் மைத்திரி பக்கம்; தமிழர்களும் மைத்திரி பக்கம் என்னருமை சிங்கள மக்களே! வீரத் தலைவன் துட்டகைமுனுவின் பரம்பரையில் வந்த சிங்களப் பெருங்குடிகளே! தமிழர்களும் முஸ்லிம்க ளும் இணைந்தால் நாளை உங்கள் கதி என்ன? என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேட்பார்.

அந்தக் கேள்விக்கு சிங்கள மக்கள் பதில் அளிக்க ஒரு இரவுப்பொழுது போதும். மறுநாள் 8-ந் திகதி தமிழர் களும் முஸ்லிம்களும் ஆதரித்தவர் படுதோல்வி என்ப தாக தேர்தல் முடிவு அமையும். அதேநேரம் மகிந்த ராஜ பக்ஷ மீண்டும் ஜனாதிபதியானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் கூடியி ருந்து தேநீர் அருந்தவும் முடியாமல் போகும்.

ஆகையால், **தமிழ் மக்கள் தீர்மானிப்பார்கள்** என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சொல்லிவிட்டு மௌனமாக இருக்க வேண்டும். இல்லை முஸ்லிம் கட்சிகள் போல நாங்களும் ஆதரவை அறிவிப்போம் என்றால், நுணல் (தவளை) தன்வாயால் கெடும் என் பது போல; கூட்டமைப்பின் ஆதரவைப் பெறுவோர் கூட் டமைப்பின் வாயால் கெடுவர் என்றாகி விடும்.

## உயர்தரப்பரீட்சை முதன்மை பெறுபேறுகள்

**கிளி/முருகானந்தா கல்லூரி**

ரி.தயந்திகா-3ஏ,வை.பிரியங்கன் 2ஏபி,ஆர்.ரிதுஷன் 2ஏபி, ரி.பிரவீணா ஏ2பி.

**யா/வட்டு இந்துக் கல்லூரி**

**கணிதபிரிவு**

எஸ்.கோபிசாந்-ஏபிசி, எஸ்.டொனேஷ்-2பிசி,எம்.சுஜிக்குமார்-பி2சி, எஸ்.தசிகரன்-பிசிஎஸ், பி.சுந்தரநடராஜன்-3சி, எம்.போதாரணன்-3சி,

**உயிரியல் பிரிவு**

எஸ்.சிந்துஜா-ஏ2பி, வி.சிறீசுபாங்கி-2பிசி,ஆர்.அனோஜா-பிசிஎஸ்.

**வர்த்தகப்பிரிவு**

ரி.யதுசா-ஏ2பி,ரி.அனுஜா-ஏ2சி, எஸ்.கயேந்தினி-பி2சி.

**கலைப்பிரிவு**

எஸ்.சாயினி-2ஏபி,பி.புவித்திரா-ஏபிசி,எஸ்.திலீனா-ஏபிசி, எஸ்.றொசாந்தி-ஏபிசி, என்.வேணுசன்-ஏ2சி.

**கிளி/மத்திய கல்லூரி**

**கணிதப்பிரிவு**

கு.ஹதீஸ்-3ஏ(மாவட்டநிலை1), கே.சங்கீத்தனன்-2ஏபி,செ.தவுசிகா2ஏ,பி

**விஞ்ஞானப்பிரிவு**

ஆர்.ஜெனத்-3ஏ(மாவட்டநிலை-1)

**கலைப்பிரிவு**

எஸ்.யுசாந்தி-3ஏ.

**கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்**

**வர்த்தகப்பிரிவு**

ஏ. புவீந்திரன்-3ஏ, எஸ்.பிரசாந்தினி-ஏ2பி, பி.திவ்வியகாந்-ஏபிசி, எஸ்.லோகிதன் ஏபிசி, புனிதராசா லக்சிதன்-ஏபிசி, என்.காயத்திரி-ஏ2பி, எம்.ஆனந்ததர்சினி-ஏ2பி.

**கலைப்பிரிவு**

என்.வன்னியசிங்கம் -3ஏ, ரி.தவப்பிரியா-3ஏ, கே.இந்துஷா-2ஏபி,கே.வசந்தன் -2ஏபி, கே.கிறிஸ்ரீன் யூலி-2ஏபி,ரி.ஜென்சியா-ஏ2பி, எம்.புஸ்பரோசி-ஏ2பி,வி.விஜயசுமங்கலி-ஏ2பி, எம்.பார்த்தீபன்-ஏபிசி,எஸ்.விதுபா-ஏபிசி,பி.அபர்ணா - ஏபிசி.

**கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி**

**விஞ்ஞானப்பிரிவு**

எஸ்.திவாகரன்-2ஏபி, கே.ரோஜிதன்-2ஏசி,ம.அஜித்ஜெரோம்-ஏபிசி, பி.பிரேமன்-பி2சி,வி.பிரியதர்சன்-பி2சி, ரி.டினோஜன்-2பிசி,மா.அனுசியன்-3சி.

**கணிதப்பிரிவு**

ஐ.கீர்த்தனன் -ஏபிசி, கே.செந்துஜன்-ஏபிசி, ந.சதுர்ஷன்-ஏபிசி,பி.நிதர்சனா-2பிசி.

**வர்த்தகப்பிரிவு**

கே.தனுஜா-3ஏ,எல்.மதீசன்-2ஏபி,ஐ.சிந்துஜா-2ஏபி,ஐ.கீர்த்தனா-ஏ2பி,யு.விவேக்-2ஏபி,கே.தர்சினி-2ஏபி, ந.ரம்சிகா-2ஏபி,ஏ.கமில்சா-ஏபிசி, ஏ.சௌமிகா-3பி.

**கலைப்பிரிவு**

கே.கஜேந்தினி-2ஏபி,ரி.மஞ்சுளா-3ஏ,ரி.கிருஷ்ணலீலா-2ஏசி

**வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்**

**விஞ்ஞானப்பிரிவு**

எஸ்.மேகலாகரன் 3ஏ (மாவட்ட நிலை- 1), பி.வைஸ்ணவன் 3ஏ

**கணிதப்பிரிவு**

ஆர்.கிரேஸ்குமார் 3ஏ (மாவட்ட நிலை - 1)

**யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி**

**கணிதப்பிரிவு**

யோ.லோகீபன்-3ஏ,உ.சுதர்சன்-3ஏ

**உயிரியல்பிரிவு**

செ.பிரணவன் - 2ஏசி, க.ஜசிந்தா - 2ஏபி

**வர்த்தகப்பிரிவு**


த.இளங்குமரன் - 3ஏ, நா.பிரசாந் -3ஏ, வ.ரேணுகா - 3ஏ, த.தேனுஜா - 3ஏ

**கலைப்பிரிவு**

அ.தர்சிகரூபன் - 3ஏ, செ.ஜெசிதா - 3ஏ, ப.சுகன்யா - 3ஏ, ம.தயாளி - 3ஏ

(2-250-277)

## திருவெம்பாவை



திருச்சிற்றம்பலம்

முத்துஅன்ன வெண்நகையாய்
முன்வந்து எதிரெழுந்துஎன்
அத்தன் ஆனந்தன் அமுதன்என்று
அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துஉன்
கடைதிறவாய்
பத்துஉடையீர் ஈசன் பழஅடியீர்
பாங்குஉடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்து
ஆட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம்
அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ
நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கு
ஏலோர் எம்பாவாய்

திருச்சிற்றம்பலம்


பொருள்: முத்துப்போன்ற வெண்மையான பற்களையுடையவளே! நாள்தோறும் எங்களுக்கு முன்னதாகவே எழுந்து எதிரே வருவாய் ; வந்து என் தந்தை இன்ப வடிவினன்; அமுதம் போன்றவன்; என்று வாழ்த்தி மிகவும் அதிகமாக வாயூறி இனிக்கும்படியாக அவன் புகழைப் பேசுகின்ற தன்மையுடையாய். இன்று நாங்கள் அழைத்தும் நீ எழுந்து வந்து உன் வாயிற் கதவைத் திறக்காமல் இருக்கின்றாய். (எழுப்பப்பட்டவள் இனி கூறத் தொடங்குகின்றாள்) நீங்கள் இறைவனிடத்திற் பேரன்புடையவர்கள். இறைவனுடைய பழைமையான அடியார்கள். ஒழுங்குடையவர்கள். புதிய அடியவராகிய எங்களை ஆட்கொண்டு அடிமை கொண்டால்தீமையாகமுடியுமோ? (மீண்டும் எழுப்பியவர் கூறுதல்). உன் அன்புடைமை வஞ்சனையோ? உன் தன்மையெல்லாம் நாங்கள் அறியமாட்டோமோ? மனம் தூய்மையுடையவர் நம் பெருமானைப் பாடமாட்டார்களோ? எம்மை எழுப்ப வந்த எமக்கு இத்தனையும் வேண்டும்.

கே.கே.கே.சிவபாலன்

## இலங்கையிலிருந்து தங்கம் கடத்தியவர் நேற்றுக் கைது

(இராமேஸ்வரம்)

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு கடத்தப்பட்ட 2.3 கிலோ தங்கத்தைக் கைப்பற்றிய இராமேஸ்வரம் சுங்க அதிகாரிகள் ஒருவரைக் கைது செய்தனர்.



தங்கத்தைக் கடத்தி வந்தவர்களில் மேலும் இருவர் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


நேற்று ஞாயிற்றுக்கிழமை தனுஷ்கோடி கடற்கரையில் தங்கம் கடத்தப்படுவதாக இராமேஸ்வரம் சுங்கத்துறை அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து விரைந்து செயற்பட்ட சுங்கத்துறையினர், தனுஷ்கோடி கடற்கரையில் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அப்போது கடற்கரையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய நபரை பிடித்து சோதனையிட்டனர். இதன்போது அவர் மறைத்து வைத்திருந்த 2.3 கிலோ தங்கத்தை பறிமுதல் செய்தனர்.

எனினும் இருவர் தங்கத்துடன் தப பிச் சென்றுவிட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### வேண்டியதெல்லாம் கிடைக்கும்



நீ எதிர்பார்த்தது, எதிர்பார்த்தபடி பிறர் மூலமாகக் கிடைக்காது. ஒவ்வொரு மாற்றத்திலும் பிணக்குற்று, பிணக்குற்று ஏமாற்றத்திற்கு ஆட்பட்டு அதனாலே துன்பமானது பெருகிக் கொண்டே போகிறது.

இந்த அடிப்படையைத் தெரிந்து கொண்ட பின்னர் "எதிர்பார்த்தல்" என்பதை விட்டு விடுவது நல்லது எனத் தெரிகிறதல்லவா? தொடக்கத்தில் ஒரு வாரகாலம் யாரிடமிருந்தும் எதையும் எதிர்பார்ப்பதில்லை என்ற முடிவினை எடுத்துக் கொள்ளுங்கள். பின்னர் அதை ஒரு மாத காலத்திற்கு நீட்டித்துக் கொள்ளுங்கள். (Do not expect anything from anyone for one week to start with and then extend the period to one month).

அதற்குறிய விளைவு நிச்சயமாக உண்டு. நீ எதிர்பார்த்தாலும், எதிர்பார்க்காவிட்டாலும் நீ என்ன செயல் செய்கிறாயோ, அந்தச் செயலுக்குத் தக்க விளைவு வந்துதான் ஆக வேண்டும். நல்லதை எண்ணி, நல்லதை விளங்கிக் கொண்டு, பயனை உணர்ந்து கொண்டு இப்பொழுது செய்கிறேன் வருவதை ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்.

இந்த அளவு வரும் எனக்கூட எதிர்பாராது நல்லதைச் செய்யும்போது நிச்சயமாக நன்மை பிறக்கும் என்று செய். அவ்வாறு செய்வதற்கு முன்னதாக இன்னொரு ஆராய்ச்சியும் தேவை. அதாவது உன்னைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

நீ எங்கே இருக்கிறாய், என்னவாய் இருக்கிறாய்? (What you are> where you are and how you are?) உடல் நலத்திலே, வலுவிலே, வயதிலே, அறிவாற்றலிலே அல்லது விஞ்ஞான வளர்ச்சியிலே, பொருள் உற்பத்தி செய்யும் திறமையிலே, அதிகாரத்திலே, சூழ்நிலையிலே உள்ள ஒரு வாய்ப்பிலே நீ எங்கே இருக்கிறாய், எப்படி இருக்கிறாய்? இந்த நிலையில் இருந்து கொண்டு உனக்கு, குடும்பத்திற்கு, சுற்றத்தார்க்கு, ஊருக்கு, உலகுக்கு எந்த அளவிலே நான் நன்மை செய்ய வல்லவன், செய்ய முடியும் என்று கணித்துக் கொள்.

அதைச் செய்ய எப்பொழுதும் தயாராக இரு. செய்து கொண்டே இரு. வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் அளவு மீறிப் போகாமல் இந்த வழியிலே ஒரே ஒரு வார பயிற்சி செய். இன்னும் சரியாக ஊறி வரவில்லை என்றால் இன்னும் ஒரு மாத காலத்திற்கு அந்தப் பயிற்சியை நீடித்து வா அப்போது பார்க்கலாம் உனக்கு என்ன வேண்டுமோ அவ்வளவும் கிடைக்கும், அதற்கு மேலேயும் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோலி, ரகானே சதம் மீண்டெழுந்தது இந்தியா



கோலி ரகானேவின் சிறப்பான சதம் மூலம் அவுஸ்திரேலியா அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாள் முடிவில் இந்திய அணி பலோனை தவிர்த்து சிறப்பாக விளையாடி வருகின்றது.

இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் மோதும் 3 ஆவது டெஸ்ட் போட்டி மெல்பேர்ன் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 530 ஓட்டங்கள் குவித்தது. கப்டன் ஸ்ரீவன் சுமித் 192 ஓட்டங்கள் எடுத்தார். முகமது ஷமி 4 விக்கெட் கைப்பற்றினார்.

பின்னர் முதல் இன்னிங்சை விளையாடிய இந்தியா நேற்று முன்தினம் 2 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 1 விக் கெட் இழப்புக்கு 108 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. முரளி விஜய் 55 ஓட்டங்களுடனும், புஜாரா 25 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) 3 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. இந்திய அணி தொடர்ந்து விளையாடியது.

ஆட்டத்தின் முதல் ஓவரிலேயே புஜாரா மேலும் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஹாரிஸ் பந்தில் வெளியேறினார். அடுத்து களம் வந்த துணை கப்டன் விராட் கோலி நேர்த்தியுடன் விளையாடினார்.

சிறப்பாக ஆடி வந்த தமிழக வீரர் முரளி விஜய் 68 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். 4 ஆவது விக்கெட்டுக்கு கோலியுடன், ரகானே ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி பொறுப்புடன் ஆடியது.

மதிய உணவு இடைவேளைக்கு பின்னர் இருவரது ஆட்டமும் தொடர்ந்து அபாரமாக இருந்தது. இதனால் 86.5 ஆவது ஓவரில் இந்தியா 300 ஓட்டங்களை தொட்டது.

ரகானே தொடர்ந்து அதிரடியாக விளையாடி சதம் அடித்தார். 127 பந்துகளில் 13 பவுண்டரியுடன் அவர் 100 ஓட்டங்களை தொட்டார் அவரை தொடர்ந்து விராட் கோலியும் சதம் அடித்தார். 166 பந்துகளில் 11 பவுண்டரியுடன் அவர் 100 ஓட்டங்களை தொட்டார்.

இருவரது சிறப்பான ஆட்டத்தால் இந்திய அணி பாலோ ஆனை தவிர்த்தது. தேநீர் இடைவேளையின் போது



இந்தியா 3 விக்கெட் இழப்புக்கு 336 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. ரகானே 147 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். லோகேஷ் ராகுல் (3) ஏமாற்றினார். தொடர்ந்து சிறப்பாக விளையாடிய கோலி 150 ஓட்டங்கள் எட்டினார். ஹாரிஸ வேகத்தில் டோனி (11) அஷ்வின் (0) அரங்கு திரும் பினார். ஜோன்சன் பந்தில் கோலி 169 ஓட்டங்களில் ஆட்ட மிழந்தார். மூன்றாவது நாள் ஆட்ட முடிவில் இந்திய அணி முதல் இன்னிங்சில் 8 விக்கெட்டுகள் 462 ஓட்டங்கள் எடுத்து 68 ஓட்டங்கள் பின்தங்கியுள்ளது. ஷமி (9) அவுட்டாகாமல் இருந்தார். போட்டியின நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

கருணாரத்ன கன்னிச்சதம்

# போராடுகின்றது இலங்கை



திமுத் கருணாரத்னவின் பொறுப்பான கன்னிச் சதம் மூலம் இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டித் தொடரின் முதலாவது போட்டியின் மூன்றாவது நாள் முடிவின் போது, பொலோ ஒன் முறையில் தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பாடிவரும் இலங்கை அணி, 5 விக்கெட்டுகளை இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, சகல விக்கெட்டுகளை இழந்து 441 ஓட்டங்களைக் குவித்தது. நியூஸிலாந்து அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரும் தலைவருமான பிரண்டம் மக்கலம், 134 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 11 சிக்ஸர்கள், 18 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 195 ஓட்டங் களைக் குவித்து, தரிந்து கௌஸாலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். பிரண்டம் மக்கலம், 74 பந்துகளில் சதத்தினைப் பூர்த்தி செய்தமையும் குறிப்பி டத்தக்கது.

இலங்கை அணியின் பந்துவீச்சாளர்கள் சார்பில் அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் சுரங்க லக்மால் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், ஷமிந்த ஏரங்க, தம்மிக்க பிரசாத், தரிந்து கௌஸால் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். முதலாவது இனிங்ஸில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, மோசமான துடுப்பாட்டத்தின் காரணமாக சகல விக்கெட்டுகளையும் இழந்து 138 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், அதிகபட்சமாக 50 ஓட்டங்களைப் பெற்று நெய்ல் வாக்னரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். நியூஸிலாந்து அணியின் பந்து வீச்சாளர்கள் சார்பில் த்ரெண்ட் போவ்ல்ட் மற்றும் நெய்ல் வாக்னர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் ஜேம்ஸ் நீஸம் மற்றும் ரிம் சௌத்தீ ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தனது இரண்டாவது இனிங்ஸில் பொலோ ஒன் முறையில் துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை அணி, மூன்றாம் நாள் முடிவின்போது 5 விக்கெட்டுகளை இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.


ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான திமுத் கருண்ாரத்ன 152 ஓட்டங்களைப் பெற்று த்ரெண்ட் போவ்ல்ட்டின் பந்து வீச்சில் போல்ட் செய்யப்பட்டால். அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் 53 ஓட்டங்களுடனும், தனது டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொண்டிருக்கும் தரிந்து கௌஸால் 5 ஓட்டங்களுடனும் களத்தில் இருக்கின்றனர்.

நியூஸிலாந்து அணியின் பந்து வீச்சாளர்கள் சார்பில் த்ரெண்ட் போவ்ல்ட் 3 விக்கெட்டுகளையும் ஜேம்ஸ் நீஸம் மற்றும் ரிம் சௌத்தீ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றியுள்ளனர்.

இன்றைய தினம், போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இடம்பெறவுள்ளது. (க)



# அஜ்மல் விலகல்



பாகிஸ்தான் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் 37 வயதான சயீத் அஜ்மலின் பந்து வீச்சு விதிமுறைக்கு புறம்பாக இருப்பதால் 3 மாதத்திற்கு முன்பு தடை விதிக்கப்பட்டது. அவரது முழங்கை அனுமதிக்கப்பட்ட 15 டிகிரியை விட 40 டிகிரிக்கு மேல் வளைகிறது. அதை சரி செய்ய சில மாதங்களாக மேற்கொண்ட முயற்சிக்கு பலன் இல்லை.

இந்த நிலையில் பெப்ரவரியில் தொடங்கும் உலக கோப்பை கிரிக்கெட் போட்டிக்குள் பந்து வீச்சு குறையை நிவர்த்தி செய்ய வாய்ப்பில்லை என்பதால் உலக கோப்பை போட்டிக்கான அணியில் இருந்து அஜ்மல் விலகியுள்ளார். இந்த தகவலை பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய தலைவர் சகாரியார் கான் நேற்று முன்தினம் தெரிவித்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரெய்னின் தாக்குதலுக்குப் பின்

# பலம்பெறும் மேற்கிந்தியத் தீவுகள்

பந்துவீச்சில் அசுரவேகத்தில் செயல்படும் டேல் ஸ்ரெய்ன், துடுப்பாட்டத்திலும் ஒரு கலக்கு கலக்க மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக போர்ட் எலிசபெத்தில் சீரற்ற வானிலைக்கு மத்தியில் நடைபெற்றுவரும் 2ஆவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி வலுவான நிலையில் உள்ளது.

டேல் ஸ்ரெய்னின் தாக்குதல் பாணியிலான ஆட்டத்தின் பின் தமது துடுப்பாட்டத்தை தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் பலம்பெற ஆரம்பித்துள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்று வருகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றிருந்த நிலையில்,

2ஆவது டெஸ்ட் போட்டி கடந்த 26ஆம் திகதி போர்ட் எலிசபெத்தில் ஆரம்பமானது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி மழை, போதிய வெளிச்சமின்மை ஆகியவற்றுக்கு மத்தியில் இரண்டரை நாட்களாக துடுப்பெடுத்தாடி தமது முதல் இன்னிங்ஸுக்காக 8 விக்கெட்டுக்களை இழந்து 417 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் எல்கர் 121, டு பிளசீஸ் 103, டேல் ஸ்ரெய்ன் 58 (28 பந். 6 பவுண்., 5 சிக்ஸ்) ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் ரெய்லர், பீற்றர்ஸ், காப்ரியேல்



ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு பாரத்வைட் – டெவோன் ஸ்மித் இணை சிறந்த ஆரம்பம் (55) வழங்கியது.

எனினும் ஸ்மித் 22 ஓட்டங்களிலும், அடுத்து களமிறங்கிய லியோன் ஜோன்சன் ஓட்டமெதுவும் எடுக்காமல் மோர்கலின் அடுத்தடுத்த பந்துகளில் ஆட்டமிழந்தனர்.

அதன்பின், களத்தில் நின்ற பாரத்வைட்டுடன் இணைந்த சாமுவேல்ஸ் சிறப்பாக ஆட நேற்றைய 3ஆம் நாள் ஆட்டம் போதிய வெளிச்சமின்மையால் முடிவுக்கு கொண்டுவரப்பட மேற்கிந்தியத் தீவுகள் அணி தமது முதல் இன்னிங்ஸுக்காக 2 விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களை எடுத்திருந்தது.

களத்தில் பாரத்வைட் 65, சாமுவேல்ஸ் 60 ஓட்டங்களுடன் உள்ளனர்.

வீழ்த்தப்பட்ட 2 விக்கெட்டுக்களையும் மோர்கல் கைப்பற்றினார்.

போட்டியின் 4ஆம் நாளாட்டம் இன்றாகும்.

## விலகியது மு.கா...

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதில் இருந்தே, யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிக்குள் இழுபறி நிலை காணப்பட்டதால், அக்கட்சி தனது முடிவை அறிவிப்பதை பின்போட்டு வந்திருந்தது.

இந்நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோருடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை அவசர சந்திப்பை நடத்தினர்.

இச்சந்திப்பின் போது கரையோர மாவட்டப் பிரேரணை தொடர்பில் ஆராயப்பட்ட போதிலும், முடிவு எதுவும் எட்டப்படவில்லை.

எனினும் கரையோர மாவட்டத்துக்கு புதிய அரசாங்க அதிபரை நியமிப்பதற்காக விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆயினும், இது தொடர்பில் எவ்வித அறிவிப்புக்களும் வெளியாகாத நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கவுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்று அறிவித்துள்ளது.

2010ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏழு ஆசனங்களைப் பெற்றிருந்தது. பின்னர் எதிர்கட்சியிலிருந்து விலகி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனி அரசாங்கத்தில் இணைந்துகொண்டு இரு அமைச்சுக்களை பெற்றுக்கொண்டது.

இதனிடையில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இந்த முடிவை அடுத்து, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் வீதிகளில் வெடிகொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வருகின்றனர். சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்க பெரும்பாலான முஸ்லிம் மக்கள் திட்டமிட்டுள்ளதாக முன்னர் தகவலகள் வெளியாகியிருந்தன.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகித்த ரிசாத் பதியுதின் தலைமையிலான இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கெனவே அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ)

## மாயம்...

டான் பகுதிக்கு மேற்கே, ஜாவா கடலுக்கு மேல் பறந்து கொண்டிருந்த போது தொடர்பு இழந்தது என்று இந்தோனேசிய போக்குவரத்து அமைச்சகத்துக்காகப் பேசவல்ல அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த விமானத்திலிருந்து தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டால் அனுப்பப்படும் சமிக்ஞைகள் எதுவும் வரவில்லை என்று இந்தோனேசிய அதிகாரிகள் கூறினர்.

இந்த விமானத்தில் பெரும்பாலும் விடுமுறைக்காகப் பயணித்தவர்களே அதிகம் இருந்ததாகவும், சிங்கப்பூர், இந்தோனேசியர்களுக்கு பிடித்த விடுமுறைத் தளம் என்பதால் அங்கு சென்று கொண்டிருந்தவர்கள் என்றும ஜாகர்த்தாவிலுள்ள பிபிசி செய்தியாளர் ஒருவர் கூறுகிறார்.

இந்தோனேசிய மற்றும் சிங்கப்பூரின் ராணுவ விமானங்கள் இந்த தேடுதல் வேட்டையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன.

இந்த விமானத்தில் பயணித்தவர்களில் பெரும்பாலோனோர் இந்தோனேசியர்கள் என்று தெரிகிறது.

இந்தோனேசிய நகரான சுரபயாவிலிருந்து புறப்பட்ட 45 நிமிடத்துக்குள் இந்த விமானம் விமானப் போக்குவரத்துக்கட்டுப்பாட்டு அமைப்புடன் தொடர்பை இழந்திருக்கிறது.

விமானி மோசமான வானிலை காரணமாக விமானப் பாதையை மாற்றுவதற்கு அனுமதி கோரினார் என்றும் ஆனால் விமானத்தில் பிரச்சினை ஏற்பட்டதாகத் தகவல் ஏதும இல்லை என்றும் அதிகாரிகள் கூறினர்.

சிங்கப்பூர் விமான நிலையத்தில் பயணிகளின் குடும்பத்தினரும் நண்பர்களும் தகவலறிய குழுமியிருக்கின்றனர்.

குறைந்த விலை டிக்கெட்டுகளை வழங்கும் பட்ஜெட் விமான நிறுவனங்கள் என்றறியப்படும் விமான நிறுவனங்களில் ஒன்று இந்த ஏர் ஏசியா நிறுவனம். மலேசிய நிறுவனமான இதன் இந்தோனேசிய துணை நிறுவனத்துக்குச் சொந்தமானது இந்த விமானம்.

இந்த நிறுவனத்தின் விமானங்கள் இதுவரை பாதுகாப்பாகவே இயங்கி வந்திருக்கின்றன.

மலேசியாவுடன் தொடர்புடைய ஒரு விமானம் இந்த ஆண்டு காணாமல் போவது இது மூன்றாவது முறையாகும்.

(மற்றொரு செய்தி 19 ஆம் பக்கம்) (எ)

## தேர்தலுக்கு...

திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்ற போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

காலநிலை அவதான நிலையத்தின் தகவல்களுக்கு அமைய இதுவரை, ஜனாதிபதி தேர்தலுக்கு பாதிப்புகள் ஏற்படவில்லை.

எதிர்வரும் நாட்களில் காலநிலை சீரடையும் என எதிர்பார்ப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

எனினும், தவிர்க்க முடியாத அசாதாரண் நிலை ஏற்படும் பட்சத்தில் ஜனாதிபதியோ, அரசாங்கமோ அதுபற்றி தீர்மானம் மேற்கொள்ளாமல், தேர்தல்கள் ஆணையாளரே நடவடிக்கை எடுப்பார் எனவும் அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டார். (எ)

## நாட்டை பிளவு...

கொள்ளாது,அது அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிரானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறையில் இவ்வாறான தனிநிர்வாக அலகொன்றை முஸ்லிம்களுக்காக ஏற்படுத்துவது, பிரிவினைக்கு வழிவகுக்கும், அதன் காரணமாகவே அரசாங்கம் அதனை ஏற்றுக கொள்ள மறுத்தது, தமிழத் தேசிய கூட்டமைப்பும் மைத்திரிபால சிறிசேனவிற்கு நேரடியாக அல்லது மறைமுகமாக ஆதரவளிக்கலாம், நாட்டை பிரிப்பதற்கான சதித்திட்டத்தின் ஒரு பகுதியாகவே இது இடம்பெறுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## ஏற்பாட்டாள...

மட்டக்களப்பு மாவட்டம் செல்லவுள்ளார்.

கல்லடி சிவானந்தா தேசியப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ள பிரசார கூட்டத்தில் அவர் கலந்து கொள்கின்றார்.

தேர்தல் பிரசார மேடை அமைப்புக்காக சென்றிருந்த எதிரணி ஆதரவாளர்கள் மைதானத்திற்கு முன்பாக நின்று கூட்டம் தொடர்பான பிரசுரங்களை விநியோகம் செய்து கொண்டிருந்த வேளை வாகனங்களில் வந்த குழுவொன்றினால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தாக்குதல் சம்பவத்தின் பின்னர், காயமடைந்த இருவரை தவிர்ந்த மற்றுமொருவர் காணாமல் போயுள்ளார்.

இரண்டு வாகனங்களில் கத்திகள், தடிகள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் வந்த சுமார் 30 பேர் கொண்ட குழுவொன்றே இந்தத் தாக்குதலை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலை நடத்திய நபர்களின் நடமாட்டம் தொடர்ந்தும் அந்த பகுதியில் காணப்பட்டதாகவும், இன்று நடக்கவுள்ள கூட்டத்தில் கலந்துகொள்பவர்களை அச்சுறுத்தும் விதத்தில் அவர்கள் நடமாடித்திரிவதாகவும் ஏற்பாட்டாளர்கள் கூறினர்.

இந்த சம்பவம் தொடர்பில் வாகனங்களின இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களுடன் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், எனினும் பொலிஸாரின் நடவடிக்கைகள் தங்களுக்கு திருப்தியளிப்பதாக இல்லை என்றும் ஐ.தே.க அமைப்பாளர் மாசிலாமணி கூறியுள்ளார். (எ)

## பொது எதிரணி...

வருகைதரவுள்ளனர்.

இதன்படி நாளை 30-ம் திகதி பொது எதிரணியினரின் வடமாகாணத்தில் 3-வது பிரசாரக் கூட்டம் மன்னார் மாவட்டத்தில் காலை நடைபெறவுள்ளது. தொடர்ந்து மதியம் வவுனியா மாவட்டத்திலும், பிற்பகல் யாழ். மாவ ட்டத்திலும் நடைபெறவுள்ளது.

மேலும் பொது எதிரணியினர் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விஜயம் செய்யாத நிலையில், குறித்த மாவட்டங்களில் வரவேற்பு நிகழ்வுகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொது எதிரணி விடுத்துள்ள அறிவித்தலில் சுட்டிக்காட்டியிருக்கின்றது. (எ)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,021 567 1532

## மைத்திரிக்கு ஆத...

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்றைய தினம் கொழும்பில் நடைபெற்றது. இக்குழுக்கூட்டம் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து தீர்மானக்கப்பட்டுள்ளது. மைத்திரிபாலவை ஆதரிப்பது என நேற்றைய தினம் தீர்மானிக்கப்பட்டாலும், நாளை 30-ம் திகதியே கூட்டமைப்பு தமது தீர்மானத்தை அறிவிக்கும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெளிப்படையாக அறிவிக்க கூடாது என்று, கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தமிழ் மக்கள் சுயமாக தீர்மானம் மேற்கொள்ள இடமளிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனை தமிழரசுக்கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என தனித் தனியாக கலந்துரையாடி பொது எதிரணி வேட்பாளருக்கு ஆதரவளிப்பது குறித்து முடிவு எடுக்கப்பட்டதாக தெரியவருகிறது. எனினும் இது குறித்து உறுதிப்படுத்த முடியவில்லை. (எ)

## வடக்கு நோக்கி...

யுடன் கூடிய மழை பெய்யும் என கால நிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

சில பிரதேசங்களில் தற்காலிகமாக கடும் காற்று வீசக் கூடும் எனவும் அந்த நிலையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் 18 மாவட்டங்களில் தாக்கம் செலுத்தியுள்ள அசாதாரண காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை 10 லட்சத்தை கடந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்பொருட்டு அமைக்கப்பட்டுள்ள 525 நலன்புரி முகாம்களில் 28 ஆயிரத்து 756 குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளதாக மத்திய நிலையத்தின் பிரதி ஊடகப் பணிப்பாளர் சரத் லால் குமார தெரிவித்தார்.

இந்தநிலையில், 11 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் நிலவுவதாக தேசிய கட்டிட ஆய்வுகள் நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதுதவிர, நீர்பாசன திணைக்களத்தின் 73 இல் 64 நீர்த்தேக்கங்கள் நிரம்பிவழிவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பிரதியமைச்சர்...

தப்பட்ட பிரதியமைச்சரை எதிர்வரும் 30-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண கூறினார்.

பிரதியமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகமவை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறு பத்தேகம மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் கடந்த 24-ம் திகதி பிடியாணை ஒன்றைப் பிறப்பித்திருந்தது.

அதன்பின்னர் கடந்த 26-ம் திகதி அதிகாலை அமைச்சர் முத்துஹெட்டிகம கட்டுநாயக்க விமானநிலையத்தின் முக்கிய பிரமுகர்களுக்கான பாதை ஊடாக சிங்கப்பூர் நோக்கி சென்றுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் கூறியிருந்தார்.

நேற்று பகல் 11.15 மணியளவில் அமைச்சர் முத்துஹெட்டிகம சிங்கப்பூரிலிருந்து இலங்கை வந்தபோது சிறப்பு பொலிஸ் குழுவொன்றினால் விமானநிலையத்தில் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கடந்த 17-ம் திகதி காலி, வந்துரம்ப பிரதேசத்தில் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன கலந்துகொள்ளவிருந்த கூட்டமொன்றுக்காக அமைக்கப்பட்டிருந்த மேடையை சேதப்படுத்தியதாக நிஷாந்த முத்துஹெட்டிகம மீது பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காங்கேசன்...

பரீட்சார்த்த சேவையை ஆரம்பித்தது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் அடிப்படையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் இந்த சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தையும் ஊடறுத்து யாழ் தேவி புகையிரதம் காங்கேசன்துறையை அடைந்தது.

இந்த பரீட்சார்த்த சேவையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்து, காங்கேசன்துறை வரை புகையிரதத்தில் பயணத்தையும் மேற்கொண்டிருந்தார். எதிர் வரும் 2ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் யாழ்தேவி புகையிரத சேவை காங்கேசன் துறைவரை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)


A/L 2015 DAY CLASS
ஆரம்பம் 02.01.2015
காலை 7 மணிக்கு
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
கணக்கீடு R.சுகிர்தன் B.Com | பொருளியல் K.பிரதீபன் | வணிகக்கல்வி வழமையான ஆசிரியர்
BEACON வெலிங்டன் சந்தி யாழ்.நகர்

BEACON வெலிங்டன் சந்தி யாழ்.நகர்
தனித்துவமான ஆசிரியர் குழாமின் வழிகாட்டலில்
A/L 2017 தொழில்நுட்பப் பிரிவு
(புதிய பிரிவு)
ஆரம்பம்:-03.01.2015 காலை 9.00 மணி
(சி-9642)

NEC இரு இடத்திலும் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி! மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
A/L 2017 கலை, வர்த்தக, கணித, உயிரியல், தொழில்நுட்ப பிரிவுகள்
ஆரம்பம்: 03.01.2015 சனி காலை 9.00 மணி
புதிய அனுமதிகளை இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்.
(சி-9595)

BEACON வெலிங்டன் சந்தி யாழ்.நகர்
A/L 2017 கலை-வணிகவியல் தொழில்நுட்பப் பிரிவுகள்
ஆரம்பம்:-03.01.2015 காலை 9.00 மணி
சிறப்பான ஆசிரியர் குழாமுடன் ஆரம்பமாகும்
(பிரிவுகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன)

2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

Digital
விஷேட கட்டண சலுகைகள்
இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101
(C-9648)

NEC
இரு இடத்திலும்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L DAY CLASS
கலை, வர்த்தகப் பிரிவு ஆரம்பம்
31.12.2014
புதன் 8.00 மணி
T.P:- 0774696695

வடக்கில் வர்த்தகப் பிரிவை மாத்திரம் கொண்ட ஒரே ஒரு தனித்துவமான கல்வி நிறுவனம்
ECONOMICS HALL
உயர்தரமாக்குவதே எம் உயர்தரக் கற்கை
A/L 2017
ஆரம்பம்:-03.01.2015
காலை -8.00 மணி
இல.108, நாவலர் ரோட், யாழ்ப்பாணம்.
(ரெயில்வே ரக் அருகில்)
(8889)

சதா பொன்ஸ்-அல்வாய்
A/L 2017 கலை வர்த்தகப் பிரிவுகள்
A/L மீட்டல் கலை வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்
01.01.2015 காலை 8.00 மணிக்கு

யாழ் நகரில்
PEARSON
UNIVERSITY OF WOLVERHAMPTON
London South Bank University
edexcel
HNDs IN...



- Quantity Surveying
- Civil Engineering
- Biomedical Science
- Business Management
- Computing

சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்

Leading to BSc (Hons) / BA (Hons) / B Eng (Hons) from more than 105 Universities in UK, USA, Australia & Canada etc...

- உயர் கல்வித் துறையில் 15 வருட சிறந்த அனுபவத்துடன் இலங்கையின் முதற் தர உயர்கல்வி நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டுள்ள BCAS CAMPUS இன் யாழ் வளாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HND) தொடர்வதற்கான வாய்ப்பு
- மேலுள்ள துறைகளில் HND ஐ நிறைவு செய்யும் மாணவர்கள் இலங்கையில் அல்லது 105 க்கு மேற்பட்ட பிரித்தானிய அமெரிக்க, அவுஸ்ரேலிய மற்றும் கனடா போன்ற நாடுகளின் தலை சிறந்த பல்கலைக்கழகங்களில் தமது பட்டப்படிப்பின் இறுதியாண்டினை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு
- கடந்த 15 வருடங்களில் HND உயர்கல்வி வழிமுறையூடாக (Pathway) சர்வதேச பட்டப்படிப்புகளை பூர்த்தி செய்து இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உயர் தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொண்ட ஆயிரக்கணக்கான மாணவர்களைப் போன்று நீங்களும் வெற்றியாளர் ஆகலாம்.

BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES
16, Point Pedro Road, Jaffna.
Tel : 021 221 9910
Hotline : 077 710 2131
15 YEARS
www.bcas.lk
(சி-9647)
Colombo | Mt.Lavinia | Kandy | Batticaloa | Kurunegala | Ampara | Jaffna | Qatar

NEW SCIENCE WORLD VICTORY MUST
NEW SCIENCE WORLD
Navalar Road-Brown Road Junction
web: www.physicsocean.com E-mail: info@physicsocean.com
Hotline: 077 336 4055
G.C.E.(A/L) 2015
DAY CLASSES
எமது தனித்துவ ஆசிரியர்கள்
பௌதிகவியல் - திரு. R. குகன், திரு. R. குமரன்
இரசாயனவியல் - திரு. டயஸ், திரு. T. சிவகுமார்
உயிரியல் - திரு. S. பொன்திவாகரன், திரு. V. உமாசங்கர் (கொழும்பு முன்னணி உயிரியல் ஆசிரியர்)
வகுப்புக்கள் கடை பெறுகின்றன
(சி-9637)

மாபெரும் புத்தக கண்காட்சியும் மலிவு விற்பனையும்
பாலர் முதல் பாடசாலை உயர்வகுப்பு வரை உள்ள மாணவர்களின் கல்வித் தேவையை பூர்த்தி செய்ய.
2015 ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டங்கள் உள்ள டங்கலாக்கப்பட்ட பாடப்புத்தகங்கள், பயிற்சிப்புத்தகங்கள், மற்றும் அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள், காகி தாதிகள் பொருட்களையும் அனைத்து இந்திய வெளியீடுகளையும் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து புத்தகங்களுக்கும் 20%, பாடசாலை உபகரணங்களுக்கு 10%, அப் பியாசக் கொப்பிகளுக்கு 30 - 40% விசேட விலைக் கழிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
விஞ்ஞான ஊக்கி தரம்-06, தரம்-11க்கு உரியவை. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
காலம்:-29.12.2014 முதல் 15.02.2015 வரை
நேரம்:- காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை
யாழ்.புத்தகசாலை
305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமையில்)
(8840)
தொடர்புகளுக்கு:-0778349507, 0214545552


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.